விலை : 20.00
பக்கங்கள்: இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 வைகாசி 25 திங்கட்கிழமை (08.06.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 171

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

# வடக்கில் போதைப் பொருட்களை கட்டுப்படுத்த ஜனாதிபதி பணிப்பு

## தேசிய போதைப் பொருள் கட்டுப்பாட்டு சபைக்கு உடனடி அறிவிப்பு



(கொழும்பு)

வட பகுதியில் போதைப் பொருள் பாவனை மற்றும் விற்பனையினை கட்டுப்படுத்துவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என தேசிய போதைப் பொருள் கட்டுப்பாட்டு சபைக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறிவித்துள்ளார்.

புங்குடுதீவு பாடசாலை மாணவி சி.வித்தியா பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டு படுகொலை செய்

23ஆம் பக்கம் பார்க்க

## தலை துண்டிக்கப்பட்ட நிலையில் ஆணொருவரின் சடலம் மீட்பு



(மிருசுவில்)

தலை தனியாக துண்டிக்கப்பட்ட நிலையில் ஆணொருவரின் சடலமொன்று நேற்றிரவு ஏ9 வீதியில் மீட்கப்பட்டுள்ளது.

நேற்றிரவு 8.45 மணியளவில் எழுதுமட்டுவாழ்-முகமாலைக்கு இடைப்பட்ட ஏ9 வீதியில் மீட்கப்பட்ட இச் சடலம் சுமார் 45 வயது மதிக்கத்தக்கவருடையது என கூறப்படுகின்றது.

குறித்த சடலத்தின் தலைப்பகுதி வீதியின ஓரத்திலுள்ள கால்வாய்க்கு மேலாக காணப்பட்ட அதேவேளை

23ஆம் பக்கம் பார்க்க

## 20ஆவது திருத்தம் வர்த்தமானியில்-கபே

(கொழும்பு)

தேர்தல் முறைமையில் திருத்தங்களை மேற்கொள்வதற்காக முன்வைக்கப்பட்டுள்ள அரசியலமைப்பின் 20ஆவது திருத்தம் தொடர்பில் இம்முறை நடைபெறும் அமைச்சரவை கூட்டத்தில் இறுதி திருத்தத்தை மேற்கொண்டு வர்த்தமானியில் விரைவாக பிரசுரிக்குமாறு கோருவதாக சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல் பிரசாரத்துக்கான இயக்கம் (கபே) தெரிவித்துள்ளது.


விருப்பு வாக்கு முறைமையினால் ஊழல், மோசடி நிறைந்ததாக இருக்கின்ற இந்நாட்டின் அரசியல் கலாசாரத்தின் மாற்றத்தை உறுதிப்படுத்துகின்ற தேர்தல் முறைமையின் மாற்றத்தை தோல்வியடைய செய்வதற்கு நாடாளுமன்றத்தில் உள்ள ஒரு சிறு குழு முயற்சிக்கின்றது.

தேர்தல் முறைமையில் மாற்ற

23ஆம் பக்கம் பார்க்க

## எழிலன் யாரென்றே எனக்குத் தெரியாது

### அனந்தியின் குற்றச்சாட்டை கனிமொழி நிராகரிப்பு



(சென்னை)

வட மாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரன் முன்வைத்துள்ள குற்றச்சாட்டை, திராவிட முன்னேற்றக் கழகத்தின் நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி நிராகரித்துள்ளார்.

தனது கணவர் எழிலன், இலங்கை இராணுவத்தினரிடம் சரணடைவதற்கு தீர்மானம் எடுக்க முன்

24ஆம் பக்கம் பார்க்க

## ஹிட்லரின் காவல்துறை மூலம் அரச எதிராளிகள் சிறையில்

### முன்னாள் ஜனாதிபதி மகிந்த அறிக்கை

(கொழும்பு)

அமைச்சரவையின் உபகுழுவுக்கு நேரடியாக பொறுப்புக் கூறும் வகையில் அண்மையில் ஏற்படுத்தப்பட்ட கொஸ்டாபோ (ஹிட்லரின் காவல்துறை) தரத்திலான காவல்துறை பிரிவு ஊடாக அரசாங்கம் தனது அரசியல் எதிராளிகளை சிறையில் அடைத்து வருவதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கடந்த ஆட்சிக்காலத்தில் அரச பணத்தை முறைகேடாக பயன்படுத்தியதாக பொய்ப் பிரசாரம் மேற்கொண்டு வரும் தற்போதைய அரசாங்கம் திறைசேரி முறி ஊடாக நாட்டுக்கு 50 பில்லியன் நஷ்டத்தை

24ஆம் பக்கம் பார்க்க

## நீதிமன்ற தாக்குதல்

### 34 சந்தேக நபர்கள் இன்று நீதிமன்றில் ஆஜர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நீதிமன்றம் மீதான தாக்குதல் சம்பவத்தில் கைது செய்யப்பட்ட 34 சந்தேகநபர்கள் 2ஆவது தடவையாக இன்று நீதிமன்றில் ஆஜர் செய்யப்படவுள்ளனர்.

கடந்த 20ஆம் திகதி நீதிமன்ற தாக்குதல் சம்பவத்தில் கைது செய்யப்பட்டவர்கள் 4 பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளனர்.


இவர்களில் சட்டத்திற்கு மாறாக கூட்டம் கூடியமை, கைது செய்யப்பட்டவர்களை வன்முறை மூலம் மீட்க முற்பட்டமை, பொலிஸ் காவல நிலையம் மீது தாக்குதல் நடத்தியமை போன்ற குற்றச்சாட்டுக்கள் பதியப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த சந்தேக

24ஆம் பக்கம் பார்க்க

## இப்படி விசாரித்தால் அனைவரும் கைதாவர்

## ராஜபக்ஷ குடும்பத்தின் குற்றங்களை பட்டியல் இடுகிறார் ஜே.வி.பியின் தலைவர்



(கொழும்பு)

திவிநெகும விசாரணையில் இறுதி வரைக்கும் சென்றால், முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷவே சிக்குவார் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

அதேபோல் அவன்கார்ட் மற்றும் மிக் விமானங்கள் கொள்வனவு தொடர்பான கொடுக்கல் வாங்கல்

24ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# எதிர்க்கட்சிகள் பிளவடைந்துள்ளதால் ஐ.தே.கவின் வெற்றி உறுதி - கிரியல்ல



(கொழும்பு)

எதிர்க்கட்சிகள் துண்டு துண்டாக பிளவடைந்துள்ளதாக அமைச்சர் லக்ஸ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார்.

இதனால் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு சாதகத்தன்மை ஏற்படும்.

ஐக்கிய தேசியக் கட்சி மூன்றில் இரண்டு பெரும்பான்மையை எட்டக் கூடிய அளவிற்கு வெற்றியீட்டுவது உறுதி.

இந்த அரசாங்கம் புதிய அரசாங்கம் என்பதனைப் போன்றே வித்தியாசமானது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் பிரதமர், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் ஜனாதிபதி.

அந்த இருவரும் இணைந்து செயற்படுகின்றார்கள் என்றால் ஊர்களில் இருக்கும் எம்மால் ஏன் இணைந்திருக்க முடியாது.

ஊர்களில் இருக்கும் நாம் பிளவடையக் கூடாது என லக்ஸ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார்.

கண்டி ஹேவாஹெட்ட பிரதேசத்தில் நேற்று அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (செ)

# தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை அதிகரிக்க கோரி மலையகத்தில் பேரணி






(கண்டி)

மலையக தோட்டத்தொழிலாளர்களின் நாளாந்த சம்பளததை அதிகரிக்க வேண்டும் என்று கோரி மலையகத்தில் ஆர்ப்பாட்டப் பேரணிகள் நடத்தப்பட்டுள்ளன.

குறிப்பாக, நுவரெலியா மாவட்டத்தின் பல பகுதிகளிலும் நேற்று பகல் இந்த ஆர்ப்பாட்டங்கள் நடந்துள்ளன.

தொழிலாளர் தேசிய சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தப் போராட்டங்களில் தங்களின் நாளாந்த சம்பளம் ஆயிரம் ரூபாயாக அதிகரிக்கப்பட வேண்டும் என்று தொழிலாளர்கள் கோரியுள்ளனர்.

தேயிலைத் தோட்டங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு தற்போது நாளொன்றுக்கு அடிப்படை சம்பளம் 450 ரூபாய் அடங்கலாக 620 ரூபாய் வழங்கப்படுகின்றது.

இந்த அடிப்படை சம்பளம் 800 ரூபாயாக அதிகரிக்கப்பட்டு, நாளாந்த சம்பளம் 1000 ரூபாயாக உயர்த்தப்பட வேண்டும் என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கம்பனிகளிடம் கோருகின்றனர்.

சம்பள அதிகரிப்பு தொடர்பாக தொழிற்சங்கங்களுக்கும் தோட்ட முதலாளிமார் சம்மேளனத்திற்கும் இடையில் ஏற்கெனவே நடந்துள்ள பேச்சுவார்த்தைகள் தோல்வியில் முடிவடைந்துள்ளன.


தேயிலை உற்பத்தியில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி மற்றும் கம்பனிகளுக்கு ஏற்பட்டுள்ள நஷ்டம் போன்ற காரணங்களை முதலாளிமார் சம்மேளனத்தினர் முன்வைத்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

ஆனால், தங்களால் முன்வைக்கப்பட்டுள்ள சம்பள அதிகரிப்பு கோரிக்கையானது நியாயமானது என்று ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட தோட்டத் தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

தேசிய தொழிலாளர் சங்கத்தின் தலைவரும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சருமான பழனி திகாம்பரம், மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் கல்வி இராஜாங்க அமைச்சருமான வீ.ராதாகிருஷ்ணன் உள்ளிட்ட பல அரசியல்வாதிகளும் தொழிற்சங்கவாதிகளும் தொழிலாளர்களும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர். (செ)

# புகையிரதத்தில் மோதுண்ட பெண் உடல் துண்டாக சிதைந்து பலி

## மற்றுமொரு யுவதி படுகாயம்



(களுவங்கேணி)

மட்டக்களப்பு களுவங்கேணி புகையிரதக் கடவையில் ஏற்பட்ட விபத்தில் புகையிரதத்தினால் அடித்துச் செல்லப்பட்ட யுவதியொருவர் துண்டுதுண்டாக உடல்சிதைவடைந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

நேற்று மாலை 4.30 மணியளவில் களுவங்கேணி புகையிரதக் கடவையில் நடந்த இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த இரண்டு யுவதிகள் விபத்துக்குள்ளாகியுள்ளனர்.

இவ்விபத்தில் ஒரு யுவதி சம்பவ இடத்திலேயே உடல்சிதைவடைந்து பலியாகியுள்ளதுடன் மற்றுமொரு யுவதி புகையிரதத்தில் மோதுண்டு தூக்கி வீசப்பட்டநிலையில் செங்கலடி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

களுவன்கேணி பிள்ளையாரடி வீதியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை கிசாந்தினி (21) என்பவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

படுகாயமடைந்தவர் களுவன்கேணியை சேர்ந்த பிரியதர்சினி என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ)

# மக்கள் வழங்கிய ஆணையை அழிக்க இடமளியோம் - ஜே.வி.பி

(கொழும்பு)

ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்களுக்கு தண்டனை வழங்குவது மாத்திரமல்லாது குற்றச் செயலகளில் ஈடுபட்டவர்கள் குறித்தும் விசாரணை நடத்த வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

லலித், குகன், ஊடகவியலாளர் பிரகீத் ஹெக்நேலியகொட ஆகியோர் காணாமல் போக செய்யப்பட்டமை, ஊடகவியலாளர்கள் கீத் நொயார், உபாலி தென்னகோன் ஆகியோர் மீது தாக்குதல் நடத்தப்பட்டமை போன்ற பெரும்பாலான விசாரணைகள் கீழடிப்புச் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள் ளார்.

பத்தரமுல்லை பெலவத்தையில உள்ள மக்கள் விடுதலை முன்னணியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

இந்த விசாரணைகள் தொடர்பில் தற்போது காணப்படும் நிலைமையை மாற்றி முன்னெடுத்துச் செல்வது பற்றி பொலிஸ் மா அதிபர் கவனம் செலுத்த வேண்டும்.

ஊழல், மோசடிகள் தொடர்பாக விசாரணை நடத்தப்படுவதில்லை என்பதற்காக முன்னர் நாடாளுமன்றத்தில் குரல் எழுப்பப்பட்டது.

தற்போது நாடாளுமன்றத்தில் படுத்துக்கொண்டு ஊழல், மோசடிகள் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பவதை எதிர்த்து குரல் கொடுத்து வருகின்றனர்.

இந்த நெருக்கடி நிலைமையை கவனத்தில் கொள்வதை ஜனாதிபதியும் பிரதமரும் தாமதித்து வந்தால், அவர்கள் அழித்து கொ[illegible]வது தமது ஆட்சி அதிகாரத்தை என்பதை புரிந்து கொள்ளவேண்டும்.

மக்கள் விடுதலை முன்னணி இந்த நிலைமைக்கு எதிராகவும் சூழ்ச்சியாளர்களின் தந்திரங்கள் வெற்றி பெற இடமளிக்காது மக்களை அணிதிரட்டுவோம். இதன் மூலமே மக்களுக்கு வெற்றியை பெற்றுக்கொடுக்க முடியும்.

ஜனாதிபதித் தேர்தலில் வழங்கப்பட்ட மக்கள் ஆணையை அழிக்க நாம் இடமளிக்க மாட்டோம். ஜனாதிபதியும் பிரதமரும் இந்த விடயம் சம்பந்தமாக செயற்படும் விதத்தை நாங்கள் உன்னிப்பாக அவதானித்து வருகின்றோம் என அனுரகுமார திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார். (செ)

# 3 சந்தேக நபர்களுக்கு 15-ம் திகதிவரை மறியல்

(யாழ்ப்பாணம்)

அல்வாய் வடக்கு பகுதியில் கடந்த 4 ஆம் திகதி குடும்பத் தகராறில் ஒரு வரை தாக்கி காயப் படுத்திய சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட 3 சந்தேக நபர்களையும் எதிர்வரும் 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கு மாறு பருத்தித்துறை நீதவான் நீதி மன்ற நீதிபதி மா.கணேசராஜா உத்தர விட்டுள்ளார்.

அல்வாய் வடக்கு பகுதியில் கடந்த 4 ஆம் திகதி நள்ளிரவு இரண்டு குடும் பத்திற்கு இடையே இடம்பெற்ற வாய்த் தர்க்கத்தில் வீட்டுக்குள் புகுந்து சதீஸ் குமார் என்பவருடைய முகத்தில் பொல்லுகளால் 3 நபர்கள் தாக்கி யுள்ளனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தே க தின் பேரில் கடந்த 5 ஆம் திகதி 3 சந்தேக நபர்களை பருத்தித்துறை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நேற்றைய தினம் நீதிபதியின் வாசஸ் தலத்தில் சந்தேக நபர்களை முற்படுத்திய போது நீதிபதி மேற்கண்டவாறு உத்தரவிட்டுள்ளார்.

படுகாயமடைந்த நபர் மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-9)


## வேலையாட்கள் தேவை

லைடன் புடைவை நிலையத்திற்கு விற்பனையில் அனுபவம் உள்ள பெண் பிள்ளைகள் தேவை. இரு வெற்றிடங்கள் உள்ளன. (பழக விரும்புபவர்களும் விரும்பத்தக்கது)

லைடன் புடைவை நிலையம்,
410, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(C-11203)


# கட்சி உறுப்பினர்களுக்கு மைத்திரி எச்சரிக்கை

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கிய உறுப்பினர்களுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நபர்களைப் பற்றி சிந்திக்காது கட்சியை பற்றி சிந்தித்து கடமையாற்ற வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் அண்மையில் ஜனாதிபதியை சந்தித்த போது இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கட்சியின் அபிவிருத்தியை முதனிலைப்படுத்தி அனைவரும் செயற்பட வேண்டும்.

தனிப்பட்ட நிகழ்ச்சி நிரல்களின் அடிப்படையில் செயற்படக் கூடாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கட்சியின் முக்கியத்துவத்தை புரிந்து கொள்ளாமல் செயற்பட்டால் கட்சி பதவிகளில் மாற்றம் செய்ய நேரிடும் என ஜனாதிபதி எச்சரித்துள்ளார். (செ)

# மண்டைதீவில் இன்று மகா குடமுழுக்கு

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு பூமாவடி பூம்புகார் அருள்மிகு ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலய மகா குடமுழுக்கு இன்று 08 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

காலை 6 மணிக்கு விநாயகர் வழிபாட்டுடன் ஆரம்பமாகி காலை 7 மணிக்கு தூபி அபிசேகம் இடம்பெற்று தொடர்ந்து கண்ணகியம்மனுக்கு மகா குடமுழுக்கு இடம்பெறும்.

இவ் மகா குடமுழுக்கை ஆலய பிரதம குரு சபா.விஜயகுமாரன் நடத்திவைப்பார். (செ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமெரிக்காவில் டெனீஸ்வரன்

அமெரிக்கஅரசின் அழைப்பில் வடக்கு மாகாண மீன்பிடி மற்றும் போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் நேற்று முன்தினம் அமெரிக்கா பயணமானார். கரையோர பாதுகாப்புமற்றும்கடல் மாசுறுதல்தொடர்பான 21நாட்கள் கொண்ட செயலமர்விற்கு இலங்கையில் இருந்து அமெரிக்க அரசின் அழைப்பின் பேரில் அவர்அமெரிக்காசென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-9)

## 20வது திருத்தம் இல்லையெனில் நாடாளுமன்றைக் கலைக்கவும்

### ஜே.வி.பி.கோரிக்கை

**20ஆம் திருத்தச்சட்டம் சமர்ப்பிக்க முடியவில்லை என்றால் நாடாளுமன்றத்தை கலைக்குமாறு மக்கள் விடுதலை முன்னணி,ஜனாதிபதியிடம் கேட்டுக்கொண்டுள்ளது.**



மக்கள் சக்தியை பாதுகாப்பதற்காக தேர்தல் ஒன்றை நடத்துமாறு மக்கள் விடுதலைமுன்னணிஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளது.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க மற்றும பிரதான செயலாளர் ரில்வின் சில்வா, ஜனாதிபதியை சந்தித்து சமகால அரசியல்நிலைமை தொடர்பில் கலந்துரையாடியுள்ளனர்.

இந்த கலந்துரையாடலின் போதே நாடாளுமன்றம் கலைப்பது தொடர்பில் அவதானம் செலுத்தியதாக மக்கள் விடுதலை முன்னணி பிரதான செயலாளர ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.(இ)


# அதிரடிச் சலுகை

### வலம்புரியின் அதிரடிச் சலுகை

- மரண அறிவித்தல்கள்
- கண்ணீர் அஞ்சலிகள்
- நினைவு கூருதல்

**ஆகியவற்றுக்கு 01.06.2015 முதல்**

மேலதிக விபரங்களுக்கு இன்றே வலம்புரி காரியாலயத்தை நாடுங்கள்...

**தொடர்புகளுக்கு :-**
**021 221 7603,**
**021 321 0815**
**021 567 1543**

Valampuriijaffna@gmail.com



01.06.2015 முதல் உங்கள் வலம்புரியில்

# செல்ஃ(f)பி

சிறந்த செல்ஃ(f)பி அனுப்புபவர்களுக்கு வாராந்தம் பரிசில்கள் உண்டு.

நீங்கள் அனுப்ப வேண்டிய மின்னஞ்சல்
photosofvalampurii@gmail.com



## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா:51 செவ் 7இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: BBA, MSC/ அரச தொழில்<br>தொ.இ: B/781 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 58 செவ் 1 ல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/1362 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 13<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BSC/ தனியார் தொழில் PR<br>தொ.இ: B/784 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 19 செவ் 12இல்<br>உயரம்: 5'4".<br>தகைமை/தொழில்: A/L/ வங்கியாளர்<br>தொ.இ: G/1365 |
| பிறப்பு: 1981 RC<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L/ முகாமையாளர் டோகா<br>தொ.இ: B/787 | பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 44 செவ் 7இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: BA/ அரச தொழில்<br>தொ.இ: G/1368 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 72 சூரிசெவ் 8இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L/ தனியார் தொழில்<br>தொ.இ: B/793 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 48<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: O/L<br>தொ.இ: G/1376 |

# கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )



## பதவி வெற்றிடம்

கிளிநொச்சி ஆனந்தபுரத்தில் உள்ள வலம்புரியின் உப அலுவலகத்தில் பணியாற்றுவதற்காக பின்வரும் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு இடம்பெறவுள்ளது.

- அலுவலக உத்தியோகத்தர் (ஆண்)
- கணனி இயக்குநர் (ஆண்)
- அலுவலகப் பணியாளர் (ஆண்)

**தகைமை**

- கல்வித் தகைமை: க.பொ.த உயர்தரத்தில் சித்தி
- வயது: 25-35
- உப அலுவலகம் அமைந்துள்ள இடத்திற்கு அண்மையாக இருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

பொருத்தமானவர்கள் தங்கள் சுயவிபரம் அடங்கிய விண்ணப்பத்தை விண்ணப்பிக்கும் பதவியை கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிட்டு

**பிரதம ஆசிரியர்,**
**வலம்புரி**
**இல.03, 2ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**

எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

-பொது முகாமையாளர்


# இராசி பலன்

08.06.2015
(வைகாசி 25, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 5.54 மணிக்கு
சஷ்டி பிற்பகல் 1.27 மணிவரை
அவிட்டம் பிற்பகல் 4.12 மணிவரை
இராகுகாலம் 7.22-8.52 மணிவரை
சுபநேரம் 11.52-1.22 மணிவரை

வளவன்

**மீனம்:** உறவினர்களின் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம், முத்த சகோதரர்கள் உங்களின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம்.

**மேடம்:** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களை தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசலாம், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.

**இடபம்:** தொழிலில் ஏற்பட்ட குழப்பங்கள் அகலும், சுபநிகழ்வுகளில் கலந்து கொள்வதற்கான வாய்ப்புண்டு, பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, உற்சாகமான நாள்.

**மிதுனம்:** தடைப்பட்ட காரியங்கள் தானாக நடைபெறுவது கண்டு ஆச்சரியப்படுவீர்கள், எதிர்பாராத பயணங்கள் இடம்பெறலாம், தந்தை வழி உறவினரால் நன்மையுண்டு, வியாபாரத்தில் ஏற்பட்ட இழப்புக்களை ஈடுசெய்ய முற்படுவீர்கள்.

**கும்பம்:** புதிய பொறுப்புக்களால் வேலைச்சுமை அதிகரிக்கலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், நேற்றைய பிரச்சினையொன்று இன்று நல்ல முடிவுக்கு வரும், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் வெற்றிதரும்.

**கடகம்:** ஆரோக்கியத்தில் கவனம் எடுக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும், கூட்டாளிகளை அனுசரித்துச் செல்வதால் விரயங்களைக் குறைக்கலாம், வேலைச்சுமை கூடும் நாள், தேவையற்ற சஞ்சலங்கள் ஏற்படலாம்.

**மகரம்:** வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும், பிரியமான சிலரின் சந்திப்பு இடம் பெறலாம், பக்குவமாகப் பேசி காரியங்களை சாதித்துக் கொள்வீர்கள், எதிர்கால நலனில் கூடிய அக்கறை காட்டுவீர்கள், அதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும்.

**சிம்மம்:** வெளியூர் பயணங்களால் சில விருப்பங்கள் நிறைவேறலாம், குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், தொலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சிதரும் வகையில் அமையும்.

**தனுசு:** குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், நீண்டநாளைய பிணக்குகளில் திசைதிருப்பம் ஏற்படலாம், செய்தொழில் மேன்மையுண்டு, காரிய அனுகூலமுண்டு.

**விருச்சிகம்:** சந்தித்த நபர்களால் சந்தோசமான தகவலொன்று வந்து சேரலாம், உறவினர் வருகையுண்டு, எடுத்த காரியத்தை முடிக்க அதிக பிரயாசை காட்டுவீர்கள், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும்.

**துலாம்:** பூர்வீகச் சொத்துக்களால் நன்மைகள் வந்து சேரலாம், நல்லவர்களின் தொடர்புகள் அதிகரிக்கும், வீட்டை அழகுபடுத்தும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள், பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**கன்னி:** குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும் நாள், தேகநலனில் இருந்த பாதிப்புக்கள் குறையும், செய்தொழிலில் சிறப்புகள் வந்து சேரும் நாள், காரிய அனுகூலமுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவறை ஒப்புக் கொள்ளாமல் இருப்பது பெரிய தவறு

## தொழில் ரகசியம்

சுடச்சுட நாம் சாப்பிட்ட உடனடி உணவு இன்று இந்தியாவில் சூடான விவகாரத்தில் சிக்கியிருக்கிறது. 'மேகி' நூல்டீஸ்ஸில் அளவிற்கு அதிகமாக மோனோசோடியம் குளுாடமேட் மற்றும் லெட் (காரீயம்) இருப்பதாக ஆரம்பித்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் இந்தியா முழுவதும் சூறாவளியாக உருவெடுத்து கடைகளில் கரையேறி மக்கள் மனங்களில் மேகி பற்றிய பலத்த சேதத்தை உண்டாக்கியிருக்கிறது.

பல மாநிலங்கள் மேகி விற்பனைக்குத் தடை விதித்திருக்கிறது. பல கடைகள் மேகியை போகி பண்டிகைக்கு குப்பையில் போட்டு எரிப்பதைப் போல் தூக்கி எறிந்து விட்டன. இச்செய்தி காலை உணவு மாதிரி தினமும் ஊடகங்களில் பரிமாறப்படுகிறது.

மேகிக்கு ஏற்பட்ட நிலை சாதாரண பிராண்டிற்கு ஏற்பட்டால் கதை கந்தலாகியிருக்கும். இது போன்ற நெருக்கடியில் பிராண்ட் என்ன செய்வது? பிராண்ட் சிக்கலை எப்படி சமாளிப்பது? எப்படி மீள்வது? நெருக்கடியில் சிக்கி மாண்ட, மீண்ட பிராண்டுகளிடமிருந்து பாடம் பயில்வோம் வாருங்கள். ஆறு 'A'க்கள் கொண்ட பாடம். ஜஸ்ட் டூ மினிட்ஸ் தான்!

**அலர்ட்டாக இருங்கள (Alert)**

வருமுன் காப்பது மட்டுமல்ல, உஷாராய் இருப்பதும் விவேகம். நெருக்கடி தாக்கும் முன்பு அதை சமாளிக்கும் செயல்களை தொடங்க வேண்டும். நெருக்கடி சுழற்றியடிக்கும்போது என்ன செய்வது ஏது செய்வது என்று தெரியாமல் விழி பிதுங்கிவிடும்.

அதனால் நெருக்கடி எந்த ரூபத்தில் எல்லாம் வரலாம் என்று சிந்தித்து அச்சமயத்தில் என்ன செய்வது, எப்படி சமாளிப்பது போன்ற திட்டங்கள் வகுக்கப்படவேண்டும். சிக்கல்களை திறம்பட சமாளிக்கும் (கிரைசிஸ் மனேஜ்மெண்ட்) நிர்வாகக் குழு உருவாக்கப்படவேண்டும். ஒவ்வொருவரும் ஊடகத்திற்கு பேட்டி கொடுக்காமல் யார், எப்படி, என்ன பேசுவது என்பது முன்னமேயே தீர்மானிக்கப்படவேண்டும்

**ஆராயுங்கள (Analyze)?**

நம்மைவிட நம் பிராண்டைப் பற்றி யாருக்கு தெரியும். அதை சதா சர்வ காலமும் கண்காணிப்பது முககியம். சந்தையில் என்ன பேச்சு அடிபடுகிறது, மக்கள் மனதில் நம் பிராண்ட் எவ்வாறு இருக்கிறது, ஊடகங்கள் நம் பிராண்டைப் பற்றி என்ன நினைக்கிறது போன்ற விடயங்களை 24X7 கண்காணிக்க வேண்டும். 'ஃபேஸ்புக்', 'ட்விட்டர்' போன்றவற்றில் நம் பிராண்டைப் பற்றி என்ன சொல்கிறார்கள் என்று ஆராய அலுவலகத்தில் ஒரு தனியாக ஒருவரை நியமித்தாலும் தப்பில்லை.

பிரச்சினை பிராண்டின் ஆதார நிலையையே அசைக்கும் போது தான் பிராண்ட் ஆட்டம் காணத் தொடங்குகிறது. சில மாதங்கள் முன் 'மெக்டானல்ட்ஸ்'சிலிருந்து ஒரு தெருச் சிறுவன் வெளியேற்றப்பட்டது பெரும் பரபரப்பை உருவாக்கியது. ஆனால் அது சில நாட்களிலேயே மறைந்தும் விட்டது. காரணம், மெக்டானல்ட்ஸ் என்பது சாப்பிடும் இடம். அதன் ஆதார




நிலை வேகமான, சுவையான சாப்பாடு. அந்த அடிவயிற்றில் கை வைக்காத நெருக்கடி பிராண்டை ஆட்டம் காண வைக்காது.

**ஒப்புக்கொள்ளுங்கள் (Acknowledge)?**

நெருக்கடியில் இருக்கும் பிராண டுகள் செய்யும் பெரிய தவறு, தன் தவறை ஒப்புக் கொள்ளாமல் இருப்பது. தவறு இருப்பின் முதல் காரியமாய் ஒப்புக்கொள்ளுங்கள். இல்லை என்று சமாளிக்காதீர்கள். நொண்டிச் சாக்கு சொல்லிக் கொண்டிருக்காதீர்கள். குறைக்கான காரணங்களை ஆராய்கிறோம், நிவர்த்தி செய்யத் தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம்' என்று உறுதிபடக் கூறுங்கள். நீங்களே கூறும்போது செய்தி உங்கள் கட்டுப்பாட்டிலிருக்கும். இல்லையென்றால் வருவோர் போவோரெல்லாம் செய்திக்கு கண்மூக்கு வைத்து சின்ன நெருக்கடி வளர்ந்து பிராண்டையே சின்னாபின்னமாக்கிவிடும்.

'ஏர் ஏசியா' விமானம் நடுவானில் காணாமல் போனபோது கம்பனியின் தலைமைச் செயல் அதிகாரியே (சிஇஓ) அதை உலகிற்கு தன் ட்விட்டர் மெசேஜ் மூலம் தெரியப்படுத்தி உடனுக்குடன் விடயங்களை ஊடகங்களுக்கு தந்து வந்தார். இதனால் பிராண்டிற்கு எந்த பெரிய பாதிப்பும் ஏற்படாமல் தடுக்க முடிந்தது.

**தெளிவாக பதிலளியுங்கள Answer)**

நெருக்கடி ஏற்பட்டால் ஆயிரம் சோதனை வரும். ஆளுக்கொரு கேள்வி கேட்பார்கள். பொறுமையாக பதிலளிக்கவேண்டும். எழும் ஒவ்வொரு கேள்விக்கில்லை என்றாலும் முடிந்தவரை பதிலளிக்க வேண்டும். அப்பொழுது தான் கம்பனி உண்மையிலேயே கவலைப்படுகிறது, தேவையான செயல்களை செய்கிறது என்ற நம்பிக்கை மக்களுக்கு ஏற்படும்.

நெருக்கடியில் சிக்கியிருக்கும் போது நாமே நம் பிராண்டைப் பற்றி நல்ல விடயங்கள் பேசுவதை விட மற்றவர்களை விட்டு நம் பிராண்டைப் பற்றி கூற வைப்பது பலன் தரும்.

**வேகமாய் செயல்படுங்கள (Alacrity)?**

நுளம்புக்கடி என்றால் உடனே கடித்த இடத்தை அடிக்கிறோம். நெருக்கடி என்றால் நம் பதில் நடவடிக்கைகளில் போர்கால வேகம் தேவை. ஆடி அசைந்து ஆற அமர அசமஞ்சமாய் அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் சுறுசுறுப்போடு செயல்படவேண்டும். 'தாஜ் மஹால்' ஹோட்டலை தீவிரவாதிகள் தாக்கியபோது தாஜ் நிறுவனம் உடனுக்குடன் ஹோட்டலிலிருந்த விருந்தாளிகளை காப்பாற்றி வெளியேற்றியது. அதோடு தாக்குதல் நடைபெற்ற எழுபது மணி நேரமும் தங்கள் வெப்சைட்டில் உடனுக்குடன் நிலவரத்தை பதிவேற்றம் செய்துகொண்டே இருந்தது. அதனாலேயே அந்த இமாலய நெருக்கடியிலிருந்து தாஜ் மஹால் ஹோட்டல் மீண்டு இன்று புதுப்பொலிவுடன் பட்டொளி வீசி பறக்க முடிகிறது!

**நெருக்கடிக்குப் பின்னும் செயல்படுங்கள (Aftermath)**

நெருக்கடிப் புயல் ஓய்ந்து செய்தி மழை விட்டுவிட்டது என்பதற்காக குடையை மடக்கி வைத்து விட்டு காது குடைய உட்காராதீர்கள். நெருக்கடியால் பிராண்டிற்கு ஏற்பட்ட இழப்பு எத்தகையது என்று ஆராயுங்கள். விற்பனை குறைந்ததா என்று மட்டும் பார்க்காமல் பிராண்டின் நற்பெயருக்கு எத்தகைய குந்தகம் விளைந்திருக்கிறது என்று வாடிக்கையாளரிடம் ஆய்வு செய்யுங்கள்.

செய்தி சேகரிப்பு குழு ஒன்றை ஏற்படுத்தி நெருக்கடி எதனால் ஏற்பட்டது, எவ்வாறு வளர்ந்தது, மீண்டும் நடக்காமல் இருக்க என்ன செய்வது போன்ற விடயங்களை சேகரியுங்கள். இக்குழுவில் கம்பனி ஆட்களை மட்டும் சேர்க்காமல் தேர்ந்த நிபுணர்களை சேர்த்துக்கொள்ளுங்கள். இப்படி செய்வது மக்கள் மனதில் புதிய நம்பிக்கையை ஏற்படுத்தும். உங்களையும் உங்கள் பிராண்டையும் மன்னிக்கக்கூட மக்கள் தயாராய் இருப்பார்கள்.

கெட்ட செய்தியைச் சொல்வதா என்று ஊடகங்களும் அமங்கல செய்தியை படிப்பதா என்று மக்களும் வருதப்பட்ட காலம் ஒன்று உண்டு. இன்று கெட்ட செய்தி கிடைக்காதா என்று இருவருமே காத்திருக்கின்றனர். நாம் தான் உஷாராய் இருக்கவேண்டும். பிர்ராண்ட் இரண்டுபட்டால் ஊர் கூத்தாடிகளுக்கு கொண்டாட்டம். கொஞ்சம் அசந்தால் பிராண்டை மென்று தீர்த்து விடுவார்கள். ஊர் காரரர் போதைக்கு ஊறுகாய் ஆகாமல் பார்த்து கொள்வது அவசியம்!

நெருக்கடி ஒவ்வொரு தெருக் கோடியிலும் காத்திருக்கிறது. போட்டி பெருக்கெடுத்து ஓடும், ஊடகம் நெருக்கித் தள்ளும் இன்றைய மார்க்கெட்டிங் உலகில் அசால்ட்டாய் இருந்தால் அல்பாயுசு. ஆறு 'A' கொண்டு உஷாராய் இருப்பதே ஆயுள் காப்பீடு!

## வெற்றிதரும் 5 மாற்றியோசி மந்திரங்கள்




தொழில்முனைவோராக முத்திரை பதித்த முன்னோடிகள் எல்லாருமே நம்மை போன்றவர்கள் தான். ஆனால், அவர்களின் அணுகு முறையில் தான் வேறுபாடு இருக்கிறது. அந்த அணுகுமுறைகளில் முக்கியமானதாக தொழில் வல்லுநர்கள் அடையாளம் காட்டுவது மேற்கண்ட இவற்றைதான்.

**1.தொடர் முதலீடு:** தீவிர தொழில் முனைவோர் தொடர்ந்து முதலீட்டிற்கான வாய்ப்புகளை தேடிக்கொண டிருக்கின்றனர். அவர்கள் எதையும் முடிவாக கருதுவதில்லை. அவர்கள் சம்பாதிப்பதை விட குறைவாக செலவு செய்து, இலாபத்தை மறு முதலீடு செய்கின்றனர்.

**2.பிரச்னையில் தீர்வுகள:** தொழில்முனைவோர் பிரச்சினைகளைக் கண்டு ஒடுங்கிப்போவதில்லை. அஞ்சுவதும் இல்லை. தடைகள் தாண்டுவதற்கு என்பதே அவர்களின் எண்ணமாக இருக்கிறது. எனவே பிரச்சினைகள் வரும்போது அவற்றை அவர்கள் வாய்ப்புகளாகவே பார்க்கின்றனர். அவர்கள் எப்போதுமே முன்னேற்றத்திற்கான தீர்வுகளை தேடிக் கொண்டிருக்கின்றனர்.

**3.சுயதிறன் வளர்ப்பு:** தொழில் முனைவோர் எப்போதும் தங்கள் திறனில் முதலீடு செய்து அதை மேம்படுத்திக்கொள்வதில் ஆர்வம் காட்டுகின்றனர்.

**4.சொத்து மதிப்பு :** தொழில் முனைவோர் தங்கள் நிறுவனத்தின் உரிமையை காத்து, அதன் மதிப்பை உயர்த்தும் வகையில், எதிர்கால நோக்கில் நீண்டகால முதலீடு செய்கின்றனர்.

**5.பலத்தில் கவனம்:** வெற்றிகரமான தொழில் முனைவோர் தங்கள் பலம் மற்றும் பலவீனங்களை அறிந்திருக்கின்றனர். தங்கள் பலத்தில் கவனம் செலுத்தி பலவீனமான விடயங்களை உரியவர்களிடம் ஒப்படைக்கின்றனர்.

## வர்த்தக உலகம்

ஆர்.எஸ்.கே.முருகதாஸ்

# பங்குச்சந்தை மோசடி; தகவல்கள் சமர்ப்பிப்பு

கடந்தகாலப் பகுதியில் இடம் பெற்றதாகக் கூறப்படும் முறைகேடுகள் தொடர்பான சகல தகவல்களையும், பிணையங்கள் மற்றும் பங்குப்பரிவர்த்தனை ஆணைக் குழுவிடம் சமர்ப்பித்துள்ளதாக கொழும்பு பங்குச் சந்தையின் பிரதம நிறைவேற்றதிகாரி ரஜீவ பண்டாரநாயக்க குறிப்பிட்டார்.

கொழும்பில் கடந்த வாரம் நடைபெற்ற நிகழ்வொன்றின் போதே அவர் இந்த விடயத்தைக் கூறினார்.

கொழும்பு பங்குச் சந்தையின் 2014-ம் ஆண்டிற்கான அறிக்கை கடந்த வாரம் வெளியிடப்பட்டது.

கொழும்பு பங்குச் சந்தையில் இடம்பெற்ற சர்ச்சைக்குரிய கொடுக்கல வாங்கல்கள் குறித்து இதன்போது ஊடகவியலாளர்கள் கேள்வியெழுப்பினர்.

இதுதொடர்பாக பிணையங்கள் மற்றும் பங்குப்பரிவர்த்தனை ஆணைக்குழுவின் வெளியக தொடர்பாடல்களுக்கான பணிப்பாளர் துஷார ஜயரத்னவிடம் கேட்டபோது,

இந்த விடயங்கள் தொடர்பில் தற்போது முன்னெடுக்கப்படுகின்ற விசாரணைகள் நிறைவடையும் வரை தகவல்களைத் தெரிவிக்க முடியாதென அவர் சுட்டிக்காட்டினார்.

வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் கொழும்பு பங்குச் சந்தையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் முறைகேடுகளுடன் தொடர்புடைய தகவல்கள் இதுவரை பதிவாகவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 7,220.29 | 7,122.73 ⇩ |
| எஸ் & பி 20 சுட்டி | 4,000.66 | 3,963.68 ⇩ |
| விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) | 2,919.949 |

**உயர்வடைந்த பங்குகள்(ரூ.):** சிஎப்ரி(7.70), சிங்கபுத்திர பினான்.(p)(11.00), கலமசு(1240.00), ஈஸ்டன் மேர்சன்ட்(12.10), லங்கா அசோக்(1620.50)

**சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):** எப்எல்சி ஹைட்ரோ பவர்(7.50), புளு டைமன்ட்ஸ்(X)(0.50), கூஜே(54.00), சிஎம் ஹோல்டிங்ஸ்(131.30), களனி வேலி(60.60).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

# விற்பனை வரி குறைப்பு

இறக்குமதி செய்யப்படும் உருளைக்கிழங்கு மற்றும் பெரிய வெங்காயத்திற்கான விசேட விற்பனை வரி நேற்றுமுன்தினம் முதல் குறைக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம், இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோகிராம் உருளைக்கிழங்கிற்கு அறவிடப்பட்ட 55 ரூபா விசேட விற்பனை வரி, 30 ரூபா வரை குறைக்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சு குறிப்பிட்டது.

அத்துடன், பெரிய வெங்காயம் ஒரு கிலோகிராமிற்கு அறவிடப்பட்ட 30 ரூபா விசேட விற்பனை வரி 10 ரூபா வரை குறைக்கப்பட்டுள்ளது.

சந்தையில் உருளைக்கிழங்கு மற்றும் பெரிய வெங்காயம் ஆகியவற்றின் விலைகள் உயர்வடைந்துள்ளமையால், நுகர்வோர் எதிர்நோக்கியுள்ள அசௌகரியங்களைக் கவனத்திற்கொண்டு நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க இந்த தீர்மானத்தை மேற்கொண்டுள்ளார்.

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 133.51 | 135.81 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 202.80 | 209.29 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 147.65 | 153.07 |
| சுவிஸ் பிராங் | 140.81 | 146.19 |
| கனேடிய டொலர் | 105.44 | 109.29 |
| அவுஸ்திரேலிய டொலர் | 101.02 | 105.41 |
| சிங்கப்பூர் டொலர் | 97.87 | 101.38 |
| ஜப்பான் யென் | 1.05 | 1.09 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.09 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 36.45 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டு பொதிசேவை குறித்து யாழில் முறைப்பாடுகள் அதிகரிப்பு

## கடந்த இரண்டு மாதங்களில் 7 முறைப்பாடுகள் பதிவு

(யாழ்ப்பாணம்)

**யாழ்.மாவட்டத்தில் கடந்த இரண்டு மாதங்களில் வெளிநாட்டு பொதி சேவை தொடர்பான 7 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை யின் யாழ்.மாவட்ட இணைப் பதிகாரி த.வசந்தசேகரம் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்தில் வெளிநாட்டு பொதி சேவையை மேற்கொள்ளும் சில நிறுவனங்களில் குறைபாடுகள் காணப்படுவதாக மக்களால் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அந்த வகையில் கடந்த 2 மாதங்களில் 7 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டு அதில் 3 முறைப்பாடுகளுக்கு நட்டஈடு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.மற்றைய முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அனுப்பப்படும் பொதிகள் காலதாமதம் ஆகுதல், சேதமடைதல் மேலதிக பணம் அறவிடுதல் போன்ற முறைப்பாடுகள் எம்மிடம் பதிவு செய்யப்பட்டுள்ளன.

வெளிநாடுகளுக்கு பொதிகளை அனுப்பும் போது நுகர்வோரின் பங்களிப்பு அதிகமாக இருக்க வேண்டும். அவர்கள் மிக கவனத்துடன் செயற்பட வேண்டும் .

பொதிசேவைகளில் குறைபாடுகள் இருப்பின் உரிய ஆதாரங்களுடன் யாழ். மாவட்டச் செயலகத்தில் உள்ள பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையில் முறையிட்டால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# விபத்தில் சிக்கிய குடும்பஸ்தர் சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு வெள்ள முள்ளிவாய்க்கால் பகுதியில் கடந்த 3 ஆம் திகதி தனியார் பேருந்து மோதியதில் படுகாயமடைந்த இளம் குடும்பஸ்தர் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் யாழ்.போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.


பொன்னகர்முள்ளியவளையைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான தர்மராஜா கோபி (வயது-24) என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

இவரது மரணம் தொடர்பாக யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டிருந்தார்.

கடந்த 3 ஆம் திகதி புதுக்குடியிருப்பில் இருந்து முல்லைத்தீவு நோக்கி சென்று கொண்டிருந்த தனியார் பேருந்து வெள்ள முள்ளிவாய்க்கால் பகுதியில் ஆட்டோவில் சென்ற இருவரை மோதியுள்ளது.

இந்நிலையில் படுகாயமடைந்த இருவரும் மாஞ்சோலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தனர்.

இவர்களில் ஒருவர் நேற்று முன்தினம் சிகிச்சை பலனிற்றி உயிரிழந்ததுடன் அவருடன் பயணம் செய்த 47 வயதுடைய மு.தர்மகுலராஜசிங்கம் என்பவருடைய வலது காலில் முழங்காலுக்குக் கீழ் பகுதி முற்றாக நீக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-9)



கோண்டாவில் தில்லையம்பதி ஸ்ரீ சிவகாமி அம்மன் ஆலய மகோற் சவத்தை முன்னிட்டு மத்திய கிராம அபிவிருத்தி நிலையம் மற்றும் மத்திய கல்வி மேம்பாட்டு பேரவை என்பவற்றினால் நடத்தப் பட்ட பரிசளிப்பு மற்றும் கௌரவிப்பு நிகழ்வுகள் அண்மையில் இடம் பெற்றது. இந்நிக ழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட பேராசிரியர் க.தேவராசா பல்கலைக்கழகத்திற்கு தெரிவான மாணவி ஒருவருக்கு சைக்கிள் ஒன்றை வழங்குவதைப் படத்தில் காணலாம்.

# அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

புத்தூர் கிழக்கு கன்னியர் வைரவர் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவத்தை முன்னிட்டு உலக சைவத் திருச்சபையும் கன்னியர் வைரவர் அறநெறிப்பாடசாலையும் நடத்தும் சைவசமய அறிவுப் பரீட்சை இன்று 8 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (இ-7)

# மஹோற்சவ விஞ்ஞாபனம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் திருவருள்மிகு மூத்த விநாயகர் தேவஸ்தானத்தின் மஹோற்சவ விஞ்ஞாபனம் எதிர்வரும் 15 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 23 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் 24 ஆம் திகதி தீர்த்ததோற்சவமும் இடம்பெறவுள்ளது. (இ-7)

- - - - - - - -

சிதம்பரம் ஸ்ரீ சிவகாம சுந்தரி சமேத ஸ்ரீமந் ஆனந்த நடராஜ மூர்த்தியின் ஆனி திருமஞ்சனம் மஹோற்சவம் எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. (இ-7)




# கழிவுகளைத் தரம்பிரிக்க மக்களுக்கு விழிப்புணர்வு

## யாழ்.மாநகர சபை விசேட நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அன்றாடம் அகற்றும் கழிவுகளை தரம் பிரித்து இலகுவான சேகரிப்புக்கு உதவுதல் தொடர்பாக யாழ்.மாநகர சபையால் பொது மக்களுக்கான விழிப்புணர்வு நடவடிக்கைகள் இந்த மாதம் ஆரம்பிக்கவுள்ளதாக யாழ்.மாநகர சபை ஆணையாளர் செ.பிரணவநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாநகரசபையின் கழிவகற்றல் செயற்பாட்டில், மாநகரசபைத் தொழிலாளர்கள் கழிவுகளைச் சேகரிப்பதற்காகச் செல்லும் போது சேதனக்கழிவு, அசேதனக்கழிவு மீள்சுழற்சிக்குட்படுத்தக்கூடிய கழிவு என்ற தர வேறுபாடின்றி அனைத்துக் கழிவுகளும் சேர்ந்திருப்பதனால் தரம்பிரித்து கழிவகற்றலில் ஈடுபடுதல் காலதாமதத்தை ஏற்படுத்தி கழிவுகளின் தேக்கத்தன்மையை அதிகரித்து மக்கள் தொற்றுநோய் போன்ற பாதிப்புகளுக்கு உட்பட வழிகோலுகின்றது. பொதுமக்கள் கழிவுகளைத் தரம்பிரிக்காமையே தாமதத்தை ஏற்படுத்துவதால் பொது மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.

கழிவகற்றல் என்பது சாதாரண விடயமல்ல. எல்லோரும் ஒன்றிணைந்து செயற்பட முனையும் போது மட்டுமே திட்டமிட்டபடி கழிவகற்றலைத் துரிதப்படுத்த முடியும்.

ஒவ்வொரு மக்களும் தத்தமது சுற்றாடலின் கழிவுகளை ஒழுங்கு முறையில் தரம்பிரித்து அகற்ற முற்படும் போது சபையின் பணி இலகுவாக நிறைவேறுவதுடன் நகரத்தின் சுத்தத்தையும் மக்களின் சுகாதாரத்தையும் கட்டியெழுப்ப முடியும்.

இதனை பொதுமக்களுக்குத் தெரிவித்து அவர்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்வதற்காக விழிப்புணர்வுச் சமிக்ஞைகளை மக்கள் மனதில் ஏற்படுத்தல்.

கழிவகற்றலின் முக்கியத்துவத்தை மக்களிடையே ஏற்படுத்தி, கழிவுகளை முறையாக முகாமைத்துவம் செய்யும் முறைமைகளை கருத்தரங்குகள், நாடகங்கள், துண்டுப்பிரசுரங்கள், வீதிப்பதாகைகள் மூலம் தெளிவுபடுத்தி மக்களின் ஒத்துழைப்பைப் பெறுவதன் மூலம் மாநகரத்தின் ஆரோக்கியத்தை வலுவாகப் பேண முடியும்.

மாநகர சபையின் எல்லைக்குள் பதியப்பட்டுள்ள 38790 ஆதனச் சொந்தக்காரருக்கும் 38790 துண்டுப்பிரசுரங்களும் 38790 கழிவகற்றல் அட்டையும் வழங்குதல்.

□துண்டுப்பிரசுரங்கள் அறிவுறுத்தல்கள்

□கழிவகற்றல் அட்டை ( மாநகர சபைத் தொழிலாளர்கள் செல்லும் போது தரம்பிரித்து வைத்துள்ளமையை உறுதிப்படுத்தும் அட்டை)

மாநகர சபை எல்லைகள் 23 வட்டாரங்களாக வகுக்கப்பட்டுள்ளன. 23 வட்டாரங்களுக்குள்ளும் அடங்கக்கூடிய வகையில் 72 சனசமூக நிலையங்கள் உள்ளன. சனசமூக நிலையங்களை இலக்காகக் கொண்டு 23 வட்டாரங்களுக்கும் சுமார் 5 உத்தியோகத்தர் என்ற வகையில் 3 குழுக்களாக வாரத்தில் 5 நாட்களும் மாலை நேரத்தில் சென்று சனசமூக நிலையங்களில் மாபெரும் கருத்தரங்குகளை நடத்துதல்.

எமது சபையின் எல்லைக் குட்பட்ட 42 பாடசாலைகளில் உயர்நிலை மற்றும் இடைநிலை வகுப்புகள் கொண்ட 30 பாடசாலைகளைத் தெரிவு செய்து எமது சபையின் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் மூலம் விழிப்புணர்வு நாடகங்களை நடத்தி மாணவர் மத்தியிலும் விழிப்புணர்வை ஏற்படுத்தல்.

பொதுமக்கள் கூடுதலாகப் பயன்படுத்தும் வீதிகள் பேருந்து தரிப்பிடங்கள், பொது இடங்கள் என சுமார் 20 இடங்களைத் தெரிவு செய்து விழிப்புணர்வு மற்றும் கழிவகற்றல் அறிவுறுத்தல்கள் அடங்கிய 20 பதாகைகள் இடல். இதன் மூலமும் மக்கள் மனதில் விழிப்புணர்வை ஏற்படுத்தி எமது நோக்கத்தை வெற்றியடையச் செய்ய முடியும்.

மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் தொடர்ச்சியாக ஒரு வாரகாலத்திற்கு யாழ்ப்பாணத்தில் வெளிவரும் மூன்று பத்திரிகைகளிலும் விளம்பரம் செய்தல்.

**கருத்திட்ட நியாயப்படுத்துகை**

கழிவகற்றல் தொடர்பான பணிகள அன்றாடம் தொடர்ச்சியாக ஆற்றப்பட வேண்டியவை.

இந்நிலையில் வரையறுக்கப்பட்ட மாநகர சபைத் தொழி லாளர்களையும் குறிக்கப்பட்ட சில வாகனங்களையும் பயன்படுத்தி சகல பணிகளையும் துரிதமாக செய்து முடிக்க முற்பட்டாலும் பொது மக்களின ஒத்துழைப்பும், விழிப் புணர்வுமின்றி எமது பணியைச் சீராகச் செய்து முடிக்க முனைவது அசாத்தியம். ஆகவே பொதுமக்கள் மத்தியில் மாநகரத்தின் தூய்மையும் சுகாதாரமும் அவரவர் கைகளில் தான் என்ற உண்மையை வலியுறுத்தி கழிவகற்றல் பணியை துரிதப்படுத்துவதில் மக்களின் பங்களிப்பின் அவசியத்தை விழிப்புணர்வு மூலம் தெரியப்படுத்தும் போது மக்களின் ஆதரவையும் ஒத்துழைப்பையும் பெற்று கழிவ கற்றலிலுள்ள சிரமங்களைக் குறைத்து மாநகர சபைக்குட்பட்ட பிரதேசங்களின சுகாதாரத்தினை உறுதப்படுத்திக் கொள்ளலாம் போன்ற நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் தூதுவர் உதயங்கவுக்கு எதிரான விசாரணைகளுக்கு ரஷ்யா ஒத்துழைக்கும்

## பிரதி வெளிவிவகார அமைச்சர் தகவல்

**(கொழும்பு)**

**ரஷ்யாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க சம்பந்தமாக நடைபெறும் விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதாக ரஷ்ய அரசாங்கம் தெரிவித்துள்ளதாக பிரதி வெளிவிவகார அமைச்சர் அஜித் பீ பெரேரா தெரிவித்துள்ளார்.**

உதயங்க வீரதுங்க, உக்ரைன் போராளிகளுக்கு ஆயுதங்களை விநியோகித்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அத்துடன் அவர் தூதரக சிறப்புரிமைகளை பயன்படுத்த பல வேறு வர்த்தக நடவடிகளிலும் ஈடுபட்டு வந்துள்ளார்.

சில காலம் காணாமற்போயிருந்த உதயங்க, அண்மையில் ஈரான் தலைநகர் தெஹ்ரானில்உள்ள இலங்கை தூதரகத்திற்கு வந்து சென்றதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்திருந்தது.

தனக்கு சொந்தமான பொருட்களை ஈரானில் இருந்து கொழும்பு துறைமுகத்திற்கு அனுப்புவதற்காகவும் அதனை வேறு ஒருவருக்கு வழங்கும் அனுமதிப் பத்திரத்தை உறுதிப்படுத்திக் கொள்ளவும் அவர் தெஹ்ரானில் உள்ள இலங்கை தூதரகத்திற்கு சென்றுள்ளார்.

எனினும் ஈரானுக்கான இலங்கை தூதரகம் உதயங்க வீரதுங்கவின் கோரிக்கையை நிராகரித்துள்ளது.

உதயங்க வீரதுங்க முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மைத்துனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# என்னை அழிக்க இனவாதிகள் சதி

## அமைச்சர் றிசாத் குற்றச்சாட்டு

"எப்படியாவது எனது குரலை நசுக்கி, என்னையும் எனது சமூகத்தையும் அழிக்க இனவாதிகள் கங்கணம்கட்டி நிற்கின்றார்கள் என வாணிபத்துறை அமைச்சரும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவருமான றிசாத் பதியுதீன் தெரிவித்தார். ஸ்ரீலங்கா முஸ்லிம் போரத்தின் ஏற்பாட்டில், "வில்பத்து காடழிப்பு விவகாரமும் முஸ்லிம்களின் மீள்குடியேற்ற சவால்களும்" என்ற தொனிப்பொருளில் கொழும்பு அஞ்சல் தலைமையக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர், "ஏனைய சமூகங்களுக்கு உதவி செய்ய முடிந்த என்னால், அகதிகளாக வெளியேற்றப்பட்ட எனது சொந்த சமூகத்துக்கு உதவ முடியாமல் போய்விட்டது" என்றார். வடபுலத்திலிருந்து வெறுங்கையோடு வெளியேற்றப்பட்ட 30 ஆயிரம் குடும்பங்களில் ஒரு குடும்பத்திற்கேனும் ஒரு தகரக்கொட்டிலையும் கடந்த அரசினாலும் இந்த அரசினாலும் செய்துதர முடியவில்லை என்பதுதான் துயரம் நிறைந்த நிலையாகவுள்ளது என்று தெரிவித்தார். (இ-5)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி | சுன்னாகம் | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 120 | 100 | 100 | 120 | 120 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 100 | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 140 | 120 | 50 | 120 | 120 | 120 |
| தக்காளி | 110 | 80 | 100 | 80 | 80 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 50 | 50 | 60 | 40 | 50 |
| கோவா | 140 | 120 | 90 | 120 | 120 | 180 |
| கரட் | 250 | 180 | 140 | 200 | 200 | 200 |
| பூசணி | 30 | 40 | 40 | 40 | 20 | 40 |
| புடோல் | 120 | 100 | 100 | 50 | 100 | 100 |
| வாழைக்காய் | 40 | 50 | 50 | 40 | 40 | 50 |
| சின்ன வெங்காயம் | 140 | 130 | 160 | 160 | 120 | 100 |
| பெரிய வெங்காயம் | 120 | 110 | 100 | 120 | 120 | 120 |
| பாகற்காய் | 140 | 120 | 140 | 120 | 160 | 150 |
| வெண்டிக்காய் | 150 | 150 | 80 | 100 | 100 | 120 |
| கருணைக் கிழங்கு | 120 | 80 | 100 | 120 | 100 | 120 |
| பயற்றங்காய் | 160 | 150 | 150 | 120 | 120 | 160 |
| லீக்ஸ் | 250 | 200 | 150 | 200 | 120 | 180 |
| பீற்றூட் | 120 | 150 | 110 | 160 | 60 | 60 |
| கறிமிளகாய் | 250 | 200 | 120 | 160 | 150 | 80 |
| முருங்கைக்காய் | 160-300 | 450 | 300 | 300 | 200 | 400 |
| போஞ்சி | 250 | 180 | 200 | 200 | 180 | 160 |
| கத்தரிதம்புள்ள | 40 | 100 | 80 | 80 | — | 100 |
| கீரை - 1 பிடி | 40 | 30 | 30 | 40 | 50 | 30 |
| தேசிக்காய் | 200 | 130 | 120 | 120 | 170 | 140 |
| தேங்காய் (ஒன்று) | 25-60 | 50 | 40 | 40-50 | 60 | 50 |
| இராசவள்ளி | 200 | 100 | 150 | 140 | 140 | 120 |
| வெங்காயப்பூ | — | — | — | — | 200 | — |
| முள்ளங்கி | 100 | 70 | 50 | 120 | 120 | 60 |
| பொன்னாங்காணி | 40 | 20 | 40 | 30 | 30 | 30 |
| வல்லாரை | 10 | 10 | 25 | 20 | 10 | 20 |


# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 395

சாகித்தியா லோகன்

நம்பிக்கை நிறைந்த
ஒருவர் யார்
முன்னிலையும் எப்போதும்
மண்டியிடுவதில்லை.

-அப்துல்கலாம்-

கஜன் மகேந்ரன்




சங்கர் ராஜ்குமார்

டாக்டர் : என்னையா தலை எல்லாம் வீங்கிப் போய் இருக்கு என்ன நடந்தது?

நோயாளி : உங்களால தான் இப்பிடி ஆகிட்டு

டாக்டர் : நான் என்ன பண்ணினேன்?

நோயாளி : நீங்க தானே கஷ்டம் வரும் போது சிரிக்க சொன்னீங்க?

டாக்டர் : அட ஆமா அதுக்கு என்ன?


நோயாளி : என் மனைவி வரும் போது சிரிச்சன் அவ்வளவு தான்!



ரகு ரகுராம்




ரவி பிரியா




லோஜி லோஜிதன்

கிழவி, ஒரு இளைஞன் ஒரு யுவதிக்கு ஃபிரண்ட் றிக்குவஸ்ட் குடுக்கத்தான் செய்வான்



அதுக்கு எல்லாம் அடிக்கக் கூடாது ஏன்னா அது வாலிப வயசு...

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபாகரன் சிலையை இடித்ததைக் கண்டித்து நாளை கறுப்புக் கொடியுடன் கண்டனப் போர்

## வைகோ அறிவிப்பு

(சென்னை)

**தலைவர் பிரபாகரன் சிலையை உடைத்ததைக் கண்டித்து, நாளை 9 ஆம் திகதி நாகபட்டினம் வட்டாட்சியர் அலுவலகம் முன் ம.தி.மு.க. சார்பில் கறுப்புக் கொடியுடன் கண்டனப் போராட்டம் நடைபெறும் என அக்கட்சியின் பொதுச் செயலாளர் வைகோ அறிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், நான் உயிரினும் மேலாக நேசிக்கும் தலைவர் பிரபாகரன் அவர்களின் உருவச் சிலையை, நாகை மாவட்டத்தில் தெற்கு பொய்கை நல்லூர் மாரியம்மன் கோவில் பகுதியில் வாழும் தமிழ் மக்கள், தாங்கள் வழிபடும் ஐயனார் கோவில் வளாகத்தில் வெள்ளைப் புரவியின் அருகில் போர்ச் சீருடையுடன் கம்பீரமாக நிற்கும் வகையில் அமைத்துள்ளனர்.


அவர்கள் வீரன் என்ற குலதெய்வத்தையும், ஐயனாரையும் வழிபட்டு வருகின்றார்கள். எனவே, பிரபாகரனைத்தமிழர்களின்காவல்தெய்வமாகக் கருதி சிலை எடுத்து உள்ளனர். உலகத் தமிழர்கள் உள்ளத்தில் தெற்கு பொய்கை நல்லூர் நிரந்தரமான இடத்தைப் பெற்று விட்டது.

ஆனால், அ.தி.மு.க. அரசு அதிரடிப்படையை ஏவி, முதலில் சிலையின் தலையைத் துண்டித்து எடுத்து பின்னர் முழுமையாக இடித்துத் தகர்த்த அக்கிரமச் செயல் கண்டனத்திற்கு உரியதாகும்.

இலட்சக்கணக்கான ஈழத்தமிழர்களை கொன்று குவித்த கொலைகார அரசின் இராணுவம், வல்வெட்டித்துறையில் பிரபாகரன் பிறந்த வீட்டை இடித்துத் தரைமட்டம் ஆக்கியது.

கிளிநொச்சியில் பிரபாகரன் இயக்கிய பாசறைக் கட்டடத்தையும், மாவீரர் துயிலகங்களையும் இடித்து மண்மேடாக ஆக்கிய செயல், உலகமெல்லாம் வாழும் தமிழர்களின் நெஞ்சில் வேல் பாய்ச்சியது.

அதைப்போலவே, அ.தி.மு.க. அரசின் பொலிஸ் அதிரடிப்படை வீரத்தின் நாயகன் சிலையை இடித்து உடைத்த செயல், தமிழர்களின உள்ளத்தில் நெருப்பை அள்ளிக் கொட்டி இருக்கின்றது.



தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் மீதான தடை, அ.தி.மு.க. அரசால் பரிந்துரைக்கப்பட்டு, அப்பட்டமான பொய்களின் அடிப்படையில் மத்திய அரசால் தடை செய்யப்பட்டது, இத்தடை சட்டத்திற்கும் நீதிக்கும் எதிரானது என்று ம.தி.மு.க. தொடர்ந்து போராடி வருகிறது.

இறையாண்மை உள்ள சுதந்திர தமிழ் ஈழ தேசம் என்ற இலட்சியத்திற்காக விடுதலைப் புலிகள் போராடுவதால், தமிழ்நாட்டையும் சேர்த்துத்தான் அவர்கள் தமிழ் ஈழ தேசம் அமைக்கக் கோருகின்றனர் என்று கூறி, அது இந்திய ஒருமைப்பாட்டுக்கும் இறையாண்மைக்கும் எதிரானது என்ற வாதத்தின் அடிப்படையில் தான் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீது தடை விதிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டின் ஒரு அங்குல மண்ணைக் கூடத் தமிழ் ஈழத்தில் சேர்க்க தந்தை செல்வா அவர்களோ, தலைவர் பிரபாகரன் அவர்களோ கனவிலும் எண்ணியது கிடையாது என்பதற்கு, அசைக்க முடியாத ஆவண சாட்சியங்களை, மத்திய அரசின் தீர்ப்பு ஆயத்திலும், சென்னை உயர் நீதிமன்றத்திலும் தடையை நீக்கக் கோரி நான் தொடுத்த ரிட் மனு மீதான வழக்கிலும் ஆதாரங்களுடன் முன்வைத்தேன்.

புலிகள் மீதான தடையை நீக்கக் கோரி மீண்டும் உயர்நீதி மன்றத்தில் நான் தாக்கல் செய்த ரிட் மனு நிலுவையிலுள்ளது.

தலைவர் பிரபாகரன் அவர்களுடைய உருவப் படம் பொறிக்கப்பட்ட பனர்களை அகற்றுகின்ற வேலையில் அ.தி.மு.க. அரசு ஈடுபட்டது. ஆனால், பொய்கைநல்லூர் தமிழர்கள் சிலை அமைத்துள்ளனர். இப்போது அந்தச் சிலையை அகற்றி இருக்கலாம். ஆனால் இனி வரும் நாட்களில், தமிழ்த்தாயின் வீரத்திருமகன் பிரபாகரன் அவர்களின் சிலை தமிழகம் முழுமையும்எழும். இல்லந்தோறும் அவரது திரு உருவப் படம் அலங்கரிப்பதைத் தடுக்க முடியாது. நாட்டின் கோடானு கோடித் தமிழர்களின் நெஞ்சங்களில், குறிப்பாக இளம் தலைமுறையின் இதயச் சுவர்களில அழியாத ஓவியமாக பிரபாகரன் இடம்பெற்றுள்ளாரே, அதனை எந்தச் சக்தியாலும் அழிக்க முடியாது.

தெற்கு பொய்கை நல்லூரில், ஐயனார் கோவில் வளாகத்தில் கிராமத்து மக்கள் எழுப்பிய பிரபாகரன் சிலையை உடைத்து நொறுக்கிய அ.தி.மு.க. அரசைக் கண்டித்து, 9 ஆம்திகதி செவ்வாய்க்கிழமை அன்று காலை பத்து மணி அளவில், நாகபட்டினம் வட்ட ஆட்சியர் அலுவலகம் முன், கழகத்தின் துணைப் பொதுச்செயலாளர் துரை. பாலகிருஷ்ணன் தலைமையில், மாவட்டச் செயலாளர் மோகன் முன்னிலையில் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கறுப்புக் கொடி கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் எனத் தெரிவித்துள்ளார். (இ-5)

## செல்ஃபி

கடந்த வாரத்திற்கான பாராட்டுப் பரிசில் பெரும் சிறந்த செல்பி.



அன்பு வாசகர்களே!
உங்கள் செல்பிக்களும் மேலுள்ள தமிழ்நாட்டில் எடுக்கப்பட்ட செல்பி போல ஏதும் பொருள் கூறுவதாயோ, அர்த்தமுள்ளதாயோ அல்லது வித்தியாசமாக அமைவதாயோ இருந்தால் வரவேற்கத்தக்கது.



பிரசாந்கவல், கரவெட்டி



கௌசிகன்



கதிர்காமநாதன் அனுஜன்



ஸ்கந்த ரூபன்



பாலசுந்தரம் ஜெயந்தன்




திவகரன் சிறிதரன்



உங்கள் செல்ஃபிகளை
photosofvalampurii@gmail.com
என்னும் முகவரிக்கு உங்கள் பெயர், முகவரியுடன் அனுப்பிவையுங்கள்.
சிறந்த செல்ஃபிக்கு பரிசில்கள் உண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகார அழுத்தங்களை பிரயோகிப்பது நல்லாட்சிக்கு அவமானத்தை ஏற்படுத்தும்

## ஆனந்தன் எம்.பி. தெரிவிப்பு

எமது மக்களுக்கு சொந்தமான காணிகளை அபகரித்து அதில் பௌத்த மதத்தைச் சேர்ந்த தேரரொருவர் விகாரை அமைப்பதற்குரிய நடவடிக்கை முன்னெடுத்திருந்த நிலையில் அதனை தடுத்து நிறுத்துவதற்கு ஜனநாயக ரீதியான முனைப்புக்கள் அதனை அதிகார அழுத்தங்களை பிரயோகித்து அச்சத்துக்குள்ளாக்கி தடுக்க முனைவது நல்லாட்சிக்கு அவமானத்தையே ஏற்படுத்துவதாக உள்ளது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

முல்லைத்தீவு மாவட்டம் கொக்குளாயில் பொதுமகனின் காணியை அபகரித்து பௌத்த தேரர் ஒருவரின் துணையுடன் அதில் விகாரை அமைக்கும் செயற்பாடுகள் இராணுவத்தால் முன்னெடுக்கப்பட்டிருந்தன. அதனை கண்டித்தும் தடுத்து நிறுத்துவதற்காகவும் குறித்த காணிக்குச் சொந்தமான உரிமையாளரும் பிரதேச வாசிகளும் இணைந்து அண்மையில் ஜனநாயக ரீதியில் உண்ணா விரதப்போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

இந்நிலையில் அப்பகுதியில் நூற்றுக் கணக்கான பொலிஸார் குவிக்கப்பட்டு இராணுவ கனரக வாகனங்களின் துணையோடு பொதுமக்களின் போக்குவரத்துக்கு தடையை ஏற்படுத்தி உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களை கைதுசெய்து முல்லைத்தீவு பொலிஸ நிலையத்துக்கு கொண்டு சென்றுள்ளனர். போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து அவ்விடத்தில் கூடியிருந்த பொதுமக்களையும் கடுமையாக எச்சரித்துள்ளனர்.

அத்துடன் போராட்டத்துக்காக அச்சடிக்கப்பட்டிருந்த பதாதைகளையும் பறித்தெடுத்து சென்றுள்ளனர்.சம்பவ இடத்துக்கு செல்ல முயன்ற வடமாகாணசபை உறுப்பினர் ரவிகரனை பொலிஸார் செல்லவிடாது தடுத்த நிலையில் அவர் பொலிஸாருடன் தர்க்கத்தில் ஈடுபட்டே அவ்விடத்துக்கு சென்றுள்ளார்.

கைது செய்யப்பட்டவர்கள் பின்னர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

எமது மக்களின் பூர்வீக நிலங்கள் மதத்தின் பெயராலும் இராணுவத் தேவைகளுக்காகவும் அபகரிக்கப்படுகின்றமை அடிப்படை மனித உரிமைமீறலாகும். பாதிக்கப்பட்ட மக்கள் பொதுஅமைதிக்கு பங்கம் ஏற்படாதவகையில், சமூக விரோத போக்குகளுக்கு எதிராக தமது எதிர்ப்பை வெளிப்படுத்த உரிமையுண்டு என்பதை அண்மையில் யாழ்.பருத்தித்துறை நீதிமன்றத்தின் நீதவான் கூறியிருந்தமையை இங்கு சுட்டிக்காட்ட விளைகின்றேன்.

ஊழலற்ற நல்லாட்சியை கொண்டு வருவதற்காக உழைத்துக்கொண்டிருக்கின்றோம் எனக் கூறும் மைத்திரி அரசாங்கத்திற்கு எதிராக எமது மக்கள் செயற்படவில்லை.

இவ்வாறான சம்பவங்கள் தொடரும் பட்சத்தில் நல்லிணக்கம், ஜனநாயகம் என்பன தொடர்ந்தும் கேள்விக்குரியதாகவே காணப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (2-250)




# சிந்தாமணிப்பிள்ளையார் ஆலய வீதியில் விபத்து




வவுனியாவில் முச்சக்கர வண்டியும் டிமோ பட்டா வாகனமும் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் சிறுவன் ஒருவன் காயமடைந்துள்ளான்.

இவ்விபத்து சம்பவம் நேற்று காலை வவுனியா சிந்தாமணிப்பிள்ளையார் ஆலய வீதியில் இடம்பெற்றது.

இது தொடர்பில் தெரியவருவதாவது, புகையிரத நிலையப் பகுதி வீதி வழியாக வந்து கொண்டிருந்த முச்சக்கரவண்டியும், ஏ-9 வீதியில் இருந்து உள்வட்ட வீதி வழியாக எதிர்த்திசையில் வந்து கொண்டிருந்த டிமோ பட்டா வாகனமும் வீதி வளைவு ஒன்றில் திரும்ப முற்பட்ட வேளை வேகக் கட்டுப்பாட்டை இழந்து மோதி விபத்துக்குள்ளானது. இதன்போது முச்சக்கரவண்டியில் பயணித்த சிறுவன் காயமடைந்துள்ளான். இது தொடர்பான விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2-250)

# யுத்தத்திற்குப்பின் உளநலம் பாதிப்புற்றோர் அதிகரிப்பு

கிளிநொச்சி மாவட்டம் உட்பட வன்னிப் பகுதிகளில் கடந்த யுத்தத்தின் பின்னர் உளநலம் பாதிக்கபபட்டோரின் தொகை வெகுவாக அதிகரித்து காணப்படுகின்றது. இவ்வாறு உளநோய்க்கா ளானோரில் பலர் தற்கொலை செய்து கொள்வதை காண முடிகின்றது. கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக பிரிவில் உள்ள மலையாளபுரம் கிராமசேவை யாளர் பிரிவில் மட்டும் கடந்த சில மாதங்களுக்குள் ஐந்துபேர் வரை உளநலம்பாதிப்பால் தற்கொலை செய்து கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை மற்றும் பரந்தனில் உள்ள கிளிநொச்சி மாவட்ட ஆயுர்வேத வைத்தியசாலை ஆகியவற்றில் உளவள சிகிச்சைப் பிரிவு கள் இயங்கிவருகின்றன என தெரிவிக்கப்படுகின்றது. (2)

# பூநகரி பிர.சபையினரால் வழங்கப்படும் குடிநீர் பாவனைக்கு போதுமானதல்ல



கிளிநொச்சி பூநகரி பிரதேசத்தில் வாழ்கின்ற மக்கள் குடிநீரைப் பெறுவதில் பாரிய சிக்கல்களை எதிர்கொள்வதாகவும் தமக்கு வழங்கப்படும் குடிநீர் ஏனைய தேவைகளுக்கு போதாது உள்ளதாகவும் கவலை தெரிவிக்கின்றனர்.

குறித்த பிரதேசத்தில் உள்ள 11கிராம சேவகர் பிரிவுகளில் குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதனடிப்படையில் பூநகரி பரமன் கிராய் பிரதேசத்தில் தற்போது நூற்றுக்கும் அதிகமான குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

இந்தநிலையில் அப்பகுதி மக்களிற்கான குடிநீர் விநியோகம் பிரதேசசபையினால் மேற்கொள்ளப்படுகின்ற போதும் இது தமக்கு போதாதுள்ளதாக மக்கள் தெரிவித்துள்ளனர். குடும்பம் ஒன்றிற்கு இரண்டு நாட்களிற்கு ஒரு தடவை நீர் வழங்கப்படுவதாகவும், இதற்கான கட்டணமாக அறுபது ரூபாவை வழங்க வேண்டியுள்ளதாகவும் தெரிவித்துள்ள அம் மக்கள், இவ்வாறு பெறப்படும் நீர்குடிப்பதற்கு மட்டுமே போதுமாகவுள்ளதாகவும் ஏனைய தேவைகளுக்கு நீர்பற்றாக்குறையாக காணப்படுவதாகவும் விசனம் வெளியிட்டுள்ளனர்.(2-281)

# மீள்குடியேறியும் எமது வீடுகள் இரவில் இருளில் மூழ்கியுள்ளன

## பொன்னகர் வடக்கு மக்கள் ஆதங்கம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பொன்னகர் வடக்கு கிராமத்தில் வசிக்கின்ற சுமார் 15இற்கு மேற்பட்ட குடும்பங்கள் இது வரை தமக்கான மின்சாரம் வழங்கப்படவில்லையென ஆதங்கம் தெரிவிக்கின்றனர்.

குறித்த பகுதியில் சுமார் 200இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் தமது சொந்தக் காணிகளில் மீள்குடியேறி வசித்து வருகின்றனர். இக்குடும்பங்களில் 15 குடும்பங்களைத் தவிர்ந்த ஏனையவர்களுக்கு மின்சாரம் வழங்கப்ட்டுள்ளதாக பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர். இவ்வாண்டு ஜனவரி மாதம் 5ஆம் திகதி அறிவியல்நகர் பாதையோரத்தில் மின்கம்பங்கள் பறிக்கப்பட்டும் அதற்கான ஆயத்த வேலைகள் இதுவரை நடைபெறவில்லை.

இக்குடும்பங்களில் வசிக்கின்ற பாடசாலை செல்லும் மாணவர்கள் தமது இரவு நேரக் கல்வியை குப்பி விளக்கிலேயே தொடர்வதாக தெரிவிக்கின்றனர்.

இக்கிராமத்திற்கு அண்மையாகவே மத்திய வங்கி அமைக்கப்பட்டுள்ளதாக அவர்கள் கூறுகின்றனர்.

மின்சாரம் வழங்கப்படாது இருக்கின்ற வீடுகளுக்கு அருகாமையில் உள்ள வீடுகளுக்கு மின்இணைப்பு வழங்கப்பட்டுள்ள போதிலும் ஒருசில குடும்பங்களுக்கு மட்டும் இதுவரை வழக்கப்படாது புறக்கணிக்கப்படுவது ஏன் என பாதிக்கப்பட்ட குடும்பங்கள் கேள்வி எழுப்புகின்றன. இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரி களுக்கு கடிதங்கள் மூலமும் நேரடியாகவும் சென்று தெரியப்படுத்தியும் எதுவித நடவடி க்கையையும் எடுக்கப்படவில்லையென அவர் கள் கூறுகி ன்றனர்.

எனவே பாராபட்சம் காட்டாது உரியவர்கள் காலம் தாழ்த்தாது மின்சாரத்தை வழங்குவதற்கு ஆவன செய்ய [illegible] பாதிக்கப்பட்ட குடும்பங்கள் [illegible] (2)

# விபத்துக்களற்ற போக்குவரத்திற்கு வீதிக்குறியீடுகளை சீர்செய்யுங்கள்

(கிளிநொச்சி)



கிளிநொச்சி அக்கராயன் பிரதான வீதியில் வீதி அபிவிருத்தி அதிகாரசபை யினரால் அமைக்கப்பட்டுள்ள வீதிக்குறியீடுகள் கீழே சரிந்து காணப்படுவதால் பாதசாரிகள், வாகன ஓட்டுநர்கள் பாரியசிரமங்களைஎதிர்கொள்வதாகத் தெரிவிக்கின்றனர்.

காப்பெற் இடப்பட்ட குறித்த வீதியால் கனரக வாகனங்கள் முதல் பேருந்துகள் வரை பயணத்தை தொடர்கின்றன

குறித்த வீதியில் அமைக்கப்பட்டுள்ள வீதிக் குறியீடுகள் நிலத்தில் விழுந்து காணப்படு வதாக வாகனசாரதிகள் தெரிவிக்கின்றனர். வீதிக் குறியீடுகளை அவதானித்து வாகனத்தை செலுத்த [illegible] விபத்துக்களையும் [illegible] வேண்டியுள்ளதாகதெரிவிக்கின்றனர்.

எனவே இவ்விடயத்தில் வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் கவனமெடுத்து விபத்துக்களற்ற சீரான போக்குவரத்தை மேற்கொள்ள உரிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள வீதிக் குறியீடுகளை சீர்செய்து தருமாறு பாதசாரதிகள் வாகன ஓட்டுந ர்கள் ஆகியோர் கோரிக்கை விடுக்கின்றனர். (2-272)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வடமாகாண முன்பள்ளி ஆசிரியர்களுக்கான நியதிச்சட்டம் விரைவில் நிறைவேற்றப்படும்

## வடக்கு மாகாண கல்வி அமைச்சர் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

**முன்பள்ளி ஆசிரியர்களின் நியமனங்கள், வேதனம் தொடர்பான நிரந்தர தீர்வுகளுக்கான ஒரு நியதிச்சட்டம் விரைவில் நிறைவேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா தெரிவித்துள்ளார்.**



கிளிநொச்சி மாவட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கும் வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜாவிற்கும் இடையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

முன்பள்ளிகளின் இணைப்பாளர் கௌசலா தலைமையில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச் சினைகள் தொடர்பாக கல்வி அமைச்சருக்கு தெளிவுபடுத்தப்பட்டது.

இக்கலந்துரையாடலில் கல்வி அமைச்சர் கருத்து தெரிவிக்கையில்,

கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் காணப்படும் முன்பள்ளி ஆசிரியர்களின் சேவைகளையும் அவர்களின் அர்ப்பணிப்புக்களையும் நாம் அறிவோம்.

போர்க்காலத்திலும், அகதி முகாம்களிலும் மீள்குடியேற்றத்தின் பின்னரும் முன்பள்ளி ஆசிரியர்கள் குறைந்தளவு வேதனங்களுடனும் வேதனம் இன்றியும் கற்பித்து வருவதை நாம் உணர்ந்து கொண்டதன் அடிப்படையில் முன்பள்ளி ஆசிரியர்களின் நியமனங்கள், வேதனம் தொடர்பான நிரந்தர தீர்வுகளுக்கான ஒரு நியதிச் சட்டத்தை நாளை செவ்வாய்க் கிழமை வடக்கு மாகாண சபையில் சமர்ப்பித்து, அதை விவாதத்திற்கு உட்படுத்தி முனபள்ளி ஆசிரியர்களுக்கானசட்டத்தை நிறைவேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முன்பள்ளி ஆசிரியர்கள் வடக்கு மாகாண சபையின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள மத்திய அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கவுள்ளோம்.

இராணுவத் துணைப்படை நிர்வாகத்தின்க்ழ் முன்பள்ளி ஆசிரியர்கள் இயங்க முடியாது. அது துணைப்படையே தவிர முன்பள்ளி ஆசிரியர்கள் அல்ல.

எனவே முன்பள்ளி ஆசிரியர்கள் என்ற கட்டமைப்புக்குள் வரவேண்டுமாயின் அவர்கள் கல்வி நிர்வாகத்தின்கீழ் வரவேண்டுமென்பதுதான் நியதி. ஆகவே அதற்கான நடவடிக்கைகள் எம்மால் மேற்கொள்ளப் படுவதுடன் முன் பள்ளி ஆசிரியர்களுக்கான நிரந்தரமான தீர்வுகள் நியதிச்சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்பு கிடைக்கும் என அமைச்சர் தெரி வித்தார். (2)









கிளிநொச்சி ஜெயந்தி நகரில் அமைந்துள்ள மகாதேவா ஆச்சிரமச் சிறுவர் இல்லத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றின் போது...




# கற்றல் செயற்பாடுகளை விருத்தி செய்வதற்கு பாடசாலை குறைபாடுகளை நிவர்த்தி செய்க

## தண்ணீரூற்று முஸ்லிம் மகா வித்தி. அதிபர் வேண்டுகோள்

முல்லைத்தீவு வலயக்கல்வி அலுவலகத்துக்குட்பட்ட தண்ணீரூற்று முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் காணப்படும் குறைபாடுகளை உடனடியாக நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பாடசாலை அதிபர் ஏ.சி.ரியாஸ் தெரிவித்துள்ளார்.

முதலாம் ஆண்டு தொடக்கம் உயர்தரம் வரை (கலைப்பிரிவு) 1 சி தரப்பாடசாலையாக இயங்கிவரும் இப்பாடசாலையில், அதிபர் மற்றும் ஆசிரியர்களுக்கான விடுதி வசதிகள், வகுப்பறைக்கட்டடம், விஞ்ஞான ஆய்வுக்கூடம், கணனி ஆய்வுகூடம், விளையாட்டு மைதானம், எஞ்சிய மதில்வேலை, போட்டோ கொப்பி இயந்திரம், நூலகத்துக்கான தளபாடங்கள் மற்றும் நூல்கள் என்பன பறறாக்குறையாக இருந்து வருகினறது.

இது பற்றி எமது மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல்வாதிகளின் கவனத்துக்கு கொண்டு வந்தபோதிலும் எதுவிதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. அத்துடன், எமது வலயக் கல்வி அலுவலகம் செய்ய வேண்டிய உதவிகளை செய்து கொடுக்கிறது. ஆனால், செய்து கொடுப்பதாக வாக்குறுதியளித்துச் சென்ற அரசியல்வாதிகள் இன்றுவரைக்கும் அது பற்றி எந்த நடவடிக்கைகளும் எடுக்கவில்லை.

வடமாகாண சபை உறுப்பினர் யாசின் ஜவாஹிரின் முயற்சியால் இப்பாடசாலைக்கு ஒரு பகுதி சுற்றுமதில் மற்றும் விளையாட்டு அரங்கு என்பன பெற்றுக்கொடுக்கப்பட்டது. இன்னும் இப்பாடசாலைக்கு அதிகமான தேவைகள் காணப்படுகின்றன. சுமார் 500க்கும் அதிகமான மாணவர்கள் கல்வி கற்கும் இந்த பாடசாலையில், கரப்பந்தாட்டம், கிரிக்கெட், எல்லே, சமூக விஞ்ஞான போட்டி, கலாசார போட்டி என பலதுறைகளிலும் மாணவர்கள் தமது ஆற்றல்களை வெளிப்படுத்தி வருகின்றனர். வலயம், மாவட்டம், மாகாணம், அகில இலங்கை ரீதியில் சென்று எமது பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

எனவே, கற்பதில் மாத்திரமின்றி விளையாட்டு மற்றும் கலாசார போட்டிகளில் அதிக ஆர்வத்தைக் கொண்டுள்ள எமது மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை மேலும் விருத்தி செய்வதற்கு, இந்தப்பாடசாலையில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு உரியவர்கள், வாக்குறுதியளித்தவர்கள் முயற்சிக்க வேண்டும் என்றார். (2)

# றிசாத் பதியூதீன் இன்று முல்லைத்தீவிற்கு செல்வார்

(முள்ளியவளை)

கைத்தொழில் வணிகத்துறை அமைச்சர் றிசாத் பதியூதீன் நேற்றுக்காலை 9 மணியளவில் ஒட்டுசுட்டானிற்கு விஜயமொன்றை மேற்கொண்டார். இதன்போது அப்பகுதியில் தமது அமைச் சின் பிராந்திய அலுவலகம் ஒன்றை திறந்து வைத்தார். அதன்பின்னர் கூழாமுறிப்பில் அமைந் துள்ள ஓட்டுத் தொழிற்சாலைக்கு சென்ற அவர் நடைபெற்று வருகின்ற புனரமைப்பு பணிகளைப் பார்வையிட்டார்.

அதனைத்தொடர்ந்து மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவிலுள்ள பாண்டியன் குளம் பகுதிக்கு சென்று கிராமத்திற்கான 10 இலட்சம் ரூபா அபிவிருத்தி நிதியத்தின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ள வீதி புனரமைப்பு சேவையை ஆரம்பித்து வைத்தார்.

அதனைத்தொடர்ந்து துணுக்காய் பகுதிக்குச் சென்ற அவர் அங்கு அமைச்சின் பிராந்திய அலுவலகத்தைத் திறந்து வைத்து மக்களின் குறைகளைக் கேட்டறிந்து கொண்டார்.

முல்லைத்தீவிற்கு இன்று திங்கட்கிழமை விஜயம் மேற்கொள்ளும் அவர் அமைச்சின் மாவட்ட அலுவலகத்தை திறந்து வைப்பார்.

அதன்பின்னர் முல்லைத்தீவு அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர்கள், திணைக்கள தலைவர்கள் ஆகியோரை சந்தித்து மாவட்டத்தின் தேவைகள் குறித்தும் கேட்டறிந்து கொள்ளவுள்ளார். (2-302)

# இரண்டு இலட்சம் கையெழுத்துக்களை சேகரிக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது

மன்னார் முஸ்லிம்களின் மீள்குடியேற்ற பிரச்சினையை அடுத்து தடைப்பட்டுள்ள வடக்கு மாகாண அகதி முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்தினை வலியுறுத்தி இரண்டு இலட்சம் கையெழுத்துக்களைச் சேகரிக்கும் நடவடிக்கையொன்று நேற்று ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணியளவில், மன்னார், முசலி பிரதேச சபைக்குட்பட்ட மறிச்சுக்கட்டி கிராமத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

இந்நிகழ்வில், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் கைத்தொழில் வணிக அமைச்சருமான றிசாத் பதியுதீன், வடக்குமாகாணசபை உறுப்பினர் ரிப்கான் பதியுதீன், பிரதியமைச்சர் எம்.எஸ்.எஸ். அமீர் அலி உள்ளிட்ட பலரும் இதில் கலந்து கொண்டனர்.

வடபகுதி முஸ்லிம் அகதிகளின் மீள்குடியேற்றத்தை வலியுறுத்தி ஆதரவுக் கையெழுத்து பெறும் மற்றுமொரு பாரிய நடவடிக்கை யொன்று, எதிர்வரும் 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஜும்-ஆ தொழுகையினைத் தொடர்ந்து நாடு முழுவதிலுமுள்ள பள்ளிவாசல்களில் இடம்பெறும் என தெரிவிக்கப்படுகின்றது. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

1160

# மாத்தி யோசி முருகா



மலையின் உச்சியில் இருக்கிறது முருகன் கோயில். கோயிலுக்கு செல்ல 200 இற்கும் மேற்பட்ட படிகள்.

படிக்கட்டுக்களின் ஓரங்களில் இளநீர், தேநீர், சந்தனம், சாமிப் படங்கள், பழங்கள், அர்ச்சனைத் தட்டுகள், நெய், தீபங்களை விற்கும் சிறு கடைகள் என வரிசைகட்டி இருந்தன.

அந்தக் கடைகளில் ஒன்று முருக வேலின் அப்பாவுடையது. மலை அடிவாரத்தில்தான் வீடு.

முருக வேல் எட்டாம் வகுப்பு படிக்கிறான்.

பள்ளிக்கூட நேரம் போக மற்ற நேரங்களில் கடையில்தான் இருப்பான். வரும் பக்தர்களின் வயதுக்கேற்ப அவர்களை முறை வைத்துக் கூப்பிடுவான்.

அவனை விட வயதில் மூத்த பெண்களை அக்கா என்பான். மிகவும் படித்தவர்களாகத் தெரிந்தால் ஆன்ட்டி என ஆங்கிலத்தில் விளிப்பான்.

பெரியம்மா என்று சொல்வான். பாட்டி என்ற வார்த்தையை மட்டும் ரொம்ப ஜாக்கிரதையாகப் பயன்படுத்துவான்.

அது நிறையப் பேருக்குப் பிடிப்பது இல்லை என்பதை முருகவேல் அனுபவத்தில் அறிந்திருந்தான்.

அன்று மாலை கடையில் இருந்தான். அப்பா வெளியே சென்று இருந்தார். அம்மா மட்டும் இருந்தார்.

அவனது குட்டித் தங்கை பொம்மைகளை வைத்து விளையாடிக் கொண்டிருந்தாள்.

பெண்கள் கூட்டம் வந்தது. வாங்கம்மா வாங்க அர்ச்சனைத் தட்டு வாங்கிட்டுப் போங்க. அம்மனுக்கு சாத்த ரோஜா மாலை இருக்கு. செருப்புகளை இங்கேயே விட்டுட்டுப் போங்கம்மா என்றான் உற்சாகமான குரலில்.

அம்மா முகத்தில் வழக்கமாக இருக்கும் உற்சாகம் இல்லை.

என்னம்மாஉடம்புசரியில்லையா? என்றான் முருகவேல்.

அம்மா ஏதோ நினைவாக இருந்தார். அவன் கேள்விக்கு பதில் சொல்லவில்லை.

முருகவேல் அம்மாவின் தோளைத் தொட்டு என்னம்மா ஆச்சு? என்று பரிவுடன் கேட்டான்.

இங்கே இருக்கிற கடைகளை எல்லாம் காலி பண்ணச் சொல்லி நோட்டீஸ் வந்திருக்கு. என்ன பண்றதுனு தெரியலே... என்றாள் அம்மா.

அவள் குரல் வேதனையின் காரணமாக கிணற்றிலிருந்து கேட்பது போல பலவீனமாக ஒலித்தது.

அவன் அப்பா வந்ததும் விசாரித்தான்.

நடைபாதைக் கடைகளை அப்புறப்படுத்தச் சொல்லி கோயில் நிர்வாகம் நோட்டீஸ் கொடுத்திருக்கு.

இது அவங்க இடம். நாம காலி பண்ணித்தான் ஆகணும். நமக்கு இதை விட்டா வேறு எதுவும் தெரியாது. என்ன செய்றதுனு பார்ப்போம்... என்று உச்கொட்டினார்.

அன்று இரவு முழுதும் அப்பா தூங்காமல் புரண்டுகொண்டிருப்பதை முருகவேல் கவனித்தான். என்ன செய்வது என்று அவனுக்கும் புரியவில்லை. கடவுள் ஒரு கதவை மூடினால் மற்றொரு ஜன்னலைத் திறப்பார் என்று ஆசிரியர் சொன்னது நினைவுக்கு வந்து ஆறுதல் தந்தது.

நீண்ட நேரம் கழித்து அவனை அறியாமல் தூங்கிப்போனான்.

மறு நாள்... கடைக்காரர்கள் ஆங்காங்கே கூட்டமாக பேசிக்கொண்டு இருந்தனர்.

பலர் சொந்த ஊருக்குச் செல்ல முடிவு செய்தார்கள். பலர் கடைகளை காலி செய்யும் வேலையில் இறங்கி இருந்தனர். வேறுசிலர் குழப்பத்தோடு சுற்றிச் சுற்றி வந்தனர்.

சொந்த இடம் இருப்பவர்கள் தங்கள் கடைகளை அங்கே மாற்றிக் கொண்டனர். சொத்தும் இடமும் இல்லாத முருகவேலின் குடும்பம் புரியாமல் தவித்தது. முருகவேல் தன் தமிழ் ஆசிரியரைச் சந்தித்து நெருக்கடியைத் தெரிவித்தான்.

கவலைப்படாதே! தேவைதான் மனிதனின் தாய். பாம்பின் விஷம் மரணத்தைத் தரும். ஆனால் அதே பாம்பின் விஷம் அதற்கு முறிவு மருந்தாகவும் இருக்கு. வாழ்க்கையிலும் பல விடயங்கள் அப்படித் தான்.

வழக்கமான பாதையிலேயே போகாமல் மாத்தியோசி. எங்கே பிரச்சினை இருக்கிறதோ அங்கேயே தீர்வும் இருக்கும் என்றார்.

இரண்டு நாட்கள் கழிந்தன. மாலை நேரம் நான் கோயிலுக் குப் போயிட்டு வர்றேன் என்று சொல்லி விட்டு முருகவேல் சென்றான்.

திரும்பி வரும் வழியில் ஒரு கிளை வழி பிரிந்தது. அந்த வழியிலும் சில சிறுவர்களும், பெரியவர்களும் சென்றனர். அந்த வழியின் கடைசியில் ஒரு மான் பண்ணை இருந்தது. அங்கே குரங்குகளும், மான்களும், முயல்களும் வளர்க்கப்படுகின்றன. மயில், வான் கோழி போன்ற பறவைகளும் கூண்டுகளில் பாதுகாக்கப்படுகின்றன.

கோயிலுக்குச் சென்றுவிட்டு திரும்பும் மக்கள் அந்த மான் பண்ணைக்கும் போவது வழக்கம். அவனும் அன்று மான் பண்ணைக்குப் போனான். ஆர்வம் இல்லாமல் விலங்குகளையும் பறவைகளையும் பார்த்துக்கொண்டு இருந்தான். கம்பி வலைக்கு உள்ளே இருந்த மான்களை சிறுவர் சிறுமியர்கூட்டம் பார்த்துரசித்துக்கொண்டு இருந்தது. அப்பொழுது ஒரு சிறுமி இந்த மானுக்கு நான் சாக்லேட் கொடுக்கட்டுமா? என்று தன் அம்மாவிடம் கேட்டாள். அதுக்கு சாக்லேட் கொடுக்கக்கூடாது. கரட், முள்ளங்கி மாதிரி கொடுக்கலாம் என்றாள்.

இங்கேதான் காய்கறிக் கடையே இல்லையே, நாம் வீட்டிலிருந்து கொண்டு வந்தால்தான் ... என்ற சிறுமியின் குரலில் வருத்தம் கலந்த ஏமாற்றம். பளீர் என்று மின்னல் வெட்டியதைப் போல ஒரு எண்ணம் முருகவேலின் மனதிற்குள் வந்தது. வீட்டைநோக்கி ஓடினான். அப்பா படிக்கட்டில்தானே கடை போடக்கூடாது? வேறு எங்காவது போடலாமா? என்றான் முருகவேல் பரபரப்பாக. அவன் கேட்பதைப் புரிந்து கொண்ட அப்பா வேற எங்கே போடுறது? இங்கே தான் ஜணங்க வருவாங்க. அவங்க வந்தாத்தான் வியாபாரம் என்றார் விரத்தியாக.

அப்பா மான் பண்ணைக்குப் போகிற வழியில் கடை போட அனுமதி தருவாங்களானு கேட்டுப் பாருங்களேன் என்றான் முருகவேல். அங்கே அர்ச்சனைத்தட்டும் படங்களும் விற்க முடியுமாடா? கிறுக்குப் பயலே என்றாள் அம்மா.

ஏன் அதையே விற்கனும்? இது நாள் வரை மனுசங்களுக்கு தேவையானதை விற்றோம். இனி விலங்குகள், பறவைகளுக்குத் தேவையானதை விற்போம். அப்பா அந்த இடத்திலே ஒரு கடை போட்டால் மான் பண்ணைக்கு வருகிறவர்கள்.... முள்ளங்கி, கரட், தக்காளின்னு வாங்கி விலங்குகளுக்குக் கொடுப்பாங்க. அதனால் விலங்குகளுக்குத் தேவையான தீனி கிடைச்சுடும். நமக்கும் வருமானம் வரும். நீங்க போயி அனுமதி கேட்டுப்பாருங்க என்றான். அப்பா யோசனையுடனே சென்றார்.

அரைமணி நேரம் கழித்துத் திரும்பிய போது அவர் முகத்தில் மலர்ச்சி. முருகா அவங்க மான் பண்ணை அருகே காய்கறிக் கடை போட சம்மதம் தந்துட்டாங்க. நல்ல ஐடியா கொடுத்தேப்பா... என்று சொல்லி முருகவேலை கொஞ்சினார். அதைப்பார்த்து குட்டித்தங்கை கூட சிரித்தாள். அப்பா.. நான் குழந்தை இல்லை. எட்டாவது படிக்கிறேன் என்று சொன்ன முருகவேலுக்கு கொஞ்சம் வெட்கமாகியிருந்த போதிலும் முகத்தில் பெருமை பொங்கியது.

## 06.2015 08 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1405 - யோர்க் ஆயர் ரிச்சார்ட் ஸ்க்ரோப், நோர்ஃபோக் இரண்டாம் நிலை மன்னர் தொமஸ் மோபிறே ஆகிய மன்னர்கள் இங்கிலாந்தின் நான்காம் ஹென்றியின் ஆணையின் பேரில் தூக்கிலிடப்பட்டனர்.
- 1861 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: டென்னசி அமெரிக்கக் கூட்டில் இருந்து விலகியது.
- 1887 - ஹேர்மன் ஹொலரித் துளையிடும் அட்டை கொண்ட கணிப்பானுக்கான காப்புரிமம் பெற்றார்.
- 1929 - ஐக்கிய இராச்சியத்தில் முதற் தடவையாக தொழிற் கட்சி ஆட்சி அமைத்தது.
- 1941 - இரண்டாம் உலகப் போர்: நேச நாடுகள் சிரியா, மற்றும் லெபனான் மீது தாக்குதலை ஆரம்பித்தன.
- 1942 - இரண்டாம் உலகப் போர்: ஜப்பானிய நீர்மூழ்கிக் கப்பல்கள் அவுஸ்திரேலியாவின் சிட்னி, நியூகாசில் நகரங்கள் மீது குண்டுத்தாக்குதலை நடத்தின.
- 1984 - அவுஸ்திரேலியாவின் நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்தில் ஓரினச்சேர்க்கை சட்டபூர்வமாக அனுமதிக்கப்பட்டது.
- 1992 - முதலாவது உலகக் கடல் நாள் கொண்டாடப்பட்டது.
- 1995 - படிவ நிரலாக்க மொழி பி.எச்.பி வெளியிடப்பட்டது.
- 2006 - அல் குவைதாவின் ஈராக்கியத் தலைவர் அபு முசாப் அல்-ஜர்காவி அமெரிக்க விமானக் குண்டு வீச்சில் கொல்லப்பட்டார்.
- 2007 - அட்லாண்டிஸ் விண்கப்பல் 7 பேருடன் சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு ஏவப்பட்டது.
- 2007 - இலங்கையில் புத்தளத்தில் 9 உடல்கள் மிகவும சிதைந்த நிலையில் காவற்துறையினரால் கண்டுபிடிக்கப்பட்டன.

### பிறப்புகள்

- 1867 - பிராங்க் லாய்டு ரைட், (இ. 1959)
- 1874 - சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி, இலங்கையின் முன்னாள் சட்டசபை சபாநாயகர்
- 1921 - சுகார்ட்டோ, இந்தோனேசியாவின் முன்னாள் அரசுத் தலைவர் (இ. 2008)
- 1930 - இர. ந. வீரப்பன், மலேசிய எழுத்தாளர் (இ. 1999)

### இறப்புகள்

- 1845 - ஆன்ட்ரூ ஜாக்சன், ஐக்கிய அமெரிக்காவின் ஏழாவது குடியரசுத் தலைவர் (பி. 1845)
- [illegible] நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் வாழ்க்கை வரலாறு

149



...தி.மு.க. கூட்டணியில் காங்கிரஸ், பாட்டாளி மக்கள் கட்சி, ம.தி.மு.க, வ.கம்யூனிஸ்டு, இ.கம்யூனிஸ்டு, முஸ்லிம் லீக் ஆகிய கட்சிகள் இடம் பெற்று இருந்தன.

(மூப்பனார் மறைவுக்குப்பின், 'தமிழ் மாநில காங்கிரஸ்', காங்கிரசுடன் இணைந்துவிட்டது.) அ.தி.மு.க. கூட்டணியில், பாரதீய ஜனதா இடம்பெற்றிருந்தது.

**ரஜினியின் மனமாற்றம்**

இதற்குமுன், 1996 மே மாதத்தில் தமிழக சட்டசபைக்கும், பாராளுமன்றத்துக்கும் தேர்தல் நடந்தபோது, தி.மு.க. கூட்டணியை ரஜினி ஆதரித்தார்.

ஆனால் பிறகு பாட்டாளி மக்கள் கட்சிக்கும், ரஜினிக்கும் மோதல் ஏற்பட்டது. 'பாபா' வெளியானபோது இந்த மோதல், உச்ச கட்டத்தை அடைந்தது.

'பாபா' படம் திரை யிடப்பட்ட தியேட்டரில் திரையைக் கிழித்தல், பிலிம் பெட்டிகளை கடத்தல் முதலிய செயல்களில் பாட்டாளி மக்கள் கட்சி தொண்டர்கள் ஈடுபட்டதால் ரஜினிகாந்த் மனம் வருந்தினார்.

இதன் காரணமாக, 1996 பாராளுமன்ற தேர்தலின்போது, பாட்டாளி மக்கள் கட்சி இடம்பெற்றிருந்த தி.மு.க. கூட்டணியை ரஜினிகாந்த் ஆதரிக்கவில்லை.

தான், பாரதீய ஜனதா கூட்டணியை ஆதரிக்கப்போவதாக அறிவித்தார். தனது ரசிகர்கள் பாட்டாளி மக்கள் கட்சி போட்டியிடும் 6 தொகுதிகளில் அதை எதிர்த்து பணியாற்ற வேண்டும் என்றும், மற்ற தொகுதிகளில் அவரவர் மனச்சாட்சியின்படி ஓட்டுப்போடும்படியும் அறிக்கை விடுத்தார்.

**தி.மு.க. வெற்றி**

இந்தத் தேர்தலில், 39 தொகுதிகளிலும் தி.மு.க - காங்கிரஸ் கூட்டணி வெற்றி பெற்றது.

மத்தியில் காங்கிரஸ் வெற்றி பெற்று ஆட்சியைப் பிடித்தது. மன்மோகன்சிங் பிரதமரானார்.

**'ஆண்டவன் தீர்ப்பு'**

தேர்தல் முடிவு குறித்து, ரஜினிகாந்த் சார்பாக, அகில இந்திய ரஜினிகாந்த் தலைமை நற்பணி மன்ற பொறுப்பாளர் க.சத்தியநாராயணா ஒரு அறிக்கை வெளியிட்டார்.

அதில் அவர் கூறியிருப்பதாவது:-

'பாராளுமன்ற தேர்தலில் தமிழ்நாடெங்கும் அமோக வெற்றி பெற்ற தி.மு.க. தலை மையிலான ஜனநாயக முற்போக்கு கூட் டணியினருக்கு ரஜினிகாந்த் சார்பாகவும், மன்றங்களின் சார்பாகவும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.


அன்பார்ந்த ரசிகர்களே! பா.ம.க.வைப் பொறுத்தவரை, நமது அன்புத்தலைவர் ரஜினிகாந்த் ஏற்கனவே கூறியதுபோல அவர்கள் ஜெயித்தால் நாம் தோற்றுவிட்டோம் என்று அர்த்தம் இல்லை. இது, ஆண்டவன் அளித்த தீர்ப்பு.

பா.ம.க.வினர் போட்டியிட்ட 6 தொகுதிகளிலும் கடுமையாக உழைத்த அன்பு ரசிகர்களுக்கு ரஜினிகாந்த் சார்பாகவும், தலைமை மன்றத்தின் சார்பாகவும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்' இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டு இருந்தது.

**அமெரிக்காவில் ரஜினிக்கு ஏற்பட்ட விசித்திர அனுபவம்!**

**மொட்டை அடித்தவருக்கு ரூ.4,000 கொடுத்தார்!**

அமெரிக்காவில், ரஜினிகாந்த் 'ஹேர் ஸ்டைல்' செய்து கொள்ளப்போனார். அவருக்கு மொட்டை அடித்துவிட்டு, ரூ.4 ஆயிரம் வசூலித்துவிட்டார்கள்! இந்தத் தகவலை ரஜினியே வெளியிட்டார். *(தொடரும்)*





# கருவாச்சி காவியம்

**வைரமுத்து-158**

...சரி! அறிவுகெட்ட நரி ஆசைப்படுது... இன்னிக்கிருந்து நீ முழுச் சிங்கந்தானப்பா, சொல்லிருச்சு சிங்கம்.

கொஞ்சநாள்ல சிங்கம் சீக்கு விழுந்து போச்சு. நான்தான் முழுச்சிங்கமாச் சேன்னு நரி கௌம்பிருச்சு வேட்டைக்கு. கூட ஒரு நொண்டி நரியத் தொணைக்குச் சேத்துக்கிருச்சு. யானக் கூட்டம் மேயற எடத்துக்குப் போயி சிங்கம் மாதிரியே பதிபோடுது நரி. வம்படியாத் தரையிர வால அடிக்குது.

சிங்கம் மாதிரியே எனக்கும் கண்ணு செவக்குதா பார்றா.

கொவப்பழமா செவந்திருக்குது ராசா. பொய் சொல்லுது நொண்டி நரி.

இப்ப நரி பாயுது யான மேல. சிங்கம் பாஞ்சா யான முதுகுல ஏறி உக்காந்து தலையில அடிச்சுத் தரையில போட்டுரும். இது சிங்கம்ன்னு பேருவச்ச நரிதானே.. இது யானத் துதிக்கையில போயி அடிக்கப்போச்சு. கடைசியில அது கொம்புல மாட்டிக்கொடல் அந்து செத்துப்போச்சு.

பெரிய மாமா! கால் சிங்கம் அரைச்சிங்கம்ன்னு பேரு வச்சுக்கிட்டாலும் சிங்கம் மாதிரி நாட்டாம பண்ண முடியுமா நரி? ஒங்க மகன் நரிதான். சீக்காக் கெடந்தாலும் நீங்க சிங்கம்தான்.

காலப்புடிச்சுவிட்டது சொகமா? இல்ல அவ கத சொன்னது சொகமா? சடையத்தேவரு கெறங்கிக் கெடந்தப்ப அடிச்சு எறக்குறா இன்னொரு ஆப்ப.

பெரிய மாமா! ஒங்க மகன் குடிகாரராப் போயிட்டாரு. போற எடம் வார எடம் சரியில்ல. எத வித்து எதத் திம்பாருன்னு தெரியாது; சொத்து எம்பேர்லயிருந்தா என்னைக்கும் அழியாது. எழுதி வையுங்க எம் பேர்ல சொத்தன்னு சொன்னா.

பெரிய குளத்துக்கு வைத்தியத்துக்குப் போற மாதிரி குதிரை வண்டியிலேயே கூட்டிட்டுப் போயிப் பத்திரமும் தன்பேர்ல பதிவு பண்ணிப்புட்டா.

பத்திரத்துலதான் தெரியுது அவ பேரு- பேயம்மா.

அடுத்து..

புருசனையும் போட்டுத் தள்ளிப்புட்டா.




சிங்கத்தையே கழுதையா மாத்துனவளுக்கு நரிய நாயா மாத்த எம்புட்டு நேரமாகும்? மாத்திப்புட்டா; தன் சவுரி முடிங்கிற சாட்டையில சும்மா பம்பரமாச் சுத்திச் சுழட்டி விட்டுட்டா கட்டையன.

சாராயங் குடிச்சுக் குடிச்சுச் சிறுகச் சிறுகச் செத்துப் போன நாக்குக்கு ஒறப்பா உப்புக்கண்டம் வறுத்துக் குடுத்தா. பானையில ஒளிச்சு வச்சிருந்த கஞ்சாவ எடுத்து இந்தான்னு நீட்டுனா. ஒறக்கம் வராமப் பெரண்டு பெரண்டு படுக்கிற குடிகாரப் பயலுக்குக் காதுக்குள்ள கோழி எறக விட்டு எளம் குடைசல் கொடஞ்சு கொடஞ்சு ஒறக்கத்த உண்டு பண்ணினா. அவன் ஊர் மேஞ்சு ஒலகம் சுத்தீ நடுச்சாமத்துல வந்து கதவத்தட்னாலும் சடுசோறு போட்டு விசிறிவிட்டா. அது என்ன எழவோ தெரியல... அவன் எப்பவும் கோழி கூப்பிடத்தான் காலத் தூக்கிப் போடறது; அதுக்கும் எனக்காச்சு ஒனக்காச்சுன்னு எப்பவும் ஈடு குடுத்தா. பல சகதி பெரண்ட பன்னிமாதிரி ராத்திரிக்கு அவன் வீட்டுக்கு வந்தாலும் விடிய்ய கொக்கு மாதிரி வெளியேற நித்தம் ஒரு வெள்ளவேட்டி வெளுத்து வச்சா. இதுலயெல்லாம் சொக்கிங்கண்ட கட்டையன அவ உக்கிப் போட்டு உக்கார வச்சுப்பிட்டா. அப்பன்கிட்டயிருந்து மகனப் பிரிச்சிட்டா அவளுக்கு ஆடுபுலி ஆட்டம் லேசு. *(தொடரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்டைதீவு பூமாவடி பூம்புகார் அருள்மிகு ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலய மகா குடமுழுக்கு - 08.06.2015



## நல்லை ஆதீன முதல்வரின் அருளாசிச் செய்தி

எண்சாண் உடலுக்கு சென்னி சிறந்தது என்பார்கள். அந்தவகையில் சப்த தீவுகளின் தலையாய் விளங்கும் மண்டைதீவினிலே அமர்ந்து மக்களுக்கெல்லாம் காவல் தெய்வமாய் விளங்கும் பூமாவடி பூம்புகார் அருள் மிகு ஸ்ரீ கண்ணகி அம்பாள் அன்னையின் திருப்பாதம் தொட்டு பணிவோமாக. கடல் அலைகளால் தாலாட்ட அன்னையவள் ஊருக்கே காவலாய் விளங்குபவள். அவள் இன்று குடமுழுக்கு காண்கிறாள் என்பதை எண்ணும் போது நெஞ்சம் பூரிப்படைகிறது.

வேண்டுவோர்க்கு வேண்டும் வரம் தந்து பக்தர்களுக் கெல்லாம் அருளாசிபுரியும் அன்னையவள் எம்மக்களின் இன்னல் தீர்த்து இன்புறச் செய்வாள் என வேண்டி அம் பாளின் பணியில் அயராது செயற்படும் அனைவருக்கும் எனது பாராட்டுக் களையும் தெரிவித்து அமைகின்றேன்.

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த**
**பரமாச்சாரிய சுவாமிகள், நல்லை ஆதீனம்**

## குடமுழுக்கு விழாவின் பிரதம குருவின் ஆசியுரை

**'குணதிசை கரையினிலே நீ அமர**
**இடம் காட்டி அமர்ந்த தாயே'**

தன்னை நாடி வரும் அடியவர்களின் கண்ணீரைத் துடைத்து கவலைகளை போக்கி பல அற்புதங்களை புரிகின்ற அகில உலக நாயகியாக மண்டைதீவு பூமாவடி பூம்புகாரில் வீற்றிருந்து அருள்பாலிக்கின்ற கண்ணகை அம்பாளின் மாபெரும் குட முழுக்கு விழா.

அம்பாளின் ஆலயத்தை அரும்பாடுபட்டு அமைத்த பரிபாலனசபை தர்மகர்த்தாக்கள் மற்றும் அம்பாளின் அடியவர்கள் அனைவருக்கும் குடமுழுக்கு விழாவின் பலன் நன்மையாக கிடைக்க எல்லாம் வல்ல கண் ணகியின் பாதம் பணிந்து வணங்குகிறேன்.

**சபாபதிப்பிள்ளை விஜயகுமாரன்,**
**குடமுழுக்கு விழாவின் பிரதம பூசகர்,**
**மண்டைதீவு கண்ணகை அம்மன் ஆலய**
**பிரதம பூசகர்.**

## குடமுழுக்குக் கண்டு குளிர்ந்திடுவாய் தாயே !

கலங்கரை விளக்காக காவல் தெய்வமாக
கடலலை தாலாட்ட களிப்புடன் வந்தமர்ந்தாய்
கற்புக்கரசியாய் காவியம் படைத்து
அற்புதத் தெய்வமாகி அருளாட்சி புரிந்து
மானிடப் பெண்ணாய் நின்று
மானிலத்தில் மனு நீதிக்காய்
வழக்குரைத்து வாதாடி வென்றாய்
வானுலகில் தெய்வமாகி நின்றாய்
கண்ணுக்கிமையாகி கற்புக்கோர் தெய்வமாகி
மண்ணில் உதிக்கின்ற மாயைக்கு ஒளியாகி
மண்டை நகர் பூமாவடி எனும் பூம்புகாரில்
தாயாய் வந்தமர்ந்த தாயே நின் தனக்கு
பால் தயிர் பழம் தான் கொண்டு
பக்குவமாய் நீராட்டி
பூமாலை பாமாலை புனைந்தேத்தி
தூப தீபம் தான் காட்டி
தாயவள் தண்ணொளி பரப்பிடும்
குளிர்த்தி கண்டு குளிர்ந்திடவும்

## கண்ணகியின் பாதம் பணிந்து

**தேரா மன்னா செப்புவதுடையேன்** என்று பாண்டிய மன்னனிடம் நீதி கேட்டு வாதாடிய கற்புக்கனலியாம் எங்கள் கண்ணகித்தாய் மண்டைதீவிலே பூமாவடி பூம்புகார் எனும் திருத்தலத்தே எழுந்தருளி பேரருள் நல்கி நிற்கின்றாள் அறியாமை எனும் இருளில் மூழ்கி அடியவர்கள் செய்யும் குற்றங்ளையும் கடிந்து திருவருள் பாலித்து நிற்கும் எங்கள் அன்னை தீவினைகளைச் சுட்டெரிக்கும் பெருநெருப்பாய் ஒளி வீசிக்கொண்டிருக்கின்றாள். பொய்மைகளும் போலி களும் வீண் சண்டை சச்சரவுகளும் தலை விரித்தாடும் இன்றைய சூழலில் குடமுழுக்குக் காணும் எமது தாயார் மதுரையை எதிர்த்து அன்று அறத்தை நிலைநாட்டியது போல தீமைகளைப் பொசுக்கி நன்மைகள் செழிப்புற் றோங்க பேரருள் நல்க வேண்டு மென்று உளமார வேண்டி நிற்கின்றோம்.

2011 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை கண்ணகி ஆலய வளர்ச்சிக்கு உதவிய அனைத்து அடியவர்களுக் கும் நன்றிகளைத் தெரிவிக்கின்றேன். இன்று குடமுழுக்கு விழா காணும் அன்னையின் பாதம் பணிந்திடுவோம்.

**வீ.சோமசுந்தரம்**
**தலைவர்**
**கண்ணகை அம்மன் ஆலய**
**பரிபாலன சபை.**

அடியவர் தமக்கமுதளிக்கும்
குடமுழுக்கு பெருவிழாக்காண வாரீர்
தின்ன முறு கண்ணகியாள்
வண்ணமுறு பெருவிழாக்காண்பது
மண்ணில் பிறந்தார் பெறும் பயன் அன்றோ.

**கனகரத்தினம் கணேஸ்**
**பொருளாளர்**
**கண்ணகை அம்மன்**
**பரிபால சபை.**

தலைத்தீவின் தலைமகள்
அலைகடலின் அலைமகள்
குறைதீர்க்கும் குலமகள்
குடமுழுக்கு நன்னாளில்
குவலயம் சிறக்க வாழ்த்துகின்றோம்....

**இந்து இளைஞர் மன்றம், மண்டைதீவு**

## மண்டைதீவு பூம்புகார் ஸ்ரீ கண்ண

மண்டைதீவு அரசினர் வைத்தியசாலைக்கு 1945 - [illegible]0-ம் ஆண் தந்த எல்லோராலும் சுவாமியார் என அன்பாக அழைக்கப்பட்டு வந்த ஓம ஆலய தரிசனம் செய்ய தமிழ்நாடு சென்ற சமயம் கங்கையில் நீராடும் பொழுது, அது எம் பெருமாட்டி கண்ணகையின் திருவுருவச் சிலை. இ பரவசத்துடனும் அம்பாளின் திருவுருவை பூஜை செய்து வழிபட்டு வந்தார் தினமும் பல திருக் காட்சிகளை காட்டிவந்தார் அன்னை திடீரென ஒருநா தெய்வீகம் நிறைந்ததோர் இடத்தில் தனக்கென ஒரு ஆலயத்தை அமை விளங்கிய திருவாளர்களான கந்தையா சபாபதிப்பிள்ளை, குழந்தை க ஆரூரபிள்ளை சேதுராசா, சடையர் சோமசுந்தரம் ஆகியோரின் துணையு சிறு ஆலயமாக அமைத்து பொதுமக்களும் அம்பாளின் தரிசனத்தை

அன்னையவள் அற்புதங்களில் பக்திவயப்பட்ட பெரும் பக்தர் கூட்டம் ஆண்டு சட்டரீதியாக ஆலயம் அமைந்துள்ள காணியினை அன்னைக்கு பகுதியில் இவ்வாலய பரிபாலனத்தை மண்டைதீவு சைவப் பொது மக் ஆலய பரிபாலன சபை இயக்கம் பெற்றசமயம் பல நிலைகளில் பரிமா மண்டபம், அன்னதான மண்டபம் என்பன அமைக்கப்பட்டது. இவ்வேளை பிள்ளையார் ஆலயத்தை அமைத்து உபயமளித்தார்.

குப்புசாமி ஐயா திருநிலைப் பேறடைய அவரது தலையாய சீடரான புனஸ்காரங்கள் செய்து பக்தர்களை பரவசத்தில் ஆழ்த்தி வந்தார். இக்கா முடியாத காரணங்களின் நிமிர்த்தம் வெளியேற, அவர்களது உறவின சின்னத்தம்பு ஏகாம்பரம் ஆகியோர் தர்மகர்த்தாக்களாக நியமிக்கப்பட்ட திருவாளர் கு.கனகரத்தினம் பொறுப்பேற்று மிகவும் சிற[illegible]க நடாத்தி அடுத்த நிலைப் பூசகர் திரு சொ.கைலாசநாதனும் திறம்பட செயலாற்றி இணைத்துக் கொள்ளப்பட்டார். இவருக்கு அடுத்தபடியாக குப்புசாமி ஐ விடத்திற்கு திரு சிவஞானம் செல்வராசா தெரிவு செய்யப்பட்டார்.

பூசகர்திருவாளர் கு.கனகரட்ணம் அவர்கள் தொழில் நிமிர்த்தம் வேறி யாற்றிய தலைமைப் பூசகர் சபாபதிப்பிள்ளை அவர்களின் புதல்வர் திரு செய்தது. அன்று முதல் இன்றுவரை மிகவும் நேர்த்தியாகவும் பக்தி இக்காலகட்டத்தில் கனகரட்ணம் திருமாறன், கைலாசநாதன் கயிலைவா புதிய தர்மகர்த்தாக்களாக நியமிக்கப்பட்டனர்.

தொடர்ச்சியாக படிநிலை வளர்ச்சி கண்டு வந்த ஆலயத்தை இடம் அயராத உழைப்பின் பயனாக நாற்புற சுவர்களை அமைத்து கர்ப்பக்கிர கோபுரம், மடப்பள்ளி, அன்னதான மண்டபம் ஆகியவற்றை பொதுமக் களின் உதவியுடனும் சிறந்த முறையில் மின்னிணைப்பையும் ஏற்படுத்தி. அம்பாளுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் மகா கும்பாபிஷேக விழா நடை


## கண்ணகையே அருள் தருவாய்

தெட்சண கைலாசம் என வர்ணிக்கப்படுகின்ற இலங்கைத் தீவின் வடக்கே அமைந்துள்ள யாழ்.மாவட்டத்தின் சப்த தீவுகளின் தலைத் தீவான மண்டைதீவின் கிழக்கே அலைகடலருகேயமர்ந்திருந்து அரு ளாட்சி புரியும் கண்ணகை தாயின் கும்பாபிஷேகப் பெருவிழா அனைத்து சைவ மக்களின் மனதை புளகாங்கிதமடையச் செய்கின்றது.

அன்னையின் ஆலயம் அடியார்களின் அயராத முயற்சியால் புதுப் பொலிவுடன் குறுகிய காலத்தில் மிளிர்வது தாயின் பெருங்கரு ணையே ஆகும். அம்பாளின் பூசகர்களின் தலைமுறை தலை முறையாக தன்னலமற்று செய்யப்படும் பூசை, அபிஷேக ஆராதனை கள் விருத்தியடைந்து வருவது கண்கூடு. அன்னையின் ஊர்வலம் அதனை தொடர்ந்து வரும் பொங்கல் விழா ஒன்றையொன்று விஞ்சும் வண்ணத்தில் அமைந்தவையாகும். சப்த தீவுகளின் அரசியான எம்தாய் தான் மனமுவந்து அமர்ந்த புனித ஷேத்திரமே இப் பூம்புகார் திருத்தலமாகும். அம்பாளின் கும்பாபிஷேக பெருவிழா மிகவும் சிறப்புற அமைய அன்னையின் அருளை வேண்டிநிற்கும்.

**ஆலய பரிபாலனசபை**
**கண்டுப்புளியடி சிவ உக்கிர வீரபத்திரர் ஆலயம்**
**மண்டைதீவு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## ...ன்னகை அம்மன் ஆலய வரலாறு

ஆண்...ளுக்கிடைக்கப்பட்ட காலப்பகுதியில் பணியின் நிமிர்த்தம் வருகை ...ந்த ஓமந்தையை பிறப்பிடமாக கொண்ட திருவாளர் குப்புசாமி ஐயா அவர்கள் ...நீராடும் போது ஒரு பொருள் அவர் காலில் தென்பட அதை எடுத்து பார்த்த ...லை. இதைக் கண்ணுற்ற சுவாமியார் அவர்கள் பேரானந்தத்துடனும் பக்திப் ...வந்தார். அவ்வாறு அவர் வழிபட்டு வரும் காலத்தில், அவரது சொப்பனத்தில் ... ஒருநாள், தனக்கு ஆழ்கடல் ஆர்ப்பரிக்கும் நந்திக் கொட்டணைகள் படர்ந்த ... அமைத்து வணங்குமாறு தெரிவிக்கவே, அவர் அவ்வூரில் ஆசார சீலராக ...தை கனகரட்ணம், கனகசபை சோமசுந்தரம், சோமசுந்தரம் சுப்பிரமணியம், ...ணையுடன் 1950-ம் ஆண்டு மண்டைதீவு கீழ்த்திசையின் பூம்புகார் பகுதியில் ...தை பெறவழி சமைத்து மேன்மை கண்டார்.

...வட்டம் ஒன்று உருவாக திருவளும் துணை புரிந்தது. அதன் பயனாக 1955-ம் ...னைக்கு உரித்தாக்கி ஒரு அழகிய கர்ப்பக்கிரகத்தை அமைத்தனர். அக்காலப் ...து மக்களுக்கு உரித்தாக்கி. பரிபாலன சபை அமைக்கப்பட்டதாக வரலாறு. ... பரிமாண வளர்ச்சி கண்டு கர்ப்பக்கிரகத்திற்கு முன் மகா மண்டபம், தரிசன ...வ்வேளை அன்னையின் தீவிர பக்தனான திரு.நா.கி.தனஞ்செயன் அவர்கள்

...ரான உயர்திரு பூசகர் க.சபாபதிப்பிள்ளை அவர்கள் அவர் வழியில் பூஜை ... இக்காலத்தில் ஆரம்பகால தர்மகர்த்தா சபை உறுப்பினர்கள் சிலர் தவிர்க்க ...உறவினர்களான சோமசுந்தரம் கைலாசநாதர், நமசிவாயம் நடனசபாபதி, ...கப்பட்டனர். அத்தருணம் தலைப்பூசகர் சிவப்பேறடைய அப் பொறுப்பினை ...டாத்தி...ார். அச்சமயம் ஒருமுறை அவர் செய்ய முடியாத நிலை ஏற்பட ...பலாற்றி வருகையில் திரு தம்பு பேரின்பநாதன் அவர்கள் தர்மகர்த்தாவாக ...சாமி ஐயாவின் இடத்திற்க அவருடையவாரிசுகள் வராத காரணத்தால் அவ்

...ம் வேறிடம் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட, அவருக்கு உதவியாக பணி ...ர் திரு ச.விஜயகுமாரனை பூசகரின் சம்மதத்துடன் சபை பூசகராக நியமனம் ...ம் பக்தியுடனும் ஈடு இணையற்ற வகையில் கடமையாற்றி வருகின்றார். ...லைவாசன், ஏகாம்பரம் மனோகரன், சோமசுந்தரம் பத்மநாதன் ஆகியோர்

... இடம் பெயர்விற்கு பின்னர் பொறுப்பேற்றுக் கொண்ட நிர்வாக சபையின் ...ப்பக்கிரக பிள்ளையார், வைரவர், காத்தவராயர் ஆலயங்கள், மணிக்கூட்டு ...ாதுமக்கள் வழங்கிய நிதியுடனும் புலம்பெயர் உறவுகள் மற்றும் செல்வந்தர் ...படுத்தி. எழில் வண்ணமுடன் அமைத்து இன்றைய நாள் அன்னை கண்ணகை ...ா நடைபெறுகின்றமை அன்னையின் திருவருளேயன்றி மிகையல்ல.

## கற்பிற்கு இலக்கணமானவளே

மேற்படி ஆலயம் ஒரு நூற்றாண்டு காலத்தை அண்மித்தவரை பேரருள் பாலித்து கொண்டிருக்கிறது. 1940-ம் ஆண்டளவில் சிறு குடில் ஆலயமாக ஆரம்பித்து இன்று கும்பாபிஷேகப் பெருவிழாக் காணும் பேரானந்தப் பேறு பெற்றோரும் மதுரை மாநகர் எப்போதுமே கண்டிராத பேரழிவைக் கண்டது. மதுரையில் உள்ளோர் பயந்து நடுங்கினர். செய்வது ஏதுமறியாமல் திகைத்தனர்.

தன் கணவனைக் கள்வன் எனக் குற்றம் சாட்டி கொன்றதை அறிந்து கொதித்தெழுந்து தன் ஒற்றைச் சிலம்பை உடைத்துச் சிதறி தன் கணவன் கள்வன் அல்ல என்று நிரூபித்து இவ் உலகில் மானிடப் பிறவியாக வாழ்ந்து தெய்வமானாள் கண்ணகி.

அந்தப் பத்தினித் தெய்வம் அமைத்து வழிபடுதலில் நம்மை நாம் தூய்மைப்படுத்தி வாழ்கிறோம். அந்தவகையில் நம் மூதாதையோர் மரபு வழியாக பூசைகள், பிரார்த்தனைகள் கண்டு பெருமகிழ்வோடு வாழ்கிறோம். இப்பெரும் பக்தியைப் பெற முயற்சித்த அனைவருக்கும் சிரம் தாழ்த்தி வணங்கின்றேன்.

**க.பரமானந்தம்**
**ஓய்வு நிலை அரச கணக்காய்வாளர்**
**தலைவர் : ஸ்ரீ.கற்பகவிநாயகர் ஆலய பரிபாலன சபை - மண்டைதீவு**

## அடியார்களுக்கு உயர்வளித்து உளம் மகிழும் அன்னை

எமது குலதெய்வமாகிய அன்னை கண்ணகையின் குடமுழுக்கு விழா சிறப்புற வாழ்த்துவதுடன் இந்த இறைபணியில் தம்மை அர்ப்பணித்து பணியாற்றிய ஆலய நிர்வாக சபையினர், புனருத்தாரண வேலைகளை பொறுப்பேற்று உபயமளித்தோர், ஆலய பூசகர், தர்மகர்த்தா சபையினர், ஆலயத்தை வடிவமைத்த ஆசாரியர்கள், உதவியாளர்கள், அன்னையின் அடியார்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்து இவ் விழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்க அருள் பாலித்த அன்னைக்கு முதல் வணக்கம்.

தீவகத்தின் சிரசென போற்றப்படும் சித்தர்கள் உலாவிய திவ்வியம் நிறைந்த மாண்புறு மண்டைதீவு கீழ்த்திசையில் பூம்புகார் என்னும் புனித மண்ணில் காவல் தெய்வமாக வீற்றிருந்து அருள் பாலிக்கும் மாதரசி மாதுமை பற்றி சிலவரிகள்.

இற்றைக்கு சுமார் நாற்பது ஆண்டுகள் முற்பட்ட காலம் எமக்கு ஆன்மீகத்தில் ஆர்வம் தோன்றாத வேளை எமது பகுதியின் சமூக சேவையாளர்களான நமது முன்னோரும் அம்பாளின் தீவிர பக்தர்களுமான அமரர் உயர்திரு ந.தாமோதரம்பிள்ளை, உயர்திரு ந.இ.தனஞ்செயன், திருவாளர்கள் ந.நடேசமூர்த்தி, வீ.சோமசுந்தரம், அ.ஜெயகுணதிலகம், சி.வைரவநாதர், கு.க.நடராசன் ஆகியோரின் முயற்சியினால் நானும் எனது நண்பர்களான திரு.ச.இரத்தினகுமாரன், திரு ஏ.எஸ்.சோமசுந்தரம் இன்னும் பல நண்பர்களுமாக ஆலய நிர்வாக சபையில் இணைந்து கொண்டோம். அந்நாள் எமது மண் மறுமலர்ச்சி நோக்கி பயணிக்கத் தொடங்கிய நாளாக உணர்கின்றேன். அந்நாள் எங்களை புதிய சிந்தனையாளர்களாக மாற்ற அன்னைக்கும் எமக்கும் ஆன்மீக பிணைப்பை ஏற்படுத்திய நாள். அன்றுமுதல் இன்றுவரை அன்னையவளிடம் நாம் கண்ட அற்புதங்கள் எண்ணிலடங்காதவையே.

தன்னை நாடிவந்தோர்க்கு நல்வாழ்வும் உயர்வும் அளித்து அருள்பாலித்தவர் எம் அன்னை என்றால் அது மிகையாகாது. காவல் தெய்வமாய் கற்புக்கிலக்கணமாய் வீரத்தின் விளை நிலமாய் அருள்பாலிக்கும் அன்னையாய் நின்று காவிய நாயகியாகிய எமது அன்புத் தெய்வம் தற்போது எமது மண்ணில் இடம்பெறும் பாதக செயல்கள் யாவற்றையும் இல்லாதொழித்து நாமெல்லோரும் சகல நலமும் வளமும் பெற்று நம் மண்ணில் நாமாக வாழ இப்புனித நாளில் அருள் புரிவாராக.

**அருளானந்தம் ஸ்ரீ பத்மராசா J.P**
**தலைவர்**
**மண்டைதீவு வேப்பந்திடல்**
**ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய**
**பரிபாலன சபை மண்டைதீவு.**

## செயலாளரின் வாழ்த்துச் செய்தி

ஈழத்தின் வடபால் சப்த தீவுகளின் தலையாய் அமைந்த சிரபுரம் என போற்றப்படும் சைவமும் தமிழும் தழைத்தோங்கும் மண்டையம் பதியில் பூம்புகாரென சிறப்புற அழைக்கப்படும் பூவாடி அமைந்திருந்து பிற்காலத்தில் பூமாவடியென மறுநாமம் கொண்ட புனித மண்ணில் கடல் அன்னை தாலாட்டும் அற்புத சூழலில் இற்றைக்கு முக்கால் நூற்றாண்டிற்கு முற்பட்ட காலத்தில் எமது முன்னோர்களால் சிறு குடிசை அமைத்து வழிபட்டு வந்த இவ்வாலயம் பரிபாலன சபையின் அயராத முயற்சியினாலும் பொது மக்கள், புலம் பெயர்ந்து வாழும் அன்னையின் அடியார்களின் பங்களிப்புடனும் படிநிலைகளில் வளர்ச்சியுற்று இன்று கர்ப்பக்கிரகம் அதனைச் சார்ந்த மண்டபங்கள், பரிவார மூர்த்திகளின் ஆலயங்கள், மணிக் கோபுரம், மடப் பள்ளி, அன்னதான மண்டபம், நாற்புற சுவர்கள் என அழகிய வண்ணத்தில் வடிவமைக்கப்பட்டு எமது அன்புத் தெய்வமாகிய கண்ணகை அம்பாளுக்கும், பரிவார மூர்த்திகளுக்கும் இன்று நடைபெறும் குடமுழுக்கு விழா எமது மண்ணுக்கும், மக்களுக்கும் விமோசனத்தை வழங்கும் திருநாளாக அமைய வேண்டி வாழ்த்தி வணங்குகின்றேன்.

ஆலயம் சிறப்புற விளங்க உதவிய அன்புள்ளம் கொண்ட அனைவருக்கும் பரிபாலன சபையின் சார்பாக உளமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொண்டு நாடி நின்றோர் நலம் காத்து குன்றா அருள்பாலிக்கும் எம்தாய் கொற்றவை எந்நாளும் எமக்கெல்லாம் துணையாய் நின்று நல்வழிகாட்ட அவள்பாதார விந்தங்களை பணிந்து வேண்டுகின்றேன்.

**சீவரத்தினம் மகேந்திரராசா**
**செயலாளர் : மண்டைதீவு பூம்புகார் ஸ்ரீ கண்ணகை அம்பாள் ஆலய பரிபாலன சபை மண்டைதீவு**

வடமாகாணத்தில் தீவகத்தின் தலைத்தீவு என அழைக்கப்படும் மண்டைதீவின் கிழக்குதிசையில் கடல் சூழ அமர்ந்துள்ள பூமாவடி பூம்புகாரில் அமர்ந்துள்ள அருள்மிகு ஸ்ரீ கண்ணகை அம்பாளுக்கு 08.06.2015 திங்கட்கிழமையன்று அம்பாளுக்கு மகா கும்பாபிஷேக நிகழ்வை காணுகின்ற பக்த அடியவர்களுக்கும் நல்லருளும் நல்லாசியும் கிடைக்க கண்ணகை அம்பாளை வாழ்த்துகின்றேன்.

**தர்மகர்த்தா : பஞ்சாட்சரம் - கோவைச்செல்வன்**
**முகப்பு வயல் சிவசுப்பிரமணியசுவாமி கோயில்**
**மண்டைதீவு**

## மண்ணில் நல்லவண்ணம் வாழ கண்ணகியே அருள்புரிவாய்

ஸ்ரீமத் தட்சிணகைலாசம் எனப் போற்றப்படுகின்ற இலங்காதுபீவத்தின் வடபால் யாழ்ப்பாண மாவட்டத்தில் சப்த தீவுகளில் ஒன்றாக விளங்கும் மண்டைதீவுப் பதியினில் பூம்புகாரில் இருந்து தன்னை நாடி வரும் அடியார்களுக்கு அருளை வாரி வழங்கி வேண்டுவோர் வேண்டுவதை தந்தருள்கின்ற அன்னையின் ஆலயம் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு மஹா கும்பாபிஷேகம் செய்வதற்கு திருவருள் கைகூடியிருப்பது மிகவும் மகிழ்வினைத் தருகின்றது. அனைவருக்கும் கண்ணகித் தாயின் அருள் பெற்று மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோமாக !

**சாம்பலோடை கண்ணகை அம்மன்**
**தேவஸ்தானம் மண்டைதீவு.**

## கண்ணகித்தாயின் கருணை எம் மண்ணில் மலரட்டும்

இயற்கை எழில் கொஞ்சும் எம் கிராமத்தில் கிழக்குக் கரையோரம் கடலலைகள் தாலாட்ட இளந்தென்றல் இசைபாட விருப்புடன் வீற்றிருந்துவருடா வருடம் எம் ஊர் மனைகள் தோறும் வீதி உலாவந்து அருட் கண்பார்வையால் அல்லல் களைந்திடும் காக்கும் தெய்வமாம் கண்ணகித் தாய்க்கு இன்று குடமுழுக்கு பெருவிழா நடைபெறுவதையிட்டு எம் உள்ளம் பூரிப்படைகின்றது. இத்தருணத்தில் நேர்மையும் சுபீட்சமும் எம் மண்ணில் மலர தாயவள் தாள் பணிந்து வேண்டுகின்றேன்.

**அறங்காவலர் திருவெண்காடு**
**சித்திவிநாயகர்தேவஸ்தானம் - மண்டைதீவு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துறைமுக நகரத் திட்டத்துக்காக கையேந்தும் சீனா?

தற்போது கொழும்புத் துறைமுக நகரத் திட்டத்தைத் தொடர்வதற்கு சிறிலங்கா அரசாங்கத்தின் அனுமதியைப் பெற்றுத் தருமாறு சீனா, இந்தியாவிடம் கையேந்தி நிற்கிறது. இது நடைமுறை உண்மையாகும்.

**இவ்வாறு சிலோன் ருடே நாளிதழில் உபுல் *ஜோசப் பெர்னான்டோ* எழுதியுள்ள கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.**

கொழும்பில் போக்குவரத்து நெரிசலில் அகப்பட்டிருந்த முச்சக்கரவண்டி ஒன்றில் 'நாங்கள் கொழும்புத் துறைமுக நகரத் திட்டத்திற்கு ஆதரவளிக்கிறோம்' என்கின்ற வாசகம் அடங்கிய ஸ்டிக்கர் ஒட்டப்பட்டிருந்தது. முச்சக்கர வண்டியின் நடுவில் பூர்த்தியாக்கப்பட்ட கொழும்பு துறைமுக நகரத் திட்டத்தின் ஒளிப்படமும் காணப்பட்டது.

இது தொடர்பாக ஊடகவியலாளர்கள் குறித்த வாடகை முச்சக்கர வண்டி ஓட்டுநரிடம் வினவிய போது, இவ்வாறான ஒரு சுவரொட்டியைத் தனது வாகனத்தில் ஒட்டுமாறு தனக்குப் பணிக்கப்பட்டதாகவும் அதற்காக பணம் வழங்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

இதுபோன்ற பல வாடகை முச்சக்கர வண்டிகளில் கொழும்புத் துறைமுக நகரத் திட்டத்தை ஆதரிப்பது தொடர்பான வாசகம் மற்றும் ஒளிப்படத்தை ஒட்டுவதற்கு அதிக நிதி செலவிடப்பட்டிருக்கும்.

இத்திட்டத்தை சிறிலங்காவின் புதிய அரசாங்கம் இடைநிறுத்திய பின்னர் சீன அரசாங்கம் கொழும்பு துறைமுக நகரத் திட்டத்திற்கு மக்களின் ஆதரவைப் பெற்றுக் கொள்வதற்காக அதிகளவான நிதியைச் செலவிடத் தொடங்கியுள்ளது.

துறைமுக நகரத் திட்டத்தை ஆதரிப்பதற்கான சீன அரசாங்கத்தின் பரப்புரையானது சிறிலங்காவிலுள்ள முன்னணி விளம்பரதாரர் நிறுவனம் ஒன்றினால் முன்னெடுக்கப்படுகிறது.

இந்த விளம்பரப்படுத்தல் பரப்புரையைத் தொடர்ந்து கடந்த வாரம் இத்திட்டத்தை மீளவும் ஆரம்பிப்பது தொடர்பாகப் பரிசீலிப்பதற்காக சிறிலங்கா பிரதமரின் செயலாளரின் தலைமையில் ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

சிறிலங்காப் பிரதமர் ரணிலின் மைத்துனரான பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் றுவான் விஜயவர்த்தன சிங்கப்பூரில் இடம்பெற்ற சங்ரிலா-2015 மாநாட்டில் (Shang rilla La Dialogue) கலந்து கொண்ட பின்னரே கொழும்புத் துறைமுக நகரத் திட்டத்தைப் பரிசீலிப்பதற்கான ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இந்த மாநாட்டில் சீன மக்கள் விடுதலை இராணுவத்தின் பிரதித் தலைமை அதிகாரியை சிறிலங்காவின் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் றுவான் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார்.

'மைத்திரிபால சிறிசேன அரசாங்கம் சீனாவுடன் முறிவடைந்துள்ள உறவை மீண்டும் புதுப்பிப்பதற்கான முயற்சியில் ஈடுபடுகிறது. தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ள 1.4 பில்லியன் டொலர் பெறுமதியான கொழும்பு துறைமுக நகரத்திட்டமானது சிறிலங்காப் பிரதமரின் செயலாளரின் தலைமையிலான ஆணைக்குழுவால் தற்போது பரிசீலிக்கப்படுகிறது. இந்த ஆணைக்குழு இத்திட்டத்தைத் தொடர்வதிலுள்ள தடைகள் தொடர்பாக ஆராய்கிறது.

இந்நிலையில் சீனாவுடனான பாதுகாப்பு ஒத்துழைப்பு மீளவும் நிலைநாட்டப்படும்' என சிறிலங்கா பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் றுவான் விஜயவர்த்தன, சிங்கப்பூரில் சீன இராணுவ உயர் அதிகாரியைச் சந்தித்துப் பேச்சு நடத்தியமை தொடர்பாக 'நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்' செய்தித்தாளில் வெளியிடப்பட்டுள்ளது.

சிறிலங்காவின் முப்படைகளின் தளபதிகளுடன் சிங்கப்பூரில் இடம்பெற்ற மாநாட்டில் கலந்துகொள்வதற்காகச் சென்றிருந்த சிறிலங்காவின் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் றுவான் விஜயவர்த்தன சீன மக்கள் விடுதலை இராணுவத்தின் பிரதித் தலைமை அதிகாரியான அட்மிரல் சண் ஜியங்குவாவைச் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார்.

இச்சந்திப்பின்போது, 2014 இல் மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில் சிறிலங்காவுக்கும் சீனாவுக்கும் இடையில் கட்டியெழுப்பப்பட்ட பாதுகாப்பு சார் பேச்சுவார்த்தைகள் இரு நாடுகளினதும் பாதுகாப்பு ஒத்துழைப்பிற்கு 'மிக முக்கிய பொறிமுறையாகக்' காணப்படுவதாக இரு தரப்புப் பிரதிநிதிகளும் ஏற்றுக்கொண்டனர் என நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

பாதுகாப்பு விடயங்களில் சீனா தொடர்ந்தும் சிறிலங்காவுக்கு உதவும் என ஜியங்கோ தெரிவித்த அதேவேளையில், இவ்வாண்டு இறுதியில் சிறிலங்காவில் இடம்பெறவுள்ள இரண்டாவது, சிறிலங்கா- சீனா பாதுகாப்பு மாநாட்டில் சீனா பங்களிக்க வேண்டும் எனவும் இதனை சிறிலங்கா மிகவும் ஆவலுடன் எதிர்பார்ப்பதாகவும் றுவான் விஜயவர்த்தன குறிப்பிட்டிருந்தார்.

ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில் சீனாவின் அணுவாயுத நீர்மூழ்கிக் கப்பல்கள் கொழும்பில் தரித்து நின்றதன் பின்னர் சீனாவுடனான சிறிலங்காவின் பாதுகாப்பு உறவு தொடர்பாக அமெரிக்காவும் இந்தியாவும் விழிப்புடன் உள்ளன. சீன நிதியுதவியுடன் சிறிலங்காவில் அமைக்கப்பட்ட அம்பாந்தோட்டை மற்றும் கொழும்புத் துறைமுகத் திட்டங்கள் மற்றும் கொழும்புத் துறைமுக நகரத் திட்டம் போன்றன இந்திய மாக்கடலில் சீனா தனது செல்வாக்கைப் பலப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் 'முத்துமாலைத் திட்டத்தின்' ஒரு பகுதியாகவே நோக்கப்படுகிறது.

மைத்திரிபால சிறிசேன இவ்வாண்டு ஜனவரி மாதத்தில் சிறிலங்காவின் ஜனாதிபதியாகப் பொறுப்பேற்ற போது சீனத் திட்டங்கள் சிலவற்றை இடைநிறுத்தியிருந்தார். ஆனால் சீன அரசாங்கம் இதனை நிறுத்த விரும்பவில்லை. கொழும்புத் துறை முக நகரத் திட்டத்தை அமுல்படுத்துவ தற்காக சீன நிறுவனத்திற்கு சிறிய தொகு நிலப்பகுதியை வழங்குவதானது சிறிலங்காவின் இறையாண்மையைப் பாதிக்கின்றது என்பதை அனைத்துலகச் சட்டம் மறுதலிப்பதாக மார்ச் 17 அன்று கொழும்பிலுள்ள சீனத் தூதரகத்தின் பேச்சாளர் சோக் ஜோங்செய்ங் சுட்டிக்காட்டியிருந்தார்.

சீனாவின் விளம்பரப்படுத்தல் பரப்புரை, சிங்கப்பூர் சந்திப்பு மற்றும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கும் சீன அதிபருக்கும் இடையிலான சந்திப்பு போன்றன ஒன்றுக்கொன்று தொடர்பற்ற நிலையில் ஆணைக்குழு அமைக்கப்பட்டிருக்கலாம்.

அண்மையில் இந்தியப் பிரதமர் சீனாவுக்குப் பயணம் செய்தபோது இவ்விரு நாட்டுத் தலைவர்களும் தென்னாசியா தொடர்பாகவும சிறிலங்காவின் கொழும்புத் துறைமுக நகரத் திட்டம் தொடர்பாகவும் கலந்துரையாடியிருககலாம் என ஊடகங்கள் தெரிவித்திருந்தன.

சிறிலங்காவின் துறைமுக நகரத் திட்டத்தின் எதிர்காலம் என்ன என்பது தொடர்பாக இந்தியப் பிரதமரிடம் சீனத் தலைமை விசாரித்திருக்காவிட்டால் அது தொடர்பாக ஆச்சரியப்பட்டிருக்க முடியும்.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் சீனாவுக்கான தனது உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டிருந்த போது, சிறிலங்கா வாழ் தமிழ் மக்களின் பிரசசினையை மகிந்த ராஜபக்ச அரசாங்கம் தீர்க்க வேண்டும் என சீனா அழுத்தம் கொடுக்க வேண்டும் என இந்தியப் பிரதமர் கோரியிருந்தார். ஏனெனில் சீனாவுக்கும் மகிந்த ராஜபக்சவுக்கும் இடையிலான நெருங்கிய உறவுநிலை காரணமாக, மகிந்த மீது சீனாவால் மட்டுமே அழுத்தம் கொடுக்க முடியும்.

இதன் பின்னர் கொழும்பை வந்தடைந்த சீனப் பிரதிநிதிகள் குழு, ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் அழுத்தத்திலிருந்து விடுதலை பெறுவதற்காக தமிழர் விவகாரம் தொடர்பாகத் தீர்வு காண வேண்டும் என மகிந்த ராஜபக்சவிடம் கோரியது. இந்த நிலை தற்போது தலைகீழாக மாறியுள்ளது.



தற்போது கொழும்புத் துறைமுக நகரத் திட்டத்தைத் தொடர்வதற்கு சிறிலங்கா அரசாங்கத்தின் அனுமதியைப் பெற்றுத் தருமாறு சீனா, இந்தியாவிடம் கையேந்தி நிற்கிறது. இது நடைமுறை உண்மையாகும்.

மைத்திரி அரசாங்கம் கொழும்பு துறைமுக நகரத் திட்டத்தை இடைநிறுத்திய பின்னர் சீனா பீதியடைந்தது. கல்விச் சுற்றுலாவில் சீனாவுக்குச் செல்வதற்கான வாய்ப்பு சில சிறிலங்கா ஊடகவியலாளர்களுக்கு வழங்கப்பட்டது. இந்த ஊடகவியலாளர்கள் சீன அதிகாரிகளைச் சந்தித்தபோது துறைமுக நகரத் திட்டத்தை இடைநிறுத்தியமை தொடர்பாக கவலை கொள்வதாக சீன அதிகாரிகள் தெரிவித்திருந்தனர்.

இதன்பின்னரே, இத்திட்டத்தைத் தொடர்வதற்கான பரப்புரைகளில் சீனா ஈடுபடத் தொடங்கியது. இதற்காக, மைத்திரியின் தேரதல் வெற்றியை உறுதிப்படுத்துவதற்கான பரப்புரைகளில் ஈடுபட்ட முன்னணி விளம்பர நிறுவனம் ஒன்றை சீனா தனது பரப்புரைக்காகத் தேர்ந்தெடுத்தது.

சீனாவால் எடுக்கப்பட்ட இத்தகைய முயற்சிகளை சிறிலங்கா அரசாங்கம் சாதாரணமாக எடைபோட முடியாது. சிறிலங்கா வாழ் மக்களின் கருத்துக்களை மாற்றியமைப்பதற்காக வெளிநாடுகள் நிதி வழங்குவதானது நாட்டின் அபிவிருத்திக்கு குந்தகம் விளைவிக்கும் என சிறிலங்கா அரசாங்கம் கருதுகிறது.

மகிந்தவுடன் சீனத் தூதரக அதிகாரிகள் தற்போதும் தொடர்பைக் கொண்டுள்ளனர் என்பது இரகசியமான விடயமல்ல. மகிந்த மீண்டும் அரசியலுக்கு வருவதற்கான சாத்தியம் நிலவுவதாக சீன அரச ஊடகமான Xinhua News Agency செய்தி வெளியிட்டுள்ளது.

கொழும்பு துறைமுக நகரத் திட்டம் நிரந்தரமாக நிறுத்தப்பட்டால் அதன் பின்னர் எத்தகைய நடவடிக்கைகளை சீனா முன்னெடுக்கும் என்பது தொடர்பாக சிறிலங்காவிலுள்ள சீனத்தூதரக அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். இந்நிலையில் சீன நிதியில் ஆரம்பிக்கப்பட்ட கொழும்பு துறைமுக நகரத் திட்டம் தற்போது அதற்கு எதிராக விதிக்கப்பட்ட தடையையும் மீறியுள்ளதாகத் தோன்றுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவாதத்திற்கு வருமாறு மகிந்தவுக்கு அழைப்பு

## நிதியமைச்சர் விடுத்தார்

(கொழும்பு)

**நாட்டின் பொருளாதார பின்னடைவு குறித்து விவாதிக்க வருமாறு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு, நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க அழைப்பு விடுத்துள்ளார்.**



கடந்த 12 வருடகாலமாக பொருளாதாரத்திற்கு பொறுப்பாக இருந்தவர் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ. அதனால் பந்துலவின் சவாலை மகிந்த ராஜபக்ஷவிற்கு முன்வைப்பதாக நிதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அலரி மாளிகையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த 2005 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 5ஆம் திகதி நாட்டின் முழு கடன் தொகை 1754 பில்லியன் ஆகும். ஆனால் அதன் இன்றைய பெறுமதியில் 8975 பில்லியனாக கடனை உயர்த்தி அற்புதமான நாடாக ஒப்படைத்துள்ளனர்.

பந்துல குணவர்தன நாட்டில் பொருளாதாரம் விழுந்து போய் காணப்படுவதாக அவருடன் விவாதத்திற்கு வருமாறும் சவால் விடுத்திருந்தார்.

இது தொடர்பில் விவாதத்திற்கு பந்துல குணவர்தன அல்ல முன்னாள ஜனாதிபதியே வர வேண்டும்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தன்னுடன் இது தொடர்பில் விவாதத்திற்கு வருமாறு நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# கதாநாயகனாகயிருந்தவர் வில்லனாகவே மாறிவிட்டார்

## மகிந்த குறித்து இராதாகிருஷ்ணன்

எமது நாட்டின் அரசியலில் வில்லன் பாத்திரத்தை ஏற்றுள்ளார் முன்னாள் ஜனாதிபதி மகிந்த. திரைப்படத்தில் வரும் வில்லன் பாத்திரத்தில் கதை விறுவிறுப்படைவது போலவும் சண்டைகள் உருவாகுவது போலவுமே எமது நாட்டின் அரசியலில் அவ்வப்போது தோன்றி கலகத்தினை விளைவிக்க முனைகின்றார் அவர் என கல்வி இராஜாங்க அமைச்சர் இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

அக்கரைப்பற்று ஸ்ரீ இராமகிருஷ்ண தேசிய பாடசாலையில் நேற்று முன்தினம் நடை பெற்ற தொழில் நுட்ப ஆய்வு கூடத் திறப்பு விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்

கதாநாயகனாக இருந்த முன்னாள் ஜனாதிபதி இன்று வில்லனாக மாறிவிட்டார். அதனால் அடிக்கடி பாராளுமன்றத்தையும் மக்களையும் குழப்பி குழம்பிய குட்டையினுள் மீன்பிடிக்கப் பார்க்கின்றார்.



ஆகவே மக்கள் தெளிவாக செயறபட்டு கடந்த காலத்தில் எவ்வாறு ஒட்டு மொத்தமாக வாக்களித்து நல்லாட்சியை உருவாக்கினீர்களோ? அதில் இருந்து சற்றும் விலகாமல் செயற்பட்டு நாட்டின் அபிவிருத்தியை முன்னெடுக்க பாடுபட வேண்டும்.

இந்த நாட்டின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு சிறுபான்மை மக்கள் வாக்குகளை அள்ளி வழங்கினர். ஆகவே அவர்கள் எமக்கு தரவேண்டியதையும் அள்ளி அள்ளி கொடுக்க வேண்டும். இந்த நாட்டிற்கு உழைப்பதற்காக வந்தவர்கள் மலையக தமிழர்கள். அதே போல் உரிமைக்காக போராடியவர்கள் வடக்கு கிழக்கில் உள்ள தமிழர்கள். இவர்கள் அனைவரும் அமைதியையும் சமாதானத்தையும் வேண்டியே கடந்த தேர்தலில் வாக்களித்தனர். ஆகவே சமாதானத்திற்கு எதிராக யார் வந்தாலும் எதிர்ப்போம்.

மலையகத்தில் உள்ள தமிழர்கள் உரிமையை இழந்திருக்கின்றார்கள். வடக்கு கிழக்கிலே உள்ள தமிழர்கள் உறவுகளை இழந்திருக்கின்றார்கள். ஆகவே மலையகத்திலே தற்போது உருவாக்கப்பட்டிருக்கும் கூட்டணி தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் இணைந்து தமிழ் மக்களின் பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வு காண முயற்சிக்கும். இராமகிருஷ்ணர் நாமத்தில் உள்ள இப்பாடசாலையின் தொழில்நுட்ப கூடம் என் கைகளால் திறக்கப்படுவதற்கு சந்தர்ப்பம் அளித்த இறைவனுக்கு நன்றி சொல்கின்றேன். இத்தொழில் நுட்ப கூடத்தை மாணவர்கள் சிறப்பாக பயன்படுத்தி தமது தொழில் நுட்ப அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## பிரதமருக்கு எதிரான

# நம்பிக்கையில்லா தீர்மானம் சட்டவிரோதமானது - எஸ்.பி



ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உறுப்பினர்கள் சிலர், பிரதமருக்கு எதிராக சமர்ப்பித்துள்ள நம்பிக்கையில்லா தீர்மானம் சட்டரீதியான ஆவணம் அல்ல என கிராமிய பொருளாதார விவகார அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அமைச்சரை மேற்கோள் காட்டி சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அது சட்டரீதியான ஆவணம் இல்லை. எனவே அதனை நிராகரிக்க வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

ஒரே அமைச்சர்கள் பல்வேறு இடங்களில் கையொப்பமிட்டால் அந்த ஆவணம் சட்டரீதியானதல்ல என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மான ஆவணத்தை, நாடாளுமன்ற செயலாளரினால் நிராகரிக்கப்பட வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் பிரதமர் ரணிலுக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானம் நாடாளுமன்ற செயலாளரிடம் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# இன்று ஒரு தகவல்

## சுய விமர்சனம்-சுய தரிசனம்

வெற்றிபெற வேண்டும் என்று எல்லோரும் நினைக்கிறோம். வெற்றி என்பது இரண்டு வகைப்படும்.

ஒன்று பிறரை வெல்வது, அல்லது பிறவற்றை வெல்வது. அதாவது, உலகத்தை வெல்வது, அல்லது உலகத்தில் சில விடயங்களை வெல்வது.

இரண்டாவது வகை- தன்னை வெல்வது, தன்னில் உள்ள குற்றம் குறைகளைத் தன் அறிவின் துணையால் வெல்வது.

'இக-பரசௌபாக்யம்' என்ற வாசகம் இவ்விரண்டு வெற்றிகளையே குறிக்கும். மண்ணுலக இன்பம், மோட்ச இன்பம் ஆகிய இவ்விரண்டு வெற்றிகளைக் குறிப்பன.

முருகன், வள்ளி தெய்வயானையுடன் இருப்பதைப் பார்ப்பவர்கள், 'கடவுளுக்கே இரண்டு மனைவியர்' என்று நீட்டி முழக்குவார்கள். இது தவறு. வள்ளி மண்ணுலக இன்பங்களை விளக்கும் அருட்சக்தி. தெய்வயானை விண்ணில் பிறந்து விண்ணில் வளர்ந்தவள். அவள் விண்ணுலக இன்பமாகிய மோட்சத்தை விளக்கும் அருட்சக்தி.

முருகன் உலக வாழ்வின் இன்பங்களையும் மோட்ச இன்பத்தையும் ஒருங்கே கொடுப்பவன் என்பதை விளக்கவே இரு சக்திகளையும் தேவியராகக் கொண்டு காட்சி தருகிறான். ஞானம் நடுவில் வேலாக விளங்குகிறது. அறிவை மையப்படுத்தியே இக பர இன்பங்கள் வழங்கப்படும்.

உலகை வெல்லவும் உன்னையே நீ வெல்லவும் சிறந்த வழிகள் இரண்டு. ஒன்று சுயவிமர்சனம். மற்றையது சுயதரிசனம். நம்முடைய செயல்கள், நடவடிக்கைகள் பற்றி மற்றவர் விமர்சனம் செய்தால் நமக்குப் பற்றிக் கொண்டு வருகிறது. எரிச்சலும் ஆத்திரமும் எரிமலைக் குழம்பாய் வெடிக்கிறது. இது தவறு.

பிறர் விமர்சனம் செய்வது பிடிக்கவில்லை என்றாலும் நம்மை நாமே விமர்சனம் செய்து கொள்வது நல்ல வழி. விழிப்புக்கும் தூக்கத்துக்கும் இடையில் நிகழ்த்திய வாழ்க்கை நிகழ்ச்சிகளை நிறுத்துப் பார்ப்பது நமது கடமை.

உடம்பை அடிக்கடி நிறுத்து எடை பார்ப்பது போல் இரத்த அழுத்தத்தை அடிக்கடி அளந்து பார்த்து மெடிக்கல் செக்கப் செய்வது போல் சுய சோதனை செய்வது அவசியம்.

திருவெற்றியூர் தேரடித் தெருவில் ஒரு துறவி ஆடையின்றி நிர்வாணமாக உட்கார்ந்திருந்தார். அந்த வழியாக போவோர் வருவோரைக் கேலி செய்வது அவர் வழக்கம்.

அதோ நாய் போகிறது என்பார், இதோ குரங்கு குரங்கு என்பார். இடுப்பில் ஆடையின்றி விலங்குபோல் கிடந்த கிழவர் பளபளக்கும் பட்டணிந்த பெரியவர்களை எல்லாம் பார்த்து நாய், நரி என்றால் எப்படி இருக்கும். மனத்தில் நாயாகவும் நரியாகவும் புலியாகவும் சிங்கமாகவும் வாழும் வெளிவேசக்காரர்களை வெளிப்படுத்தும் எக்ஸ்ரே கண்கள் அவருக்கு அந்தத் துறவிக்கு ஒரு சோதனை.

இரக்கமே வடிவான வடலூர் வள்ளல் இராமலிங்க அடிகளார் அந்த வழியாகப் போயிருக்கிறார். பதறிப்போன அந்த நிர்வாணத் துறவி உடலைக் குறுகிக்கொண்டு அலறினார்.

"ஐயோ முதன் முதலாக ஒரு மனிதன் இந்த வழியாகப் போகிறானே. மனிதனுக்கு முன்பு ஆடையின்றி இருப்பது அவமானமாக இருக்கிறதே. யாராவது ஆடை கொடுங்கள்"

இராமலிங்க அடிகள் மேலாடையைக் கொடுத்து அவரை இடம் மாறச் செய்தார் என்று ஒரு செய்தி. இதில் மிகப் பெரிய உண்மை அடங்கி இருக்கிறது. மனிதன் இயல்பில் ஒரு விலங்குதான். கட்டுப்பாடுகளால்தான் மனிதன். பக்குவத்தால் தெய்வம். இப்போது நாம் எந்த நிலையில் இருக்கிறோம் என்கிற சுயபரிசோதனை அடிக்கடி அவசியம். நமது செயற்பாடுகள் மீதான சுயவிமர்சனம் மிகத் தேவை.

சுய விமர்சனம் விலங்கை மனிதனாக்கும். சுயதரிசனம் மனிதனைத் தெய்வமாக்கும். விலங்கில் இருந்து மனிதனாய். மனிதனில் இருந்து தெய்வமாய் உயர்வை நோக்கிப் பயணப்படுவதால்தான் நாம் உயர்திணை மற்றவை அஃறிணை. இப்படியும் சொல்லலாம்

ஆசை நம்மை விலங்காக்குகிறது<br>
அன்பு நம்மை மனிதனாக்குகிறது<br>
அருள் பழுத்தால் நாம் தெய்வமாகலாம்.

தெய்வநிலையிலும் ஆசைவயப்பட்டு சிலர் விலங்கானது உண்டு. நூறு அஸ்வமேத யாகம் செய்து பெருமை பெற்றவன் நகுஷன். இந்திர பதவி அவனைத் தேடி வந்தது. அகத்தியர் உட்பட பெருமை மிக்க ஏழு ரிஷிகள் அவனைக் காண வந்தனர்.

பணிந்து வரவேற்றுப் பண்பாட்டை வெளிப்படுத்தினான் நகுஷன். இந்திர பதவி பெற்று இந்திர உலகம் செல்லும் அவன் பல்லக்கைச் சுமந்து செல்ல ஏழு ரிஷிகளும் எண்ணினர். நகுஷன் நடுங்கினான். இத்தனை பெரிய மகரிஷிகள் தன் பல்லக்கைச் சுமக்கக்கூடாது என்று மன்றாடினான். மனிதப்பண்பும் தெய்வத்தகுதியும் அவன் புகழைப் பெருக்கின.

நூறு யாகம் செய்த அவன் பல்லைக்கைச் சுமக்கும் பாக்கியம் தங்களுக்கு வேண்டும் என்று ரிஷிகள் வாதிட்டனர். 'இப்படியொரு பேறு இனி எப்போது கிடைக்கும்?' என்றனர்.

ரிஷிகள் வேண்டுகோளைத்தட்ட மாட்டாது ஏற்றான். ரிஷிகள் பல்லக்கைச் சுமந்து நடந்தபோது அவர்கள் உடல் வருந்துமே என்று 'மெதுவாக மெதுவாக' என்று வேண்டினான். பிறர் துயர் தன் துயராகப் புலம்பினான் அந்தப் பேரருளாளன். மனிதனாய், தெய்வமாய் மாறி மாறி ரிஷிகளுக்காக உருகினான் அந்த மாமனிதன்.

இந்திர உலகைப் பல்லக்கு நெருங்கியது. அழகே வடிவான இந்திராணியின் பேரழகு அவன் நெஞ்சை ஈர்த்தது. தொலைவில் தெரிந்த அவள் உருவை அருகில் பார்க்கும் ஆசை தலைக்கேறியது. வேகமாக முனிவர்கள் நடக்க வேண்டாம் என்று முன்னர் வேண்டிக் கொண்டவனுக்கு இப்போது எரிச்சல் வந்தது.

'பல்லக்கு ஏன் இவ்வளவு மெதுவாகப் போகிறது? வேகமாகப் போனால் என்ன?' என்று கோபம் உண்டாயிற்று. மெதுவாகப் போகும் காரணத்தை அறிவு ஆராய்ந்தது. மகரிஷிகள் எல்லோரும் பல்லக்கைச் சுமந்து கொண்டு நடக்கும்போது குட்டையான அகத்தியர் பாதம் தரையில் படாமல் பல்லக்கைப் பிடித்துத் தொங்குவது தெரிந்தது.

"ஆகா, இவர் பாரத்தால் அல்லவா பல்லக்கு மெதுவாக அசைகிறது?" என்று ஆத்திரப்பட்டவன் பொற் பிரம்பை உருவி அவரை அடித்தபடி 'சர்ப்ப சர்ப்ப (வேகம் வேகம்) என்றான். அருளும் அன்பும் அழிந்து ஆசை வெறி மேலோங்கியது. அகத்தியர் நிமிர்ந்தார். 'மகரிஷிகள் மகிமை அறியாது 'சர்ப்ப சர்ப்ப' என்ற நீ சர்ப்பமாகக் கடவது' என்றார். மனிதனில் இருந்து மாமனிதனாக உயர்ந்த நகுஷன் மலைப்பாம்பாகி மண்ணில் நெளிந்தான். நமது உத்தேசம் என்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனாவின் தாமரைக் கோபுரம் தெற்காசியாவுக்குப் பாரிய அச்சுறுத்தல்




இந்தியப் பெருங்கடல் பகுதியை, அமைதி பிராந்தியமாக வைத்துக் கொள்ள வேண்டும் என்று, இந்தியா மட்டுமல்ல இப் பிராந்தியத்தில் உள்ள பல நாடுகளின் கருத்து.

ஆனால், சர்வதேச பாதுகாப்பு ரீதியில் இந்தியப் பெருங்கடல், தங்களின் கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ள, வல்லரசு நாடுகள் முயன்று வருவதோடு, அதற்காகவே போட்டி போட்டு, பல ஆயிரம் கோடி ரூபாய் செலவிடுகின்றன.

இந்த வகையில், சீனாவிற்கும், அமெரிக்காவிற்கும் ஏற்பட்டுள்ள அண்மைக் காலப் போட்டிகள், இந்தியா, மொரீஷியஸ், மாலத்தீவு உள்ளிட்ட இந்தியப் பெருங்கடல் நாடுகளை கவலையடையச் செய்துள்ளது. அதேநேரத்தில், இலங்கை அரசு, சீனாவிற்கு அளித்து வரும் முக்கியத்துவம், எதிர்காலத்தில் போர்மேகத்தை உருவாக்குவதாக உள்ளது.

**டீக்கோ கார்சியா:**

அமெரிக்காவிற்கு சொந்தமான டீக்கோ கார்சியா, இந்தியப் பெருங்கடலின் நடுப் பகுதியில், நிலநடுக் கோட்டிற்கு தெற்கே அமைந்துள்ள ஒரு பவளபாறைத் தீவு.

இது இங்கிலாந்திற்கு சொந்தமானது. 1814 ஆம் ஆண்டில், இங்கிலாந்து இத்தீவு மீது உரிமை கோரியது. பின், 1965 ஆம் ஆண்டில், இத்தீவை இங்கிலாந்திடமிருந்து, அமெரிக்கா குத்தகைக்கு வாங்கி, அதில், அமெரிக்காவின் கடற்படை மற்றும் விமானப் படைக்கு தளங்கள் அமைத்து, இத்தீவை இராணுவ மயமாக்கியது.

டீக்கோ கார்சியா, இந்தியாவின் தென் முனையான கன்னியாகுமரியிலிருந்து தென்மேற்கே, 1,796 கி.மீ., தூரத்திலும், ஆஸ்திரேலியாவின் மேற்குக் கரையில் இருந்து, 4,723 கி.மீ., தூரத்திலும், தான்சானியா கரையின் கிழக்கே, 3,535 கி.மீ., தூரத்திலும், அமைந்துள்ளது.

டீக்கோ கார்சியாவில் ஐக்கிய அமெரிக்கக் கடற்படை, தன் தேவைக்கான உதவி தளத்தை, இங்கு அமைத்துள்ளது.

பெரும் கடற்படைக் கப்பல் மற்றும் நீர்மூழ்கிக் கப்பல்கள் உதவித் தளம், படைத்துறைத் தேவைக்கான விமானப் படைத் தளம், தகவல் தொடர்பு, விண்வெளித் தொடர்புத் தளம் ஆகியவை இங்கு உள்ளன. அமெரிக்காவின் உளவு அமைப்பான சி.ஐ.ஏ., இங்கு அந்நிய நாடுகளை உளவு பார்க்கும் நவீன மையத்தை வைத்துள்ளது.

**சீனாவுக்கு வியர்வை:**

இதனால், இத்தீவிற்கு அருகே உள்ள இலங்கையை, தன் கட்டுப்பாட்டில் வைக்க, சீனா ரகசிய திட்டம் தயாரித்து, அதற்காக, ஏராளமான பணம் ஒதுக்கி, இலங்கையில் அம்பாந்தோட்டையில் பிரம்மாண்ட துறைமுகம், கொழும்பில் கடலுக்குள், 'மெரைன் ஸ்மார்ட் சிட்டி' அமைத்துள்ளது.

இந்தியா உள்ளிட்ட இந்தியப் பெருங்கடலை ஒட்டிய நாடுகளை ரகசியமாக கண்காணிக்க, சீனா, பல நவீன ஏற்பாடுகளை செய்து வருகிறது.

குறிப்பாக, இலங்கையின் தலைநகர் கொழும்பில், சீனா, 'லோட்டஸ் டவர்' எனும, 'தாமரைக் கோபுரம்' அமைத்து வருகிறது. கொழும்பில் தாமரைக் கோபுரத்தை நிர்மாணித்தால், சீனா தன், 'கொலையாளியின் தண்டாயுதம்' என்று அழைக்கப்படும், நவீன கனரக ஆயுதங்களை அதில் மறைத்து வைத்து, ரகசிய கண்காணிப்பில் ஈடுபட முடியும். இக்கோபுரம் அமைக்கப்படுவது, இந்தியப் பெருங்கடல் மற்றும் தெற்காசியாவின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளதாக தென்கிழக்கு ஆசியாவிற்கான அரசியல் பார்வையாளர், பாஸ்கர் ராய், அண்மையில் எச்சரித்துள்ளார்.

இலங்கையின் புதிய் அதிபர் மைத்திரிபால சிறிசேன, அண்மையில், சீனாவுக்குப் பயணம் மேற்கொண்டபோது, இலங்கையில் மேற்கொள்ளப்படும் சீன முதலீடுகள் மற்றும் கட்டுமானத் திட்டங்கள் தொடர்பாக மீளாய்வு செய்யக் கூடாது எனவும், சீன முதலீட்டைப் பாதுகாக்க வேண்டும் எனவும், சீனத் தலைவர்களால், அதிக அழுத்தம் கொடுக்கப்பட்டது.

**கடனாளியான இலங்கை:**

ஏற்கனவே, இலங்கையின் நெருக்கடியான நிதி நிலைமையை சிறிசேன அரசு சமாளிப்பது, கடினமானதாகவே உள்ளது. இலங்கை அரசு, நான்கு பில்லியன் அமெரிக்க டொலர் கடனை, சீனாவுக்கு திருப்பிச் செலுத்த வேண்டியிருப்பதால், அதைக் கடனாக வழங்கி உதவுமாறு சர்வதேச நிதி அமைப்பிடம் இலங்கை அரசு கோரியிருந்தது.

ஆனால், இந்த வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டதால், சீனாவின் கடன் பிடிக்குள் இலங்கை சிக்கி, அதிலிருந்து மீள முடியாமல் இருக்கிறது. இதைப் பயன்படுத்தி, இந்தியப் பெருங்கடலில், சீனா தன் செல்வாக்கை விரிவுபடுத்துவதற்கு, இலங்கையைப் பயன்படுத்துகிறது.

இந்தியப் பெருங்கடலில், சீனா தன் செல்வாக்கை விரிவுபடுத்துவதற்காக, இலங்கையில் முன்னெடுக்கப்படும் திட்டங்களுள், கொழும்பில் அமைக்கப்படும், 'தாமரைக் கோபுரம்' திட்டமும் ஒன்றாகும். இக்கோபுரத்தின் கட்டுமானத்திற்காக, சீனாவின் எக்சிம் வங்கி நிதி வழங்கியுள்ளது. இது, பிரான்சில் அமைக்கப்பட்டுள்ள, 'ஈபிள' கோபுரத்தை விட, 26 மீட்டர் அதிக உயரம் கொண்டதாக, 566 கோடி ரூபாயில் இது கட்டப்படுகிறது. இக்கோபுரமானது, சீன தேசிய எலெக்ட்ரானிக் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி கூட்டமைப்பாலும், சீன விண்வெளி வர்த்தக விரிவாக்க அமைப்பாலும் நிர்மாணிக்கப்படுகிறது.

**ராஜபக்ஷவின் குளறுபடி:**

இலங்கையை முன்பு ஆட்சி செய்த, ராஜபக்ஷ தலைமையிலான அரசு, இவ்விரு சீன நிறுவனங்கள் தொடர்பாகவும் ஆராயவேயில்லை. கொழும்பில் தாமரைக் கோபுர நிர்மாணத்தில் ஈடுபடும் சீன நிறுவனங்களுள் ஒன்றான, எலெக்ட்ரானிக் நிறுவனம், சீனப் பாதுகாப்பு எலெக்ட்ரானிக் முறைமை ஒருங்கிணைப்பு, பாதுகாப்பு தொழில்நுட்ப முறைமை நிர்மாணம், பொதுப் பாதுகாப்பு ஒருங்கிணைப்பு, சர்வதேச பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைக்ளுக்குத் தேவையான நவீன சாதனங்களை வழங்குதல் உட்பட பல்வேறு செயறபாடுகளில் ஈடுபடுகிறது.

இதேபோன்று சீனாவின் இன்னொரு நிறுவனமான, சீன விண்வெளிச் செயறபாட்டு மையமானது, பாதுகாப்பு கருவி மற்றும் சாதனங்களை ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்தல், தொழில்நுட்ப சேவைகளில் ஈடுபடல், பயங்கரவாத எதிர்ப்பு உபகரணங்களை ஏற்றுமதி செய்தல், கலக எதிர்ப்பு உபகரணங்களை ஏற்றுமதி செய்தல், தொழிற்நுட்பங்கள் மற்றும் சேவைகள் போன்றவை உட்பட பல்வேறு ஏற்றுமதி சார் செயற்பாடுகளில் ஈடுபடுகிறது.

இலங்கையில், தெற்காசியாவின் மிகப் பெரிய கோபுரத்தை அமைப்பதில் ஈடுபட்டுள்ள சீன நிறுவனங்கள், இந்தியப் பெருங்கடல் மற்றும் இந்தியா ஆகியவற்றைக் கண்காணிப்பதையே தம் நோக்கமாகக் கொண்டு செயறபடுவது தெளிவாகிவிட்டது.

இலங்கையில் நிர்மாணிக்கப்படும் தாமரைக் கோபுரம், சீனாவின் மின்னணு கண்காணிப்பு பொறிமுறையை உள்ளடக்கியது என்பதில், எவ்வித சந்தேகமுமில்லை. இவ்வாறான உயரமான கோபுரத்தை அமைப்பதன் மூலம், சீனா தன் மறைமுக ரகசிய கண்காணிப்பை அரங்கேற்ற முடியும்.

**தெற்காசியாவுக்கு அச்சுறுத்தல்**

இந்தியப் பெருங்கடலில், சீனா, கண்காணிப்பை மேற்கொள்வதற்குத் தேவையான பொருத்தமான தொழில்நுட்பம் இலங்கையில் தற்போது இல்லை. ஆகவே, தாமரைக் கோபுரத்தை நிர்மாணித்து, சீனா தன கனரக ஆயுதங்களை மறைத்து வைத்து ரகசிய கண்காணிப்பில் ஈடுபட முடியும். இக்கோபுரத்தை முழுதாக அமைக்க அனுமதிக்கப்பட்டால், அது இந்தியப் பெருங்கடல் மற்றும் தெற்காசியாவின் பாதுகாப்பிற்கு, அச்சுறுத்தலாகவே அமையும்.

சீனாவால் இலங்கையில் மேற்கொள்ளப்படும் கொழும்பு துறைமுக நகரத் திட்டம், கொழும்புத் துறைமுகம், அம்பாந்தோட்டை துறைமுகம் மற்றும் ஏனைய மூன்று முக்கிய தந்திரத் திட்டங்கள், சீனாவின் மறைமுக சூழ்ச்சித் திட்டத்திற்கு துணையாக அமையும். சீனாவின், 21 ஆம் நூற்றாண்டுக்கான, 'கரையோர பட்டுப்பாதைத் திட்டம்' மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. இத்திட்டத்தை வெற்றியடையச் செய்வதற்கு, சீனா, இலங்கை போன்ற நாடுகளில், தன் முதலீட்டைத் தொடர்ந்து மேற்கொள்ளும்.

இலங்கையின் வளர்ச்சிக்காக, சீனா, இலங்கை மற்றும் இந்தியா ஆகிய முத்தரப்பிற்கும் இடையில் பேச்சுக்களை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளை, முன்னெடுக்குமாறு இலங்கை அதிபரிடமும் வெளியுறவு அமைச்சரிடமும், சீனா கூறியுள்ளது.

இலங்கை அதிபர் சிறிசேன, சீனாவில் தங்கியிருந்தபோது சீனாவின் இந்த யோசனைக்கு தலையசைத்தது போல் தெரிகிறது. ஆனால் இதற்குள், இந்தியாவையும் கொண்டு வர வேண்டியுள்ளது.

**மோடி கவனம்**

இலங்கையில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் குறித்து, இந்தியா அதிருப்தி அடைவதை சீனா நன்கறிந்துள்ளது. ஏனெனில் இந்த நடவடிக்கைகளில் சில, இந்தியாவின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக உள்ளதாக இந்தியா கருதுகிறது. இலங்கையில் சீனா, கோபுரம் ஒன்றை அமைக்கும் போதும், சீனா தன் நீர் மூழ்கிக் கப்பல்களை கொழும்பு துறைமுகத்தில் நிறுத்தும் போதும், இறுதியாக, இலங்கையை சிவில் மற்றும் இராணுவத் தேவைகளுக்காகப் பயன்படுத்தும் போதும், இந்தியா இதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க வேண்டும் என, சீனா எண்ணுகிறதா எனக் கருத வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

சீனா தன் பாதுகாப்புத் திட்டங்களை நிறைவேற்ற, இந்தியாவைத் தன் வலைக்குள் இழுப்பதற்காக, இலங்கையைப் பயன்படுத்துவது போலவே தெரிகிறது. ஆகவே, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, இதுபோன்ற விடயங்களில் மிக விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும் என்று எச்சரிக்கின்றனர், சர்வதேச அரசியல் பார்வையாளர்கள்.

தினமலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





ஏழாலை கண்ணகை முன்பள்ளி மாணவர்களின் வருடாந்த விளையாட்டு விழாவில் பிரதமவிருந்தினராக கலந்துகொண்ட ஏழாலை சைவமகாஜன வித்தியாலய அதிபர் திருமதி தேவகி புவனேஸ்வரன் மாணவர் ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் இசையும் அசைவும் இடைவேளை நிகழ்ச்சியையும் மாணவர்களின் விநோதவுடைக் கண்காட்சியையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்)




யாழ்.பல்கலைக்கழக மிருதங்க இசை சிரேஷ்ட விரிவுரையாளர் மகேந்திரனின் "தொன்மைச்சான்றுகள் புலப்படுத்தும் ஆடலமைதி" மற்றும் பரதத்தில் மிருதங்க இசைமரபு எனும் இருநூல்கள் அண்மையில் யாழ்.பல்கலை கைலாசபதி கலையரங்கில் வெளியிடப்பட்டது. நிகழ்வில் தஞ்சை தமிழ் பல்கலைக்கழக பதிவாளர் முனைவர் எஸ்.கணேசராம் உரையாற்றுவதையும் மற்றும் HNB Assurance PLC இன் வடக்கு கிழக்கு வலய ஆயுள் காப்புறுதி முகாமையாளர் நூலாசிரியரைக் கௌரவிப்பதையும் படங்களில் காணலாம்.





ஏழாலை முத்தமிழ் மன்ற கலாசார மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற "வரலாற்றுச் சிந்தனைத்தடம்" நூல் வெளியீட்டு விழாவில் அமரர் க.அருமைநாயகத்தின் உருவப்படம் ஊர்வலமாக எடுத்துவரப்படுவதையும் பேராசிரியர் சி.தில்லைநாதன் மங்கல விளக்கேற்றுவதையும் நூலின் பதிப்பாசிரியரும் கல்வியியற் கல்லூரி விரிவுரையாளருமான முருகேசு கௌரிகாந்தன் உரை நிகழ்த்துவதையும் படங்களில் காணலாம்.





சங்கானை Butterfly International School, பண்டத்தரிப்பு Blooming Buds Day Care Centre ஆகிய ஆங்கில மொழி மூல பாலர் பாடசாலைகளின் விளையாட்டுப்போட்டி நிகழ்வில் விருந்தினர்கள் விநோதவுடைப் போட்டியில் பங்குபற்றிய மாணவர்களுடன் நிற்பதையும் மாணவர்களின் இடைவேளை நிகழ்வினையும் பிரதமவிருந்தினர் மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.



நிகழ்வின் நிழல்கள்

வயலின் இசைக் கலைஞர் சு.கோபிதாசின் சங்கமம் வாத்தியக் கலையத்தின் மூன்றாமாண்டு நிறைவு விழா அண்மையில் யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்ற போது....(படம்: சாவகச்சேரி செய்தியாளர்)





கரவெட்டி ஞானாசாரியார் கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற அமுதவிழா நிகழ்வின் போது....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சு.கவை பிளவுபடுத்துவது ரணில் விக்கிரமசிங்கவே

## மஹிந்த யாப்பா குற்றச்சாட்டு

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவே பிளவுபடுத்துகின்றார் என முன்னாள் அமைச்சர் மஹிந்த யாப்பா அபேவர்தன குற்றஞ்சாட்டியுள்ளார்.

கட்சியை பிளவுபடுத்த எந்த வகையிலும் இடமளிக்க போவதில்லை எனவும் அவர் தெரிவித்தார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நாட்டின் பிரதானமான ஓர் கட்சியாகும். இதுவரையில் யாருக்கும் இரண்டாம் பட்சமாகியதில்லை. எனினும் சிலர் கட்சியை வீழ்த்த முயற்சிக்கின்றனர்.

ரணில் விக்கிரமசிங்கவே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பிளவடையச் செய்ய முயற்சிக்கின்றார். கட்சி எந்த நிலையில் இருந்தாலும் நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். கட்சியை இழிவுபடுத்தி வீழ்ச்சியடைச் செய்ய எவருக்கும் அனுமதிக்க முடியாது. யானையை விரட்டுவது அவ்வளவு கடினமான விடயமல்ல என அவர் தெரிவித்துள்ளார்.

மாத்தறை வெலிகம பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்தார். (இ-5)



# மின்சார விநியோகம் தடைப்படும்

(யாழ்ப்பாணம்)

உயர் அழுத்த மற்றும் தாழமுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று திங்கட்கிழமையிலிருந்து 12.06.2015 வெள்ளிக்கிழமை வரை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை வடக்கு மாகாணத்தில் சில பகுதிகளில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.

08.06.2015 திங்கள் யாழ். பிரதேசத்தில் நாதோலை, மெய்கண்டான், ஆலடி, சித்திரமெளலி, ஆனைவிழுந்தான், அம்பன், குடத்தனைச்சந்தி, நடுக்குடத்தனை, பொற்பதி,மணற்காட்டுச்சந்தி, வலிக்கண்டி, குடத்தனை நீர்ப்பாசனம், மணற்காட்டுகடற்கரை, அம்பன் வைத்தியசாலை ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் செக்கட்டிப்புலவு பிரதேசம் ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் மணல்குளம், சூரியகட்டைக்காடு ஆகிய பிரதேசங்களிலும்

09.06.2015 செவ்வாய் யாழ் பிரதேசத்தில் அந்தோனியார் வீதி, பண்டத்தரிப்பு, காஞ்சிரபும், புங்குடுதீவு,வேலணை ஒரு பகுதி, புங்குடுதீவு இலங்கை கடற்படை முகாம் ஆகியஇடங்களிலும் கிளிநொச்சி பிரதேசத்தில் முக்கொம்பன் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் பட்டானிச்சூர் பிரதேசம், பட்டக்காடு பிரதேசம், வேப்பங்குளம் பிரதேசம், மாமடுவிலிருந்து மகாகச்சக்கொடிய வரை, பொகவஸ்வேவ, சளலிங்கம, நமலகம, பிரப்பன்மடு, CEC கல்லுடைக்கும் ஆலை ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் வட்டுப்பித்தன் மடுவிலிருந்து புதுக்காமம் ஆகிய பிரதேசங்களிலும்

10.06.2015 புதன் யாழ் பிரதேசத்தில் நாதோலை, மெய்கண்டான், ஆலடி, சித்திரமெளலி, ஆனைவிழுந்தான', காங் கேசன் துறை வடக்கு கடற்படை முகாம், காங்கேசன்துறை இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம், பலாலி இராணுவத் தலைமைக் காரியாலயம், மயிலிட்டி கரிசன் 5ஆவது பொறியியல' படைமுகாம், பலாலி இலங்கை விமானப்படை முகாம், மயிலிட்டி கரிசன் 5ஆவது பொறியியல் படைமுகாம் (புதியது), பலாலி விமானப்படை ஒய்வுகாலவிடுதி, காங்கேசன்துறை பாதுகாவல' நிலையம் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் செக்கட்டிப்புலவு பிரதேசம் ஆகிய இடங்களிலும் மன்னார்பிரதேசத்தில் திருக்கேதீஸ்வரம், எள்ளுப்பிட்டி

11.06.2015 வியாழன் யாழ். பிரதேசத்தில் அந்தோனியார் வீதி, பண்டத்தரிப்பு, காஞ்சிரபும் ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி பிரதேசத்தில் ஒட்டுசுட்டான', நெடுங்கேணி,கற்சிலைமடு, தண்டுவன', நயினாமடு, மதியாமடு, நெடுங்கேணி பலநோக்குக்கூட்டுறவுச் சங்கம் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் பறயனாலங்குளத்திலிருந்து நேரியகுளம் வரை பம்பமடு கிராமம்,பட்டானிச்சூர் பிரதேசம், பட்டக்காடு பிரதேசம், வேப்பங்குளம் பிரதேசம், மாமடுவிலிருந்து மகாகச்சக்கொடிய வரை, பொகஸ்வேவ, சளலிங்கம, நமலகம, பிரப்பன்மடு, பல நோக்கு கூட்டுறவுச்சங்கம் வி.சி.கே ஆலை, செட்டிக்குளம் வைத்தியசாலை, வலயம்' 01, 02, 03 மற்றும் 04. CEC கல்லுடைக' கும் ஆலை ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில்முசலிபிரதேசம், பரிகாரிக்கண்டல், பூந்தீவுக் கண்டல், மடுக்கரை, அரிப்பு,புதுவெளி, சிலாவத்துறை, கடற்படை முகாம் , CECB, முள்ளிக்குளம' கடற்படை முகாம் ஆகிய பிரதேசங்களிலும்

12.06.2015 வெள்ளி யாழ். பிரதேசத்தில் நாதோலை, மெய் கண்டான' , ஆலடி, சித்திரமெளலி, ஆனைவிழுந்தான' , உசன், விடத்தற்பளை, கெற்பெலி, கிளாலி ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் செக்கட்டிப்புலவு பிரதேசம், மாமடுவிலிருந்து மகாகச்சக்கொடிய வரை, பொகவஸ்வேவ, சளலிங்கம, நமலகம, பிரப்பன்மடு, CEC கல்லுடைக் கும் ஆலை ஆகிய இடங்களிலும் மனனார்பிரதேசத்தில் திருக்கேதீஸ வரம், எள்ளுப்பிட்டி ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.(இ-9)

# 20ஆவது திருத்தம் நிறைவேறும் வரை சு.க.எம்.பிக்களுக்கு தண்டனையில்லை

(கொழும்பு)

**தேர்தல் முறையில் சீர்த்திருத்தங்களை ஏற்படுத்தும் 20வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தை நிறைவேற்றும் வரை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தண்டனை வழுங்குவதில்லை என ஜனாதிபதி மைத்தி ரிபால சிறிசேன தலைமையிலான அரசாங்கம் தீர்மானித்துள்ளது என தெரிய வருகிறது.**

இதனடிப்படையில், 20ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் நிறைவேற்றப்படும் வரை நாடாளுமன்றத்தை கலைப்பதில்லை எனவும் திருத்தச் சட்டத்தை நிறைவேற்றிய பின்னர் நாடாளுமன்றத்தை கலைப்பது எனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் ஊழல் மோசடிகளில் சம்பந்தப்பட்டவர்களுக்கு தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பை வழங்குவதில்லை என்ற நிலைப்பாட்டில் ஜனாதிபதி இருப்பதாகவும் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார.

இவர்களுக்கு தண்டனை வழங்கும் நடவடிக்கையாக இதனை மேற்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் நல்லாட்சி கொள்கைக்குள் ஊழல்வாதிகளுக்கு இடமில்ல எனவும் ராஜித சேனாரத்ன மேலும் தெரிவித்தார். (இ-5)

# சுதந்திரக் கட்சியின் வேட்பாளர் விண்ணப்பப்படிவம் 2000ரூபா

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினூடாக போட்டியிடுவதற்காக விண்ணப்பிப்பவர்கள் அந்த விண்ணப்பப்படிவத்துடன் 2 ஆயிரம் ரூபாவை கட்சிக் காரியாலயத்துக்கு செலுத்த வேண்டுமென நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

அதேவேளை இம்முறை உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்காக விண்ணப்பதாரிகள் அனைவரும் விண்ணப்பப் படிவத்துடன் 500 ரூபாவை கட்சிக் காரியாலயத்துக்கு வழங்க வேண்டுமெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 2010ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காக வேட்பாளர்களிடமிருந்து விண்ணப்பப் படிவத்துடன் இவ்வாறு பணம் அறவிடப்படவல்லை எனவும், தெரிவு செய்யப்பட்ட சகல உறுப்பினர்களும் கட்சியின் நிதியத்துக்கு 5 இலட்சம் ரூபா செலுத்த வேண்டியிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தல் மற்றும் உள்ளூராட்சித் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியில் போட்டியிட விரும்பும் வேட்பாளர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. அதற்கான வேலைத்திட்டங்களையும் தீவிரமாக மேற்கொண்டு வருவதாகவும் கட்சி வட்டாரத் தகவல்கள் ஊடாகத்தெரிய வருகிறது. (இ-5)

# வேகத்துப்பாக்கிகள் பயன்படுத்த முடிவு

நாட்டில் உள்ள பிரதான வீதிகளில் 86 வீதிகளில் வேகத் துப்பாக்கிகளை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் போக்குவரத்து பிரிவு அறிவித்துள்ளது.

சாரதிகள் தங்களுடைய வாகனங்களின் வேகத்தை கட்டுப்பாடு மீறி செலுத்துவதனால் பல விபததுகள் இடம்பெறுகின்றன. அவற்றை தடுக்கும் வகையிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நீதிமன்ற தீர்மானத்துக்கு அமைவாகவே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவிருக்கின்றது என்றும் அப்பிரிவு அறிவித்துள்ளது. (இ-5)

# பிரிவுத்துயர் பகிர்வு

### பொன்னையா ஜெயசந்திரன்

அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும்கொண்ட பொன்னையா ஜெயசந்திரன் நேற்று முன்தினம் சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் அச்சுவேலி முழக்கன் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### சண்முகம் இராஜேஸ்வரன்

(ஓய்வுபெற்ற ஆசிரியர்,

செங்குந்தா வீதி, கரவெட்டி கிழக்கை பிறப்பிடமாகவும் பூதவராயர் வீதி கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் இராஜேஸ்வரன் நேற்று முன்தினம் சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### திருமதி நடராஜா தையல்நாயகி

நவாலியைப் பிறப்பிடமாகவும் அவுஸ்திரேலியா மெல்பேர்ன் ஐ வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா தையல்நாயகி நேற்று முன்தினம் சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் பூதவுடல் இன்று திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணி தொடக்கம் 3 மணிவரை Boy Chapel, Arnold Dr, Springvale VIC3171 Australia எனும் முகவரியில் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.


### நவரத்தினம் குணசிங்கம்


கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸ் Cormeilles ஐவசிப்பிடமாகவும் கொண்ட நவரத்தினம் குணசிங்கம் கடந்த 5ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 11ஆம் திகதி முற்பகல் 11.45 மணிக்கு Maison Funeraire De Paris Menilmontant, 7 Bourlevard de Menilmontant, 75011 Paris, France (Metro 2 Philippe Auguste) எனும் முகவரியில் நடைபெற்றுபின்னர்பூதவுடல்தகனம்செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புங்குடுதீவில் மாணவி கொலை நடந்தது என்ன?





மாணவி வித்தியா

மாணவி வித்தியாவின் கொலையைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்தியவர்கள் யாழ்ப்பாண நீதிமன்ற வளாகத்திற்குச் சென்றிருந்தனர். வடக்கு மாகாணப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் உத்தரவாதம் அளித்ததன்படி சுவிஸ்குமார் நீதிமன்றில் ஆஜராகவில்லை என்ற ஆத்திர மேலீட்டால் கோஷம் எழுப்ப அங்கு நின்ற சிலர் நீதிமன்றத்தின்மீது கல்வீசித் தாக்குதல் நடத்தினர். இதனால் பெரும் களேபரம் ஏற்பட்டது.

நீதிமன்றத்தின் மீது வீசிய கல்லுகள் அங்கு கடமையில் நின்ற பொலிஸாரின் தலைகளையும் பதம் பார்த்தது. கல்லெறிபட்டு தலையில் காயம் ஏற்பட்டு இரத்தம் கொட்டிய நிலையில் காயத்திற்குக் கட்டுப்போடுவதில் பொலிஸாருக்குப் போதுமென்றாயிற்று.

நீதிமன்றம் தாக்கப்பட்டபோது கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசி ஆர்ப்பாட்டக்காரர்களை துரத்திய பொலிஸார் பண்டார வேட்டுக்களையும் தீர்த்தனர் என 14 ஆவது தொடரில் பார்த்திருந்தோம்.

நீதிமன்றத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் 132 பேர் கைது செய்யப்பட்டனராயினும் சம்பவ இடத்தில் வைத்து சுமார் 20 பேர் அளவிலேயே கைது செய்யப்பட்டனர் என்பது இங்கு கவனிக்கத்தக்கது.


மிகுதியானோர் வேறு இடங்களில் வைத்துக் கைது செய்யப்பட்டனர். இதில் நீதிமன்றப் பக்கமே போகாதவர்களும் கைது செய்யப்பட்டனர் என்பதுதான் பொலிஸாரின் பொறுப்பற்ற தன்மை என்ற விமர்சனத்தை ஏற்படுத்துகிறது.

நீதிமன்றத்தாக்குதல் நடந்து சில மணிநேரங்களின் பின்னர் யாழ். முனீஸ்வரன் வீதியூடாக சில இளைஞர்கள் வாகனத்தில் வந்தனர். மரணச் சடங்கொன்றில் பாண்ட் வாத்தியம் இசைத்து விட்டு வந்த அந்த இளைஞர்களையும் பொலிஸார் கைது செய்தனர்.

ஐயா! நாங்கள் மரண வீட்டில் பாண்ட் இசைத்து விட்டு வருகிறோம் என்று எவ்வளவோ சொல்லியும் கேட்காத பொலிஸார் ஏறுங்கடா ஜீப்பில் என்ற உத்தரவை மட்டுமே பிறப்பிக்கும் மனநிலையில் இருந்தனர்.

என்ன செய்வது மரணச் சடங்கில் பாண்ட் வாத்தியம் வாசித்துவிட்டு வீடு செல்லச் சென்றவர்கள் அநுராதபுரம் சிறைக்குச் சென்றதைத்தான் விதி என்று சொல்வது போலும்.

இதுபோல 132 இளைஞர்களின் கைதுகளும் ஒவ்வொரு செய்தியைக் கூறுவதாக உள்ளது. இதில் சிலர் பிரபல்யமான பாடசாலை மாணவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.





ஆர்ப்பாட்டம்; நீதி மன்றத்தின்மீது தாக்குதல் என எல்லாம் முடிந்த பின்பு என்ன நடந்தது என்று வேடிக்கை பார்க்கச் சென்ற மாணவர்கள் சிலர் கைது செய்யப்பட்டனர் என்பதற்கப்பால் அந்த மாணவர்கள்மீது பொலிஸார் மூன்று குற்றச்சாட்டுக்களை பதிவு செய்தனர்.

சிறைச்சாலை வாகனத்தை உடைத்தமை

நீதிமன்றத்தைத் தாக்கியமை

பொலிஸ் சேவைக்கு இடையூறு விளைவித்தமை

ஆகிய மூன்று குற்றச்சாட்டுக்கள் பதிவாகின.

இதுதவிர யாழ்ப்பாணப் பொலிஸ் நிலைய வீதியால் வரும் போது மோட்டார் சைக்கிள் காற்றுப்போக, பொலிஸ் நிலையத்தை அண்மித்த மரநிழலில் மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு காற்றுப்போன சைக்கிளைக் கழற்றிச் சென்று அதனை ஒட்டிக் கொண்டு மீள வந்த வரையும் பொலிஸார் கைது செய்தமையை நினைக்கும்போது ஒருபுறம் சிரிப்பு. மறுபுறம் தாளாதவேதனை.

காலப்பிழை என்றால் ஓடி வந்த மோட்டார் சைக்கிளும் காற்றுப்போய் பொலிஸாரிடம் மாட்டி வைக்கும் என்பதாக அந்த இளைஞனின் நிலைமை அமைந்தது.

ஆக, நீதிமன்றத் தாக்குதலின் போது கைது செய்யப்பட்ட 132 இளைஞர்களும் வெவ்வேறு இடங்களில் வைத்து கைது செய்யப்பட்டனர் என்ற உண்மையை இப்போதாவது அறியமுடிகிறதல்லவா!

(தொடரும்)

புருசோத்மன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்பியால் சிக்கிய ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள்; 24 மணித்தியாலத்திற்குள் தலைமையகம் தகர்ப்பு

**(வோஷிங்டன்)**

**சிரியாவில் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் எடுத்த செல்பி புகைப்படம், அவர்களது தலைமையகத்தை காட்டிக் கொடுத்துள்ளது. ஐ.எஸ் ஐ.எஸ்.தீவிரவாதிகளால் வெளியிடப்பட்ட புகைப்படத்தை கொண்டு, இடத்தை கண்டுபிடித்த அமெரிக்கா 24 மணித்தியாலத்திற்குள் சரமாரியாக குண்டுகளை வீசி அழித்தது.**




ஈராக்கில் ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகள் மீது அமெரிக்கா வான்வழி தாக்குதல் நடத்த வேண்டும் என்று ஈராக்கும், குர்திசும் தொடர்ந்து வலியுறுத்தியது. இதனையடுத்து சிரியா மற்றும் ஈராக்கில் அமெரிக்கா தலைமையில் உலக நாடுகளின் படை வான் வழி தாக்குதலை நடத்தி வருகிறது. இதுவரையில் சிரியா, ஈராக்கில் அமெரிக்கா தலைமையிலான உலகநாடுகள் படை நடத்திய வான் வெளி தாக்குதலில் 10 ஆயிரம் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர் என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இருப்பினும், ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளும் பதிலடி கொடுத்து வருகின்றனர். அவர்களின் முன்னேற்றமானது, அமெரிக்கா தலைமையிலான படைக்கு மிகவும் பின்னடைவு என்று கருதப்பட்டது.

இந்நிலையில் சிரியாவில் ஐ.எஸ். ஐ.எஸ். தலைமையகம் தகர்க்கப்பட்டுள்ளது. சிரியா மற்றும் ஈராக்கில் செயற்பட்டு வரும் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் அவ்வப்போது தங்களது வெற்றி கொண்டாட்டத்தை போட்டோ எடுத்து சமூக வலைத்தளங்களில் பதிவேற்றம் செய்வதை வழக்கமாக கொண்டுள்ளனர். ஐ.எஸ்.ஐ.எஸ்.தீவிரவாதிகள் எடுத்த செல்பி அவர்களுக்கு அழிவை தற்போது ஏற்படுத்தியுள்ளது.

சிரியாவில் உள்ள ஐ.எஸ்.ஐ.எஸ். தலைமை கத்தில் எடுத்த செல்பியை தீவிரவாதிகள் சமூக வலைத்தளங்களில் பதிவேற்றம் செய்துள்ளனர். இதுதொடர்பான புகைப்படங்களை ஆய்வு செய்த அமெரிக்கா, சிறிதும் தாமதிக்காமல் தாக்குதலை தொடுத்தது. சுமார் 24 மணித்தியாலத்திற்குள் சிரியாவில் ஐ.எஸ்.ஐ.எஸ். தலைமையகத்தை தரைமட்டம் ஆக்கியது.

அமெரிக்க போர் விமானங்கள் உடனடியாக சென்று சரமாரியாக நடத்திய குண்டுவீச்சு தாக்குதலில் தீவிரவாதிகளும் கொல்லப்பட்டனர், கட்டடமும் அழிக்கப்பட்டது. அமெரிக்காவின் ஜெ.டி.ஏ. எம். (மொத்தமாக நேரடியாக குண்டு போட்டு தாக்கும் படை)பிரிவு வெற்றி கரமாக தாக்குதலை நடத்தியது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் முழு விபரங்களை அமெரிக்கா வெளியிடவில்லை.

இதுவரையில் மிகவும் கவனமாக செயற்பட்டு, உலக நாடுகளின் படையிடம் அடையாளத்துடன் சிக்காத ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் புகைப்படத்தை வெளியிட்டு மாட்டிக் கொண்டு, அழிவை சந்தித்தனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## 41வருடம் நீடித்த சிக்கல் ஒப்பந்தத்தால் முடிவுக்கு

(டாக்கா)

இந்தியாவுக்கும் வங்கதேசத்துக்கும் இடையே 4096 கி.மீ. தூர எல்லை பிரச்சினையில் நேற்று முன்தினம் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டதால் 41 வருட கால சிக்கல் முடிவுக்கு வந்துள்ளளது.

இதன் மூலம் குடியுரிமை இல்லாமல் தவித்து வந்த 50 ஆயிரம் பேருக்கு குடியுரிமை கிடைக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இந்தியா-வங்கதேசம் இடையே 22 ஒப்பந்தங்கள் கையெழுத்தான பின் பேசிய பிரதமர் மோடி, இரு அரசுக்கு இடையே உள்ள எல்லை பிரச்சினையில் தீர்வு ஏற்பட்டுள்ளது என தெரிவித்தார்.

அதேபோல் வங்கதேசத்தில் உள்ள மோங்லா மற்றும் சிட்டகாங் துறைமுகத்துக்கு இந்திய சரக்கு கப்பல்களை அனுமதிக்கவும் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதுவரை இந்தியாவிலிருந்து சரக்குகளை சுமந்து செல்லும் சரக்கு கப்பல்கள் சிங்கப்பூரில் அவற்றை தரையிறக்கும்.

பின்னர் சிங்கப்பூரில் இருந்து வேறொரு கப்பல் மூலம் அந்த சரக்குகள் வங்கதேசத்துக்கு அனுப்பப்படும்.

தற்போது மோங்லா மற்றும் சிட்டகாங் துறைமுகத்துக்குள் நுழைய இந்திய கப்பல்களுக்கு அனுமதி கிடைத்திருப்பதால், இனி நேரிடையாகவே இந்தியாவிலிருந்து வங்கதேசத்துக்கு சரக்குகளை கொண்டு செல்லமுடியும்.

இதுவரை வங்கதேசத்திற்கு சரக்குகள் செல்ல 30 முதல் 40 நாட்களுக்கு மேல் ஆன நிலையில், இனிமேல் ஒரே வாரத்தில் சரககுகளை கொண்டு செல்ல முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)


## அமெரிக்க விமானத் தாக்குதலில் சிக்கி பாகிஸ்தானில் 9 பயங்கரவாதிகள் பலி

பாகிஸ்தானில் தலிபான் பயங்கரவாதிகள் ஆதிக்கம் நிறைந்த வடக்கு வஸிரிஸ்தான் பழங்குடியின பகுதியில், அமெரிக்க ஆளில்லா விமானம் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடத்திய தாக்குதலில் 9 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டுள்ளனர்.

ஆப்கானிஸ்தான் எல்லையையொட்டி அமைந்துள்ள இப்பகுதியில் பயங்கரவாதிகள் பதுங்கியிருந்த ஒரு வீட்டைக் குறிவைத்து ஆளில்லா விமானம் ஏவுகணைகளை வீசியது.

இதுதொடர்பாக, பாதுகாப்பு அதிகாரி ஒருவர் கூறுகையில், "கொல்லப்பட்ட 9 பேரும் ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த தலிபான் பயங்கரவாதிகளாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. அவர்களின் அடையாளங்கள் இன்னும் தெரியவில்லை" என்றார். பயங்கரவாதிகளை ஒழித்துக் கட்டும் நோக்கில், பாகிஸ்தானின்எதிர்ப்பையும்மீறி அங்கு அமெரிக்க ஆளில்லா விமானங்கள் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது.(இ-5)

## 12-ம் நூற்றாண்டைச் சேர்ந்த தகேஷ்வரி கோவிலில் மோடி வழிபாடு



(டாக்கா)

வங்கதேச தலைநகர் டாக்காவின் லால்பாக் பகுதியில் உள்ள 12ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த புகழ்பெற்ற தகேஷ்வரி ஆலயத்திற்கு நேற்று காலை சென்ற பிரதமர் நரேந்திர மோடி பூஜை செய்து வழிபட்டார். அவருக்கு, கோயில் நிர்வாகத்தின் சார்பில் தகேஷ்வரி சிலை ஒன்று பரிசாக வழங்கப்பட்டது.

பிரதமரின் இந்த வழிபாடு குறித்து வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் விகாஸ் ஸ்வரூப் டுவிட்டரில் புகைப்படத்துடன் செய்தி வெளியிட்டார். கோவில் வழிபாடு முடிந்ததும் அருகிலுள்ள ராமகிருஷ்ண மடத்திற்குச் சென்ற மோடிக்கு அங்குள்ள துறவிகள் தங்கள் வாழ்த்துக்களை தெரிவித்து ஆசி வழங்கினர். (இ-5)

## இந்துக்களைப் பாதுகாக்க மோடி தலையிடவேண்டும்

பிரதமர் நரேந்திர மோடி, வங்கதேசத்துக்கு சுற்றுப் பயணம் மேற்கொணடுள்ள நிலையில், அங்குள்ள இந்துக்கள் பாதுகாப்பற்ற சூழலில் வாழ்வதாகவும், இப்பிரச்சினையைத் தீர்க்க மோடி தலையிட்டு உதவ வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டது. இதுதொடர்பாக வங்கதேச இந்து, புத்த, கிறிஸ்தவ ஒற்றுமை மன்றத்தின் பொதுச் செயலாளர் ராணா தாஸ் குப்தா கூறியதாவது,

வங்கதேசத்தில் பிறந்து வளர்ந்த இந்துக்களை, நாட்டை விட்டே வெளியேற்ற வேண்டும் என்று பெரும்பான்மை மதத்தினரும், அடிப்படைவாதக் குழுக்களும் விரும்புகின்றன. அடிப்படைவாதிகளால், எப்போது வேண்டுமானாலும் துன்புறுத்தப்படலாம் என்ற அச்சத்துடனேயே, இந்துக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

வங்கதேசத்தில் சிறுபான்மையினத்தவரான இந்துக்கள் மீது அடிப்படைவாதக் குழுக்கள் நடத்தும் தாக்குதலை இனியும் பொறுத்துக் கொள்ள முடியாது என்று பிரதமர் மோடி, உறுதியான செய்தியை தெரிவித்து விட்டுச் செல்ல வேண்டும் என்றார் அவர்.

இப்பிரச்சினை குறித்து நாடக ஆர்வலர் பியூஷ் பந்தோபாத்யாய கூறுகையில், சிறுபான்மையினர் சந்தித்துவரும் பிரச்சினைகள் குறித்து வங்கதேசப் பிரதமர் ஷேக் ஹசீனாவுடன், மோடி பேச வேண்டும் எனத் தெரிவித்தனர். (இ-5)

## மெர்ஸ்ஸால் மேலும் ஒருவர் மரணம் பலிஎண்ணிக்கையும் 5 ஆக உயர்வு

(சியோல்)

சவுதிஅரேபியா நாட்டில் சுற்றுலா சென்றுவிட்டு கடந்த 20 ஆம் திகதி தென்கொரியா திரும்பிய 60 வயது நபரை மெர்ஸ் நோய் தாக்கியது கண்டுபிடிக்கப்பட்டது.

அவர் மூலமாக அந்நாட்டில் உள்ள பலருக்கும் இந்நோய் பரவியதில் நேற்று முன்தினம் வரை 4 பேர் பலியாகியிருந்தனர்.

இந்நிலையில் இன்று மேலும் ஒருவர் பலியானதால், பலி எண்ணிக்கை 5 ஆக உயர்ந்துள்ளது.

இந்நோயால்நேரிடையாக தாக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை 65 ஆகவும் அதிகரித்துள்ளது. இது தவிர ஆயிரத்துக்கும் மேற்பட்டோரை இந்நோய் தாக்கியிருக்கக்கூடும் என்ற அச்சத்தின் காரண மாக, அவர்கள் தனி வார்டில் வைக்கப்பட்டு, தீவிர கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். தொடர்ந்து அந்நாடு முழுவதும் உஷார் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், அந்நாட்டில் உள்ள பாடசாலைகள் மற்றும் கல்லூரிகள் மூடப்பட்டுள்ளன.

இந்நோய் காற்றில் பரவாமல், நோயால் பாதிக்கப்பட்டவர்களுடன் நெருக்கமாக இருக்கும் மற்றவர்களுக்கு பரவுவதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

எனினும் அங்கு வீதியில் முக கவசம் அணிந்து செல்பவர்கள் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. (இ-5)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

நீதியே ஆட்சியின் உயிர். நடுநிலைமையே நீதியின் உயிர்.

– ஜஸ்டினியன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## முளையில் கிள்ளிவிட கடும்முயற்சி செய்யுங்கள்

விடுதலைப்புலிகள் என்ற அமைப்பை தமிழ் மக்கள் ஆதரித்ததற்குள் பல காரணங்கள் இருக்கின்றன. அதில் ஒன்று, சமூக விரோதிகளை புலிகள் கட்டுப்படுத்தியமை முக்கியமானதாகும்.

ஒரு காலத்தில் பிரதேச சண்டித்தனங்களில் வடபுலம் மிகப்பெரும் கஷ்டங்களை அனுபவித்தது. தெருச் சண்டை, ஊர்ச்சண்டை, கோஷ்டி மோதல், பெண்களுடனான சேட்டை, திருட்டு, அடாவடித்தனம், ஏமாற்றுதல் உள்ளிட்ட பல நாசகாரங்களுக்கு விடுதலை புலிகள் முற்றுப்புள்ளி வைத்தனர்.

சமூக விரோத செயற்பாட்டில் ஈடுபட்ட பலருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. இதனால் விடுதலைப் புலிகளின் காலத்தில் நிம்மதியாக உறங்கலாம் என்ற நம்பிக்கை மக்களிடமிருந்தது. வன்னிப் போருக்குப் பின்பான சூழ்நிலை என்பது வேறாக உள்ளது.

அதாவது, விடுதலைப் புலிகள் இல்லாத வடபுலத்தின் சமகால நிலைமை ஆரோக்கியமாகத் தெரியவில்லை. பொலிஸ் நிர்வாகம் எங்கும் பரந்திருந்தாலும் சமூக விரோதச் செயல்கள் வட புலத்து மக்களை மிக மோசமாகப் பாதித்துவருவது கண்கூடு.

கோஷ்டி மோதல்கள், வாள்வெட்டுச் சம்பவங்கள், போதைப்பொருள்கள் விற்பனை, சண்டித்தனங்கள் என சமூக விரோதச் செயல்கள் வேகமாகிவருவதை காணமுடிகிறது.

இத்தகைய நிலைமைகள் பொலிஸாரின் அசமந்தம் காரணமாக அதிகரிக்கின்ற வாய்ப்புண்டு. பொலிஸாரில் பலர் இலஞ்சம் பெறுவதில் கண்ணும் கருத்துமாக இருக்கின்றனர்.

பொலிஸாருக்கு காசைத்தள்ளிவிட்டால் எல்லாம் சரியாகும் என்ற நினைப்பு சமூக விரோதிகளுக்கு ஊக்க மருந்தாக உள்ளது.

அதேநேரம் வடபகுதியில் கடமையாற்றும் பொலிஸார் வருமானம் உழைக்கக் கூடிய ஒரு இடமாகவே வடபகுதியைப் பார்க்கின்றனர்.

இத்தகைய நிலைமைகள் அறவே நீக்கப்பட்டு சமூக விரோதிகளை கட்டுப்படுத்தும் பணியில் பொலிஸார் இறங்கவேண்டும்.

இதற்காக பொலிஸ் – பொது மக்கள் நல்லுறவு அமைப்புகள் ஊர்கள் தோறும் தோற்றுவிக்கப்படுவது பொருத்தமானதாக இருக்கும்.

இவையெல்லாவற்றுக்கும் மேலாக சிவில் சமூக அமைப்பு என்பது பிரதேச, மாவட்ட, மாகாண ரீதியில் அமைக்கப்பட்டு அவற்றை இயங்கு நிலையில் வைத்திருப்பதும் அவசியம்.

எந்த இடத்தில் என்ன பிரச்சினை நடந்தாலும் அது பற்றி சிவில் சமூகம் அறிந்து வைத்திருப்பதுடன், அரசியல் அமைப்புகள் பொது நிர்வாகம் என்பன தொடர்பில் ஆலோசனைகள் தீர்மானங்கள் என்பவற்றை முன்மொழிகின்ற ஆளுமையும் சிவில் சமூகம் கொண்டிருக்க வேண்டும்.

இல்லையாயின் வட பகுதியில் நாளாந்தம் வாள் வெட்டுச் சம்பவங்களும் ஊர்ச்சண்டைகளுமே மிஞ்சும் என்பது நிறுத்திட்டமான உண்மை.

போக்குவரத்து பொலிஸார் சேவையில் தாராளமாக ஈடுபட்டுள்ள போதிலும் இன்றுவரை வட பகுதியில் விபத்துக்களும் அதனால் ஏற்படும் மரணங்களும் அதிகரித்துக்கொண்டே செல்கிறது.

இதற்கான காரணம் என்ன? சாரதி அனுமதிப் பத்திரம், மூன்றாம் நபர் காப்புறுதி என்பவற்றை சோதிப்பதன் மூலம் விபத்தைத் தடுக்க முடியாது என்பது பொலிஸாருக்கு நன்கு தெரியுமாயினும் இத்தகைய சோதனைகள் மூலமாகவே தங்களுக்கான வருமானத்தை உழைக்க முடியும் என்றும் அவர்கள் கருதுகின்றனர்.

இதனால் விபத்தை தடுக்கும் வழிமுறைபற்றிய மாற்றுச் சிந்தனைகளுக்கு இடமில்லாமல் போகிறது. ஆக, வட பகுதியில் நடக்கும் சமூக விரோத செயல்கள், வாகன விபத்துக்கள், போதைப்பொருள் விற்பனை போன்றவற்றை அடியோடு ஒழிப்பதாக இருந்தால் எமது மண்ணில் மிக பலமான சிவில் சமூக அமைப்பு இயங்க வேண்டும். இதனை செய்யாதவிடத்து வடபுலத்தின் எதிர்கால அமைதி என்பது ஆரோக்கியமற்றதாகவே இருக்கும்.

# பிரபாகரன் சிலையை மீண்டும் வீரத்துடன் அங்கேயே நிறுவுவோம்

## சிலை அகற்றப்பட்டமைக்கு செந்தமிழன் சீமான் கொதிப்பு

(சென்னை)

தமிழகத்தின் நாகபட்டினம் மாவட்டம் பொய்கை நல்லூர் கிராமத்தில் நிறுவப்பட்டிருந்த விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் சிலை அகற்றப்பட்டதைக் கண்டித்து நாம் தமிழர் கட்சி அறிக்கை வெளியிட்டுள்ளது.

அதில், செந்தமிழன் சீமான் கூறியிருப்பதாவது,

நாகபட்டினம் மாவட்டம் தெற்குப் பொய்கை நல்லூர் ஐயனார் கோயில் வளாகத்தில் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவர்களின் சிலையை நிறுவி வீரத்தின் அடையாளமாக வழிபட்டிருக்கிறார்கள்.

தமிழ் உணர்வாலும் தலைவர் மீது கொண்ட பற்றாலும் தன்னுடைய சொந்த நிலத்தில் ஒருவர் நிறுவியிருந்த சிலையைக் பொலிஸார் அப்புறப்படுத்தி இருக்கிறார்கள்.

குல தெய்வம் ஐயனார் இன தெய்வம் பிரபாகரன் என எண்ணியே தலைவர் பிரபாகரனுக்கு அங்கே சிலை வைக்கப்பட்டிருக்கிறது. இதை அப்புறப்படுத்த பொலிஸாருக்கு எந்த விதத்திலும் உரிமை கிடையாது.

தமிழ்த் தேசிய இனத்தின் வீரமிகு அடையாளமாக, வரலாற்று வடிவமாக, காலம் தந்த கம்பீரமாக தலைவர் பிரபாகரனை மனதில் ஏந்திநிற்கும் தமிழ்ப் பிள்ளைகள் தங்களின் உடல் சதையில் அவருடைய உருவத்தை வரைந்து வைத்திருக்கிறார்கள்.

உள்ளத்தில் மட்டும் அல்லாது தங்கள் இல்லத்திலும் வரவேற்பு அறையில் புகைப்படங்களாக மாட்டி வைத்திருக்கிறார்கள்.

பார்க்கிற போதெல்லாம் வீர உணர்வு கொள்ள அலைபேசி முகப்பிலும் முகநூல் உள்ளிட்ட இணையப் பக்கங்களிலும் தலைவர் பிரபாகரன் படத்தை வடிவமைத்து வைத்திருக்கிறார்கள்.

இல்லத்து நிகழ்வுகளுக்கான அழைப்பிதழ்களிலும் சுவரொட்டிகளிலும் பதாகைகளிலும் தலைவர் படத்தைப் பிரசுரித்து உணர்வை வெளிப்படுத்துகிறார்கள்.

நிலத்தில் நிறுவப்பட்டிருந்த தலைவரின் சிலையை அகற்றியவர்களால் கோடிக்கணக்கான தமிழ் மக்களின் மனதில் நிறுவப்பட்டிருக்கும் எண்ணத்தை என்ன செய்ய முடியும்?

தலைவர் பிரபாகரனின் படத்தை அப்புறப்படுத்த வேண்டிய அவசியம் எதனால் உருவானது?

யாருக்கும் தொந்தரவாக இல்லாமல், தன்னுடைய சொந்த நிலத்தில் ஒருவர் உருவாக்கிய தலைவரின் சிலையால் என்ன சட்டம் ஒழுங்கு சிக்கல் வந்தது?

காவல்துறை பெரிய படையாகக் கிளம்பிப்போய் தலைவர் பிரபாகரனின் சிலையைப் பெயர்த்தெடுத்து அப்புறப்படுத்த நிர்ப்பந்தித்தது யார்?

எவ்விதக் காரணமும் இல்லாமல் தலைவர் பிரபாகரனின் சிலையை அகற்றியிருப்பது ஒவ்வொரு தமிழ்ப் பிள்ளைகளின் உணர்வுகளையும் ஊனமாக்கும் செயல்.

சாதி மதங்களாகப் பிளந்து, தாழ்வு மனப்பான்மையால் 'நம்மால் எதுவும் முடியாது' என முடங்கிப்போய் தாழ்ந்து கடந்த தமிழ் மக்களின் இழி நிலையை மாற்றி நம்மால்தான் முடியும் என்கிற போர்க் குணத்தையும் தமிழுணர்வையும் ஒவ்வொரு தமிழனின் மனதிலும் ஊட்டி, நெஞ்சுரத்தோடு நிமிர வைத்தவர் வே.பிரபாகரன் அவர்கள்.

அவர் வழி பரவும் உணர்வுகள் ஒருமித்த எழுச்சியாகக் கிளம்பிவிடக் கூடாது என்பதற்காகவே இத்தகைய ஒடுக்குதல் நடவடிக்கைகளை அரசுத் தரப்பு செய்து வருகிறது.

தமிழ்ப் பிள்ளைகளின் பேச்சுக்கும் செயலுக்கும்தான் தடைபோட முடியும். ஆனால், அவர்களின் சிந்தனைக்கும் கனவுக்கும் தடை போட இந்த அரசால் எப்படி முடியும்?

உச்சபட்ச போர்க் கொடூரமாக வல்வெட்டித்துறையில் தலைவர் பிரபாகரன் வசித்த வீட்டை இடித்த சிங்கள அதிகாரிகளுக்கும் பிரபாகரனின் சிலையைப் பெயர்த்தெடுத்த தமிழகக் பொலிஸாருக்கும் என்ன வித்தியாசம் இருக்கிறது.

ஒருமித்த தமிழ் மக்களின் உணர்வுகளையும் புரிந்து கொண்டு தலைவர் பிரபாகரன் சிலையை நிறுவிய இடத்திலேயே மறுபடியும் வைக்க அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இல்லையேல், அதே இடத்தில் தலைவர் பிரபாகரனின் சிலையை நாம் தமிழர் கட்சியே மறுபடியும் நிறுவும் என்பதை ஆணித்தரமாக சொல்லிக் கொள்கிறோம் என அந்த அறிக்கையில் சீமான் கூறியுள்ளார். (செ)

## பணத்திற்காக மகளை விற்ற தாய் கைது

(களுத்துறை)

14 வயதான மகளை சில நபர்களுடன் பணத்திற்காக அனுப்பியதாக கூறப்படும் தாய் ஒருவரை எதிர்வரும் 18-ம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மத்துகம நீதவான் தரங்கா மாவத்தகே உத்தரவிட்டுள்ளார்.

களுத்துறை பொலிஸ் பிரிவின் சிறுவர் மற்றும் பெண்கள் பணியகத்தின் பொறுப்பதிகாரி மல்கா துஷாரி பிரதேசத்தில உள்ள பல பாடசாலைகளுக்கு சென்று மாணவிகளுக்கு தெளிவுபடுத்தும் கருத்தரங்குகளை நடத்தியுள்ளார்.


இந்த கருத்தரங்கில் கலந்து கொண்ட 14 வயதான சிறுமி கருத்தரங்கின் பின்னர் பொலிஸ் நிலையத்திற்கு சென்று தான் பாலியல் ரீதியாக துஷ்பிரயோகத் திற்கு உட்படுத்தப்பட்டுள்ளமை குறித்து முறைபாடு செய்துள்ளார்.

இதனையடுத்தே சிறுமியின் தாய் கைது செய்யப்பட்டுள்ளதுடன் நீதவான் முன்னிலையில் ஆஜர்ப்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேக நபரான சிறுமியின் தாய் கடந்த ஒரு வருடமாக தனது மகளை பணத்திற்காக இவ்வாறு அனுப்பி வைத்துள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய ஏனைய நபர்களை கைது செய்ய பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ)

## குலங்காக்கும் கண்ணகியார் குடமுழுக்கு



நெடும் பனைகள் காற்றில் அசைந்தாடும்
நிலக்கடலலைகள் தமிழில் இசை பாடும்
குளிர்ந்த ஆல் பூவரசு வேம்பு யாவும்
நிறைந்த பதியாம் மண்டைதீவு பூம்புகாரில்
புதுக்கோயில் கொண்டின்று நிறைவு கண்ட
பூவிழியாள் திருக்கோயில் குட முழுக்கில்
குலங்காக்கும் கண்ணகியாம் மாதரசிதன்
திருவருளைப் பெற்றிடுவோம் இணைந்து வாரீர்!

**சிரபுரத்தான் - மண்டைதீவு**

**மண்டைதீவு பூமாவடி பூம்புகார் ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலய மகா குடமுழுக்கு இன்று நடைபெறுகின்றது**

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## தற்காலத்திற்கேற்ற உடற்பயிற்சி



நினைவுக்கு எட்டாத காலமுதற்கொண்டே பருவநிலை, வாழ்க்கை முறை, இன்னும் இதர பழக்க வழக்கம் ஆகியவற்றைக் கொண்டு பல்வேறு நாடுகளில் பலவகை யான உடற்பயிற்சிகள் உருவாகியுள்ளன. முன்பு வாழ்க்கை முறை மெதுவாக ஊரும்(நகரும்) நிலையில் இருந்ததால் அதற்குத் தக்கவாறு உடற்பயிற்சி கள்உருவாக்கப்பட்டன. அந்தக் காலம் இப்போது மாறிவிட்டது. விரைவு, அழுத்தம்,பரபரப்பு உள்ள சூழ் நிலையில் நாம் வாழ்கிறோம். நமது தேவைகளும் வேறு விதமாகிவிட்டன. ஆகவே, முந்தைய உடற்பயிற்சிகள் இந்தக்கால சூழ்நிலை களுக்குஏற்றவையாகா.

இது சம்பந்தமாகப் பல ஆண்டுகள் நான் சிந்தித்து வந்தேன். பல விதமானஆசனங்களையும், உடற்பயிற்சிகளையும் ஆராய்ந்து பார்த் தேன். இப்பயிற்சிகளைநானே செய்து பார்த்து அதன் விளைவுகளை எனது உடல் மூலம் தெரிந்துகொண்டேன். இந்திய மருத்துவத் துறையில் எனக்கு இருந்த அறிவு இந்த ஆய்வுக்குஉதவியது. இறுதியாக ஆடவருக்கும், பெண்டிருக்கும், குழந்தைகளுக்கும், பல்வேறு வாழ்க்கை நிலையில் இருப்பவர்களுக்கும், பல்வேறு கால நிலைக்கும் ஏற்றவாறு சிலபயிற்சிகளை ஒழுங்குபடுத்தியுள்ளேன். இந்தப் பயிற்சிகளை ஒழுங்காகச் செய்வதால் உடலுக்குள் பிராணவாயு பரவி என்டோக்கிரின் சுரப்பிகள் இயக்கத்தை ஒழுங்குபடுத்தி, இரத்தத்தைச்-சுத்தப்படுத்தி அதன் ஓட்டத்தை ஒழுங்குபடுத்துகிறது.

நோய் வராதபடி தடுப்பு நிலையை அதிகப்படுத்துகிறது. ஆரோக்கிய மான உடம்பும்,நீடித்த ஆயுளும் உண்டாகின்றன. அதன் மூலம் ஆன்மீகத் தேட்டத்தில் வெற்றி பெற்றுநாம் இந்த மண்ணுலகுக்கு எதன் பொருட்டு வந்தோமோ அதைத் தெளிவாகத் தெரிந்துகொள்கிறோம். இந்தப் பயிற்சிகளை ஒழுங்காகச் செய்பவர்கள் நிச்சயம் நன்மைஅடைவார்கள். எளிய முறைக் குண்டலினி யோகப் பயிற்சியில் ஈடுபட்டுள்ளவர்கள் இந்தப் பயிற்சிகள் செய்து பழகுவதன் மூலம் பெரும் அளவில் நன்மை அடைய லாம்.இந்தப் பயிற்சிகள் அதற்கு அதிக அளவு உதவியாய் இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜோர்ஜ் வெப்ஸ்ரர் வெற்றிக்கிண்ணம்

# யாழ். நகரில் சிறந்த அணித் தெரிவில் ஜொலிஸ்ரார் அணி தொடர்ந்து முன்னிலை




யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகம் ஜோர்ஜ் வெப்ஸ்ரர் வெற்றிக் கிண்ணத்துக்கான யாழ்.நகரில் சிறந்த அணித் தெரிவில் ஜொலிஸ ரார் விளையாட்டுக் கழகம் 9 போட்டிகளில் 6 போட்டியில் வெற்றி பெற்று 44.46 புள்ளிகளுடன் முன் னிலையில் உள்ளது.

ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் 9 போட்டிகளில் பங்குபற்றி 6 போட்டியில் வெற்றிபெற்று 44.46 புள்ளிகளுடன் முதலாமிடத்திலும் கே.சி.சி.விளையாட்டுக்கழகம் 7 போட்டிகளில் பங்குபற்றி 4 போட்டி களில் வெற்றி பெற்று 37.13 புள்ளி களுடன் இரண்டாமிடத்திலும், யாழ். பல்கலைக்கழகம் 8 போட்டிகளில் பங்குபற்றி 4 போட்டிகளில் வெற்றி பெற்று 34.30 புள்ளிகளுடன் மூன்றாம் இடத்திலும்


திருநெல்வேலி கிரிக்கெட் கழகம் 5 போட்டிகளில் பங்குபற்றி 4 போட்டிகளில் வெற்றிபெற்று 29.29 புள்ளிகளுடன் நான்காம் இடத்திலும்

சிறிகாமாட்சி 6 போட்டிகளில் பங்குபற்றி 4 போட்டிகளில் வெற்றி பெற்று 28.07 புள்ளிகளுடன் ஐந்தாம் இடத்திலும் சென்றலைட்ஸ் (சொக்ஸ்) 6 போட்டிகளில் பங்கு பற்றி 3 போட்டிகளில் வெற்றிபெற்று 24.62 புள்ளிகளுடன் ஆறாமிடத்தி லும் பற்றீசியன்ஸ் 5 போட்டிகளில் பங்குபற்றி 3 போட்டிகளில் வெற்றி பெற்று 22.85 புள்ளிகளுடன் ஏழா வது இடத்திலும், ஹாட்லியைற்ஸ் 3 போட்டிகளில் பங்குபற்றி 3 போட்டிகளில் வெற்றிபெற்று 22.85 புள்ளிகளுடன் எட்டாவது இடத்தி லும், யாழ்.சென்றல் 4 போட்டிகளில் பங்குபற்றி 2 போட்டிகளில் வெற்றி பெற்று 22.34 புள்ளிகளுடன் ஒன்பதாவது இடத்திலும்,

ஸ்ரான்லி 4 போட்டிகளில் பங்கு பற்றி 2 போட்டிகளில் வெற்றிபெற்று 20.98 புள்ளிகளுடன் பத்தாவது இடத்திலும் யாழ். ஜொனியன்ஸ் 3 போட்டிகளில் பங்குபற்றி 2 போட்டி களில் வெற்றிபெற்று 20.27 புள்ளிகளுடன் பதினொராம் இடத்தி லும் சென்றலைட்ஸ் (புளுஸ்) 3 போட்டிகளில் பங்குபற்றி 2 போட்டி களில் வெற்றிபெற்று 13.97 புள்ளி களுடன் பன்னிரெண்டாம் இடத்தி லும் மானிப்பாய் பரீஸ் 2 போட்டி களில் பங்குபற்றி 2 போட்டிகளில் வெற்றிபெற்று 13.52 புள்ளிகளு டன் 13 ஆம் இடத்திலும் நியூஸ்ரார் 4போட்டிகளில் பங்குபற்றி 1 போட்டி யில் வெற்றி பெற்று 13.25 புள்ளி களுடன் 14 ஆம் இடத்திலும் கிறாஸ் கொப்பர்ஸ் 3 போட்டிகளில் பங்கு பற்றி 1 போட்டியில் வெற்றிபெற்று 11.61 புள்ளிகளுடன் 15 ஆம் இடத்தி லும் டிறிபேர்க் ஸ்ரார் 3போட்டி களில் பங்குபற்றி 1 போட்டியில் வெற்றிபெற்று 10.12 புள்ளிகளு டன் 16 ஆம் இடத்திலும் விக்ரோறி 3போட்டிகளில் பங்குபற்றி 1 போட்டி யில் வெற்றிபெற்று 9.91 புள்ளி களுடன் 17 ஆம் இடத்திலும் ஓல்ட் கோல்ஸ் 3 போட்டிகளில் பங்கு பற்றி 1 போட்டியில் வெற்றிபெற்று 10.12 புள்ளிகளுடன் 18 ஆம் இடத் திலும் திருநெல்வேலி YMHA 3 போட்டிகளில் பங்கு பற்றி 1 போட் டியில் வெற்றிபெற்று 8.64 புள்ளி களுடன் 19 ஆம் இடத்திலும் அரி யாலை சென்றல் 3போட்டிகளில் பங்குபற்றி தோல்வி யடைந்து 1.07 புள்ளிகளுடன் 20 ஆம் இடத்திலும் றெஜின்போ 3 போட்டிகளில் பங்கு பற்றி தோல்வியடைந்து 4.81 புள்ளிகளுடன் 21 ஆம் இடத்திலும் விங்ஸ் 1 போட்டியில் பங்குபற்றி வெற்றியடைந்து 22 ஆம் இடத்தி லும் யங்ஸ்ரார் 3 போட்டி களில் பங்கு பற்றி தோல் வியடைந்து 2.75 புள்ளிகளுடன் 23 ஆம் இடத்திலும் உள்ளன. (க)

# வடமாகாண வி.திணைக்களத்தின் மரதன் ஓட்டப் போட்டி







வட மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் மாவட்ட மட்ட மரதன்ஓட்டப்போட்டி நேற்று முன தினம் சனிக்கிழமை நடத்தப்பட்டது.

இதில் ஆண்களுக்கான போட்டி யில் வவுனியா மாவட்டத்தினை சேர்ந்த நவநீதன் முதலாமிடத்தை யும் எ.பி.டிசநாயக்க இரண்டா மிடத்தினையும், எம்.கௌரிநாதன் மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

நடைபெற்ற பெண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டியில் வவு னியா மாவட்டத்தினை சேர்ந்த கே.நேர்மதி முதலாமிடத்தினையும் கிளிநொச்சி மாவட்டத்தினை சேர்ந்த ரி.குயிலினி இரண்டாமி டத்தினையும் வவுனியா மாவட் டத்தினை சேர்ந்த வி.தர்சிகா மூன் றாமிடத்தினையும் பெற்றுக் கொண டனர். (க)

## ஐரோப்பிய சம்பியன்ஸ்லீக் காற்பந்து; 5-வது முறையாக பார்சிலோனா சம்பியன்



ஐரோப்பிய சம்பியன்ஸ் லீக் காற்பந்துப் போட்டியில் பெர்லினில் நடந்த இறுதிப் போட்டியில் யுவன் டஸை வீழ்த்தி பார்சிலோனாஅணி ஐந் தாவது முறையாக மகுடத்தை சூடியது.


இந்த சீசனுக்கான (2014-15) ஐரோப்பிய சம்பியன்ஸ் லீக் கிளப் காற்பந்துபோட்டித்தொடர்கடந்த ஆண்டு செப்டெம்பர் மாதம் தொடங்கியது.

இதில் ஐரோப்பா கண்டத்தை சேர்ந்த பிரபலமான 20 கிளப் அணி கள் பங்கேற்றன. லீக் மற்றும் நாக்-அவுட் சுற்று முடிவில் ஸ்பெயினை சேர்ந்த பார்சிலோனாவும், இத் தாலியை சேர்ந்த கிளப் அணி யான யுவன்டசும் இறுதிப்போட் டிக்கு முன்னேறின.4 முறை சம்பி யனான பார்சிலோனா கிளப்பில் புகழ பெற்ற வீரர்களான லயோனல் மெஸ்சி, நெய்மர், லூயிஸ் சுவாரஸ் ஆகியோர் இடம் பெற்றிருக்கிறார்கள்.

இந்த நிலையில் காற்பந்து ரசிகர்களின் மிகுந்த எதிர்பார்ப் புக்கு மத்தியில் பார்சிலோனா-யுவ ன்டஸ் இடையிலான இறு திப்போ ட்டி ஜேர்மனி தலைநகர் பெர்லி னில் உள்ள ஒலிம்பிக் ஸ்டேடிய த்தில் நேற்று முன்தினம் நடந்தது. எதிர்பார்த்தது போலவே பார்சி லோனா யுவன்டஸை 3-1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி வெற்றி பெற்றது. இதன் மூலம் ஐரோப்பிய சம்பியன்ஸ் லீக் காற்பந்து கோப் பையை ஐந்தாவது முறையாக வென்றது. ஆனால் யுவன்டஸ் 6-வது முறையாக இறுதி போட்டியில் தோல்வி அடைந்துள்ளது. இந்த போட்டியில் வாகை சூடியதின் மூலம் பார்சிலோனா அணி 2015-ம் ஆண்டு 'பிபா' உலக கோப்பை கிளப் காற்பந்து போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது. (க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# முதல் தடவையாக மகுடம்

பிரெஞ் ஓபன் டெனிஸ் தொடரின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் சுவிட்சர்லாந்தின் ஸ்ரனிஸ்லாஸ் வாவ்ரிங்கா சம்பியனானார். நேற்று நடைபெற்ற ஆடவர் இறுதிப் போட்டியில் சேர்பியாவின் நேவாக் ஜோகோவிக்கை 4:6, 6:4, 6:3, 6:4 என்ற செட் கணக்கில் வீழ்த்தி சம்பியன் பட்டத்தை தனதாக்கினார். பிரெஞ் ஓபனில் இவர் வெல்லும் கன்னிப் பட்டம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது.




## பிரெஞ் ஓபன் டென்னிஸ்

# மகளிர் இரட்டையர் பிரிவில் அமெ.- செக். இணை சம்பியன்

பிரெஞ் ஓபன் டென்னிஸ் தொடரில் மகளிர் இரட்டையர் பிரிவில் ஐக்கிய அமெரிக்காவின் பெத்தானி மட்ராக் - சண்ட்ஸ் (வலது), செக் குடியரசின் லூசி சபரோவா ஜோடி சம்பியனாகியது. நேற்று நடைபெற்ற மகளிர் இரட்டையர் இறுதிப் போட்டியில் அவுஸ்திரேலியாவின் கேசி டெலாகுவா - கஜகஸ்தானின் யெரேஸ்லேவா செபடோவா ஜோடியை 3:6, 6:4, 6:2 என்ற கணக்கில் வீழ்த்தியே சம்பியனாகியது.

# இங்கிலாந்தில் ஹெயில் மீண்டும் வாணவேடிக்கை



இங்கிலாந்து நட்வெஸ்ட் இருபது-20 தொடரில்ஹம்ஷயர் அணிக்கு எதிரான போட்டியில் சமர்சட் அணிக்காக விளையாடும் மே.தீவுகளின் அதிரடி வீரர் கிறிஸ் ஹெய்ல் மீண்டும் தனது அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

டான்டனில் நடந்த இந்த லீக் போட்டியில் நாணயசுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய ஹம்ஷயர் அணி 20 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்டுக்களை இழந்து 167 ஓட்டங்கள் எடுத்தது.

இதில் அணித் தலைவர் வின்ஸ (64) அரைசதம் எடுத்தார். ஏர்வின் (30) தன் பங்கிற்கு ஓரளவு ஓட்டங்களை குவித்தார்.

இதைத் தொடர்ந்து சற்று எளிய இலக்கை விரட்டிய சமர்சட் அணிக்கு, கிறிஸ் ஹெய்ல்-டிரிகோ ஜோடி நல்ல நிலையை உருவாக்கியது. இருவரும்ஹாம்ஷயர்அணியை வெளுத்து வாங்கினர்.

டிரிகோ (51) அரைசதம் கடந்து ஆட்டமிழந்தார். மறுமுனையில் அதிரடி காட்டிய ஹெய்ல், சிக்சர் மழை பொழிந்தார்.

இதில் 36 பந்துகளில் அரைசதத்தை பதிவு செய்ததுடன், யசிர் அராபத் பந்தை சிக்சருக்கு அனுப்பி வெற்றியையும் உறுதி செய்தார்.

இறுதியில் சமர்சட் அணி 18.3 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை (173) அடைந்தது.

துடுப்பாட்டத்தில் ஹெய்ல் 49 பந்துகளில் 85 ஓட்டங்கள் (8 சிக்சர்கள், 4 பவுண்டரிகள்), ஹில்டிரத் 27 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

# 20 ஓவர் போட்டிகளில் புதிய மைல்கல்லை எட்டிய டில்சான்

இலங்கை அணியின் நட்சத்திர ஆட்டக்காரர் டில்ஷான், இருபது-20 போட்டிகளில் 4000 ஓட்டங்களை என்ற மைல்கல்லை எட்டியுள்ளார்.

இங்கிலாந்தில் நாட்வெஸ்ட் இருபது-20 தொடரில் நேற்று முன்தினம் நடந்த ஆட்டத்தில் டெர்பைஷயர்- துர்ஹாம் அணிகள் மோதின.

முதலில் விளையாடிய துர்ஹாம அணி 20 ஓவர் முடிவில் 7 விக்கெட் இழப்பிற்கு 147 ஓட்டங்களை எடுத்தது.

மஸ்டார்ட் (20), ஸ்டோன்மென (28), கோலிங்வுட் (41) சிறப்பாக விளையாடி அணியின் ஓட்டங்களை உயர்த்தினர்.

இதைத் தொடர்ந்து எளிய இலக்கை நோக்கி களமிறங்கிய டெர்பைஷயர் அணிக்கு டில்ஷான், டுர்ஸ்டன் சிறப்பான தொடக்கம் கொடுத்தனர்.

டுர்ஸ்டன் (21) ஆட்டமிழக்க, அடுத்து வந்த ஹியூக்ஸ் 21 ஓட்டங்களில் வெளியேறினார்.

சிறப்பாக விளையாடிய டில்ஷான் (54) அரைசதம் கடந்து இலக்கை. எட்ட உதவினார். மேலும் மொத்தமாக இருபது-20 போட்டிகளில் 4000 ஓட்டங்களை கடந்தார்.

இருப்பினும் அடுத்து வந்தவர்கள் சோபிக்க தவறியதால் டெர்பைஷயர் அணியால் 20 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட் இழப்பிற்கு 142 ஓட்டங்களே எடுக்க முடிந்தது. இதனால் துர்ஹாம் அணி 5 ஓட்டங்களால் திரில் வெற்றி பெற்றது.



## 20ஆவது...

த்தை ஏற்படுத்தினால் அந்த சிறு குழுவில் இருக்கின்ற பெரும்பாலானோர் ஒருபோதும் நாடாளுமன்றத்துக்கு வருகைதரமுடியாது என்றும் அந்த அமைப்பு சுட்டிக் காட்டியுள்ளது.

பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டு வந்து நாடாளுமன்றத்தை கலைப்பதற்கும் அந்த சிறு குழுவே முயறசிக்கின்றது.

ஜனாதிபதியும் பிரதமர் தலைமையிலான அரசாங்கமும் அர்ப்பணிப்புடன் செயற்பாட்டால் மட்டுமே அந்த சிறுகுழுவின் முயற்சியை தோல்வியுறச்செய்து அரசியல் கலாசாரத்தை மாற்றியமைக்க முடியும் என்றும் கபே அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது. (செ)

## வடக்கில்...

யப்பட்டமையைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் வன்முறைகள் ஏற்பட்டன.

குறித்த விடயங்களை நேரடியாக ஆராயும் வகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்து புங்குடுதீவு மகா வித்தியாலய மாணவர்கள் உள்ளிட்ட பாடசாலை மாணவர்களை யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் சந்தித்து கலந்துரையாடினார்.

அதன்போது மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் முன்வைத்த அதிகரித்த போதைப் பொருள் பாவனை என்ற கருத்தையே வடக்கு முதலமைச்சர் உள்ளிட்ட அதிகாரிகளும் ஜனாதிபதிக்கு தெரியப்படுத்தியிருந்தனர்.

அத்துடன் போதைப் பொருள் பாவனையினாலேயே பாலியல் வனபுணர்வு சம்பவங்கள் இடம் பெறுவதாகவும் இதன்போது சுட்டிக் காட்டப்பட்டது.

இந்த நிலையில் தேசிய போதைப் பொருள் கட்டுப்பாட்டு சபைக்கு ஜனாதிபதி இந்த அறிவிப்பை நேற்று விடுத்துள்ளார்.

அதற்கமைய இன்று திங்கட்கிழமை வடக்கு முதல்வருக்கும் கொழும்பிலுள்ள அதிகாரிகளுக்கும் இடையில் குறித்த விடயம் தொடர்பில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தநிலையில், வடக்கு மாகாண சபையுடன் கொழும்பு அதிகாரிகள் மேற்கொள்ளும் முதலாவது செயற்பாடாகவும் இந்த நடவடிக்கை அமையும என்பது குறிப்பிடத்தக்கது. (செ)

## தலை துண்...

முண்டம் வீதியில் நடுவே இரத்தம் சிந்தியபடி காணப்பட்டுள்ளது.

முண்டத்தின் மேலாக வீதியில் பயணித்த சில வாகனங்கள் ஏறிச் சென்றிருக்கலாம் எனவும் கூறப்படும் நிலையில் தலைப் பகுதி வேறாகியுள்ளமை மேலும் பல சந்தேகங்களை உருவாக்கியுள்ளது.

வீதியில் பயணித்த டிப்பர் வாகனம் ஒன்று குறுக்கே காணப்பட்ட சடலத்தை தாண்டிச் செல்ல முறட்ட வேளை சாரதி இதனை அவதானித்து பொலிஸாருக்கு தெரியப்படுத்தியுள்ளார்.

சம்பவ இடத்திற்கு வந்த பளை பொலிஸார் முண்டத்தையும் தலையையும் மீட்டு பிரேத மற்றும் உடற் கூற்றுப் பரிசோதனைக்காக பளை வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றுள்ளனர்.

இதேவேளை சம்பவத்தினை கேள்வியுற்று நேற்றிரவு அப்பகுதியில் பெருந்திரளான மக்கள் கூடியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-85)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ராஜபக்ஷ...

கள் உட்பட பல கொடுக்கல் வாங்கல்கள் குறித்த விசாரணைகள் முடிவுவரைக்கு சென்றால் கோத்தபாய ராஜபக்ஷவே குற்றவாளியாவார்.

சீ.எஸ்.என் தொலைக்காட்சி தொடர்பில் விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. அந்த விசாரணை முடிவு வரை மேற்கொள் ளப்பட்டால் யோஷித ராஜபக்ஷவே சிக்குவார்.

கெத்தாராம விளையாட்டு மைதானத்தில் பொருத்தப்பட்டுள்ள இரவு நேர விளையாட்டுக்கான மின் விளக்குகளை கழற்றி அவற்றை கண்டிக்கு கொண்டு சென்று இரவு நேர கார் ஓட்டப் பந்தய போட்டி நடத்தியுள்ளனர்.

கழற்றிச் செல்லப்பட்ட 78 மில்லியன் பெறுமதியான மின் விளக்குகள் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்திடம் மீள கையளிக்கப்படவில்லை. அது குறித்த விசாரணைகளை முடிவு வரைக்கும் மேற்கொண்டால் நாமல் ராஜபக்ஷவே சிக்குவார்.

சிரிலிய வங்கி கணக்கு தொடர்பான விசாரணை முற்றாக மேற்கொள்ளப்பட்டால், ஷராந்தி ராஜபக்ஷவே குற்றவாளியாவார்.

புஷ்பா ராஜபக்ஷ நிதியம் தொடர்பான விசாரணைகள் முற்றாக நடத்தப்பட்டால், பசில் ராஜபக்ஷவின் மனைவியே குற்றவாளியாவார்.

எயர் லங்கா கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விசாரணைகள் முடிவு வரைக்கும சென்றால், மகிந்த ராஜபக்ஷவின் மனைவி ஷராந்தி ராஜபக்ஷவின் சகோதரர் நிஷாந்த விக்கிரமசிங்கவே சிக்குவார்.

உக்ரைன் போராளிகளுக்கு ஆயுதங்களை விற்பனை செய்தமை தொடர்பான வசாரணைகள் உரிய முறையில் இறுதி வரை மேற்கொள்ளப்பட்டால், மகிந்த ராஜபக்ஷவின் உறவினரான உதயங்க வீரதுங்கவே சிக்குவார்.

அதேபோல் விடுதலைப் புலிகளுக்கு பணம் வழங்கியமை தொடர்பான விசாரணைகள் நடத்தப்பட்டு அது முடிவு வரைக்கும் சென்றால் மகிந்த ராஜபக்ஷவே குற்றவாளியாவார்.

இதனால், இந்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணைகளை நடத்தி முன்னாள் ஜனாதிபதி உட்பட அவரது குடும்பத்தினருக்கு தண்டனை வழங்க வேண்டியுள்ளதாகவும் அனுரகுமார திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார். (செ)

## எழிலன்...

னர், செய்ம்மதி தொலைபேசி மூலம் கனிமொழியுடன் உரையாடியிருந்ததாக, இந்து பத்திரிகைக்கு அளித்துள்ள பேட்டியொன்றின் போதும் முல்லைத்தீவு நீதவான் முன்னிலையில் சாட்சியளிக்கும் போதும், அனந்தி கூறியிருந்தார்.

அனந்தியின் இந்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் பதிலளித்துள்ள கனிமொழி எம்.பி, யாரையும் இலங்கை அரசாங்கத்தின் சார்பில் அல்லது இந்திய அரசாங்கத்தின் சார்பில் சரணடையும்படி கூறும் அதிகாரம் எனக்கு இல்லை.

இந்த செய்தியின் பின்னணியில் யார் உள்ளார்கள் என்று எனக்கு தெரியாது. எனக்கு சசிதரன் யார் என்றே தெரியாது.

ஏனென்றால், அவர் எல்.ரீ.ரீ.ஈ.யின் முன்னணி தலைவர்களில் ஒருவர் அல்ல. செய்ம்மதி தொலைபேசி மூலம் அவருக்கு ஆலோசனை கூறியதாகச் சொல்வது முற்றுமுழுதிலும் தவறானது.

யுத்தம் அதி உச்சகட்டத்தில் இருக்கும் போது, ஒருவரை இலங்கை இராணுவத்திடம் சரணடையும்படி யாராவது கூறுவார்களா? என கனிமொழி கேள்வி எழுப்பியுள்ளார். (செ)

## ஹிட்லரின் காவல்துறை...

ஏற்படுத்தியுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது,

நாடாளுமன்ற உறுப்பினர்களில் அரைவாசிக்கும் மேற்பட்டோர் பிரதமருக்கு எதிரான நம்பிக்கையி ல்லாப் பிரேரணை தொடர்பான யோசனையில் கையெழுத்திட்டுள்ளனர். வெஸ்ட்மினிஸ்டர் நாடாளுமன்ற சம்பிரதாய வரலாற்றில் நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பான யோசனை ஒன்றில் பெருமளவு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்டிருப்பது இதுவே முதல் முறையாகும்.

இப்படியான நிலைமை ஏற்பட்டமை குறித்து நான் ஆச்சரியப்படவில்லை. அரசாங்கத்தின் தார்மீக விரோத நடத்தையை நானும் நேரிடியாக அனுபவித்திருக்கின்றேன் என்பதே இதற்கு காரணம்.

பெருந்தெருக்கள் அமைச்சினால் கடனாக பெற்ற 28 பில்லியன் ரூபாய் பணத்தை வீதிகளை நிர்மாணிக்க பயன்படுத்தாது நான் எனது ஹெலிகொப்டர் பயணங்களுக்கு தான சாலைகளுக்கு பயன்படுத்தியதாக அண்மையில் பிரதமர் ஊடக சந்திப் பொன்றில் கூறியிருந்தார்.

எனினும் பிரதமரின் குற்றச்சாட்டை தான் மறுப்பதாகவும் முன்னாள் ஜனாதிபதி தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார். (செ)

## 34...

நபர்கள் 40 பேர் கடந்த வாரம் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட நிலையில் 6 பேருக்கு நீதிமன்றம் பிணை வழங்கியதுடன், 34 சந்தேக நபர்களை 8ஆம் திகதி வரையில் விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பித்தது.

இந்நிலையிலேய சந்தேகநபர்கள் இன்றைய தினம் மன்றில் ஆஜர் செய்யப்படவுள்ளனர். (செ)


**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1543

**வீடு வாடகைக்குத் தேவை**

தனியார் நிறுவனம் ஒன்றிற்கு முகவர்களாகத் தொழிற்படுவதற்கு யாழ்.நகரிலிருந்து 2 KM சுற்று வட்டாரத்துக்குள் சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்பு:-0775385494

(சி-1207)



**Digital இண்டர்நஷனல் எக்ஸ்பிரஸ்**
**பொதி விநியோக சேவை**

விஷேட கட்டண சலுகைகள்



- 200க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான உலகின் முதற்தர கூரியர் நிறுவனம் மூலம் தபால் மற்றும் பொதி விநியோக சேவையினை தரமாகவும் பாதுகாப்பாகவும் அனுப்பிட நாடுங்கள்
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- மிகச்சிறந்த வாடிக்கையாளர் சேவை
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்

WESTERN UNION
MONEY TRANSFER

மிக விரைவான பணப்பரிமாற்ற சேவையினை நம்பிக்கையாகவும் பாதுகாப்பாகவும் பெற்றுக்கொள்ள முடியும்

62/16 ஸ்ரான்லி வீதி
(சம்பத்வங்கி முன்பாக)
யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்கு -
021 753 8330, 0777 151 101

(C-1202)



**சரவணா ரெக்ஸ்**

st Saravana Tex

பட்டு சாறிகள், கொட்டன் சாறிகள், சில்க் சாறிகள், பான்சி சாறிகள், ரெடிமேற் பஞ்சாபிகள், பஞ்சாபித் துணிகள், ரொப்புகள் என்பன புத்தம் புதிய தெரிவில்

**மலிவு விற்பனையில்...**



இல.526, 529, பருத்தித்துறை வீதி, நல்லூர்
(பின் வீதி), (சிவன் கோவிலுக்கு அருகாமை). யாழ்ப்பாணம்.
(எமக்கு வேறு எங்கும் கிளைகள் இல்லை)

(சி-1204)



**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**

BCHS

சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய
நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்

**Spoken English with Grammar** 1 1/2 Months
(ஆங்கிலத்தில் பேசுவதற்கு 100% உத்தரவாதம்) (Quick Learning course)

**Diploma in English** 2 1/2 Months

- ✳ எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
- ✳ O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
- ✳ Excellent Teachers' Panel & Individual Attention

Batch 1 : 09 -06-2015
Batch 2 : 11-06-2015
Batch 3 : 13-06-2015
Batch 4 : 15-06-2015

No.15 1/2, Siriampiyady Lane,
(Above Sathosa SM)
Jaffna. Tel :021-2224550
0777585913, 0777222422, 071429935

கிழமை நாளுக்கான மாலை வகுப்புகள் 2.30 - 5.00 மணி வரை புதிதாக ஆரம்பிக்கப்பட உள்ளது

அலுவலகர்களுக்கு/உத்தியோத்தர்களுக்கு சனி, ஞாயிறு வகுப்புகள் 30/05/2015 2.30PM TO 4.30PM வரை ஆரம்பமாகின்றது. பதிவுகளுக்கு அழையுங்கள்.

(சி-1206)



வடக்கில் பிரபல்யமான
**கையடக்கத் தொலைபேசி திருத்தும் பாடநெறி**
**Mobile Phone Repairing Course**

"மீண்டும் வவுனியா மண்ணில்"

மாதம் 50,000 முதல் 100,000 இற்கு மேல் வருமானம் பெறும் நிரந்தர உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு

June 13ஆம் திகதி காலை 9.00 மணி முதல் 13, 14, 15, 16 ஆகிய நான்கு தினங்களில்

- ஆரம்பம் முதல் சரளமாக கற்பிக்கப்படும்.
- சகல கேள்விகளுக்கும் தெளிவான விளக்கம்.
- தனிப்பட்ட கவனிப்பு.
- 1000 இற்கு மேற்பட்ட கையடக்கத் தொலைபேசி திருத்தும் இரகசியங்கள் .
- சுயமாக வேலை செய்யும் அளவுக்கு பயிற்சியளிக்கப்படும்.

இலவசமாக:
- இரகசியங்கள் அடங்கிய (CD) வழங்கப்படும்.
- கையேடு

குறைந்த முதலீட்டில் உடனடியாக தொழில் தொடங்குவதற்குத் தேவையான அனைத்து தகவல்களும்

Special Trainer
**Ganesh Sir**

பாடநெறிக் கட்டணம் 8500/- | பதிவுக் கட்டணம் 2000/-

வயதெல்லை இல்லை. ஆரம்ப அறிவு, ஆங்கிலம் தேவையற்றது

மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள் என்பதால் முன்கூட்டியே பதிவு செய்யவும்.

Asian Resource Center
108/15 Nelukkulam, Vavuniya
077 6131358

(சி-1200)



**2019இல் நீங்களும் பொறியியலாளர்(ENGINEER) ஆகுங்கள்**

**Sona College Of Technology- Anna University Tamilnadu India**

- B.E Civil Engineering.
- B.E Mechanical Engineering.
- B.E Electronics & Communication Engineering.
- B.E Electrical & Electronics Engineering.
- B.E Computer Science & Engineering.
- B.Tech Infomation Technology.
- B.Tech Fashion Technology.

ADMISSIONS STARTED

COURSES START JULY 15TH

மிகக்குறைந்த கல்விக்கட்டணம், இலங்கையிலும் சர்வதேசமெங்கும் 100% அங்கீகாரம் மற்றும் தொழில் உத்தரவாதம்.

100 க்கும் மேற்பட்ட இலங்கை மாணவர்கள் கல்வி கற்று அமெரிக்கா, கனடா,லண்டன் ஐரோப்பிய நாடுகள்,சிங்கபூர் மற்றும் இலங்கையில் நிறைந்த ஊதியத்துடன் தொழில் புரிந்துகொண்டிருக்கின்றனர்.

எமது கல்லூரியில் பட்டப்படிப்பினை மேற்கொள்ளும் மாணவர்களுக்கு தகுதியின் அடிப்படையில் வெளிநாடுகளில் மேற்படிப்பு மற்றும் வேலைவாய்ப்புகளுக்கு எமது கல்லூரி நிர்வாகம் அனுசரணை வழங்குகின்றது.

A/L MATHS சித்தியடைந்த மாணவர்களுக்கு இதுவே நிச்சயமாக மிகச்சிறந்த ஒரு தெரிவாக அமையமுடியும்.

அணுகுங்கள் V4 EDUCATIONAL CONSULTANCY • NO 49 A சப்பல் லேன், யாழ்ப்பாணம் • 0774836084 / 0212055043

(சி-1205)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.06.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.